Vol. 7 No. 38 18th October 1936 Price 2 As. Regd. No. 2514

சுதேசமித்திரன்

வாரப்பதிப்பு

THE SWADESAMITRAN ILLUSTRATED WEEKLY

கொடைக்கானலில்
ஒரு அழகிய தோற்றம்.

வருட சந்தா ரூபா 6. சிலோனுக்குத் தனிப்பிரதி 14 சதம். மலாய் நாடுகளுக்கு தனிப்பிரதி 15 காசு. வெளிநாடுகளுக்கு ரூ. 10.

ஆரோக்கியத்தின்
முக்கிய ஆதாரம்

வுட்வர்ட்ஸ்
கிரைப்வாடர்

இது குழந்தைகளை
நன்கு பாதுகாக்கின்றது

WOODWARD'S GRIPE WATER

W. WOODWARD LTD., LONDON, ENGLAND

திருப்பதி ஸ்ரீனிவாஸப் பெருமாள்—சமீபத்தில் நடந்த பிரும்மோத்ஸவத்தின்போது எடுத்த படம்.

நமது சிறுகதை

நடிப்பின் வெற்றி

(ஸ்ரீமான் பாஸ்கர மஹாதேவன் எழுதியது.)

வழக்கத்திற்கு விரோதமாகக் கோவிந்தராஜன் தன் ஆபீஸிலிருந்து வெளியே எங்கும் செல்லாமல் நேராகத் தன் வீட்டிற்கு வந்தான். அவனைக் கண்டதும் அவன் மனைவி கோமளத்தின் முகம் சந்தோஷத்தால் மலர்ந்தது. தான் அன்றைய நாடகத்திற்குப் போகவேண்டுமென்று சொன்னதை ஞாபகத்தில் வைத்துக் கொண்டுதான் அவ்வளவு சீக்கிரமாகத் தன் கணவன் வீட்டிற்கு வந்துவிட்டானென நினைத்து, உள்ளே போய் தன்னை நன்றாகச் சிங்காரித்துக் கொண்டாள். பிறகு அங்கிருந்த நிலைக்கண்ணாடியில் பார்த்துத் தன் அழகைப்பற்றித் தானே வியந்துகொண்டாள். இயற்கையாகவே விளங்கும் எழிலுடன் செயற்கையழகும் சேர்ந்தால் கேட்கவும் வேண்டுமோ! உடனே மெதுவாகக் கோவிந்தராஜனிருந்த அறைக்குள் பிரவேசித்தாள். கோவிந்தராஜன் ஏதோ சிந்தனையுடனிருந்ததால், அவள் வந்ததைக் கவனிக்கவில்லை. உடனே கோமளம், கோவிந்தராஜனை அணுகி, "நாதா, என்ன ஆழ்ந்த சிந்தனையிலிருக்கிறீர்கள்? நாழிகையாகிவிட்டதே? எழுந்திருங்கள். சாப்பிட்டுவிட்டு நாடகத்திற்குப்போக வேண்டாமா?" என்று முகத்தில் புன்னகை ததும்பக் கேட்டாள். அதற்குக் கோவிந்தராஜன், "கோமளம், இன்று ஒரு அவசர காரியமாக என் நண்பனொருவனைப் பார்க்கப் போக வேண்டியிருப்பதால், நான் வருவதற்கிடமில்லை. நீ மாத்திரம் போய்வா; உன்னை அழைத்துக்கொண்டுபோய் நாடகம் முடிந்தவுடன் திரும்பக் கூட்டிக்கொண்டு வரும்படியாக நம் டிரைவரிடம் சொல்லி ஏற்பாடு செய்திருக்கிறேன். ஜாக்கிரதையாகப் போய்வா" என்று சொல்லிவிட்டு எழுந்து வெளியே போய்விட்டான்.

தான் நினைத்ததற்கு முற்றிலும் மாறாக நடக்குமென்று அவள் எதிர்பார்த்தவளல்லள். என்ன செய்வது' எப்படியாவது தன் கணவனிடம் சொல்லிக் கூட வரும்படிச் சொல்லலாமென்றாலோ, அவன் கொஞ்சம்கூடத் தாமதியாமல் எழுந்து வெளியே போய் விட்டான். ஆகவே, மனது நொந்தவளாய் கொட்டகைக்குப் போய் முதல் வகுப்பு டிக்கெட் வாங்கிக்கொண்டு உள்ளே போய் உட்கார்ந்தாள்.

கொட்டகையில் தாங்க முடியாத கூட்டம். எள் போட்டால் கீழே விழாது. உட்கார இடமின்றி நின்று கொண்டிருந்தவர்களும், கதவைப்பிடித்துத் தொங்கிக் கொண்டிருந்தவர்களும் அநேகர் அன்று, "சதி லீலாவதி" நாடகம். கொட்டகையில் ஜனநெருக்கம் அதிகமாகிவிட்டபடியால், குறிப்பிட்ட நேரத்திற்கு முன்பாகவே நாடகம் ஆரம்பிக்கப்பட்டுவிட்டது. நாடகம் ஆரம்பித்தவுடன் கூச்சல் அடங்கி எங்கும் அமைதி நிலவியது. அந்தச் சமயம் அங்கே ஓர் ஊசி விழுந்தால் கூட சத்தம் கேட்டிருக்கும். அன்றைய நாடகம் எல்லா ஜனங்களும் ரசிக்கத் தகுந்த முறையில் அவ்வளவு நன்றாக இருந்தது. அதற்குக் காரணம் அன்று 'லீலாவதி'யாக நடித்தவர் அங்கிருந்த ஜனங்களின் உள்ளத்தைக் காந்தம்போல் கவர்ந்து விட்டார்.

கதாநாயகி பாத்திரத்திற்கேற்ற அழகும், உடலமைப்பும், முகவெட்டும், சாரீரமும், நடிப்பும் அங்கிருந்த ஜனங்களை உயிருள்ள பதுமைகளாகச் செய்துவிட்டது. அங்கிருந்தவர்கள் "லீலாவதி"யாக நடித்த நடிகையின் நடிப்பில் மூழ்கி, அவளுடைய மாய வலையில் விழுந்து விட்டார்களோ என்று ஐயுறும்படியாகவிருந்தது. அங்கு வந்திருந்த ஸ்திரீகள் தங்கள் பக்கத்திலுள்ள காதலர்களின் நிலைமையைக் கடைக்கண்ணால் கவனித்துக் கொண்டிருந்தார்கள். கோமளத்துக்குத் தன் காதலன் கோவிந்தராஜன் வராதது ஒருவிதத்தில் சந்தோஷந்தான். அவன் வந்திருந்தால் 'லீலாவதி'யின் அழகில் ஈடுபட்டு விடுவானோ என்றுகூட அவள் நினைத்தாள். அன்றைய நாடகம் ஜில்லா போர்டு தலைவர் ஸ்ரீமான் தர்மலிங்க ரெட்டியார் தலைமையில் நடந்தது. இடைநேரத்தில் ஸ்ரீமான் ரெட்டியார் அன்றைய நாடகத்தைப் பாராட்டி சில வார்த்தைகள் சொல்லிவிட்டு, அன்றைய நாடகத்தில் மிகவும் திறமையாக நடித்த 'லீலாவதி' பாத்திரதாரிக்குக் கம்பெனியார் சார்பாக ஒரு தங்கப் பதக்கத்தைப் பரிச

(39-ம் பக்கம் பார்க்க)

அற்புத சுவாஸ நிவாரணி



இவ்வற்புத பெப்ஸ் மாத்திரைகள் உங்கள் மார்புப் பிரதேசத்தினுள்ளும், தொண்டையிலும் பிரசித்திபெற்ற பைன் விருக்ஷக் காற்றைப் புகுத்துகிறது. வாயில் போட்டுக் கரைகையில் பெப்ஸ கிருமிநாச ஆவியை வெளிப்படுத்துகிறது; இது சுவாசாசயத்தினுள் செல்கிறது. இங்ஙனமாக பெப்ஸ் சுவாசாசயத்தைச் சுத்தப்படுத்துகிறது. இருமல், ஜலதோஷம், மார்பு நோய் முதலியவற்றை அகற்றுகிறது. பெப்ஸ் தொண்டைக்குச் சமனமூட்டி, கபத்தை அறுத்து, மார்புப் பிரதேசத்துக்கு வலுவூட்டுகிறது.

ஒவ்வொரு பெப்ஸ் மாத்திரையும் வெள்ளிக்கவசம் பூண்டது. எல்லா மருந்து வியாபாரிகளிடமும் சீல் வைத்த புட்டிகளில் புட்டி 1க்கு ரூ. 1 வீதம் கிடைக்கும்.

பெப்ஸ் கிருமிநாச சுவாச நிவாரண மாத்திரைகளை உட்கொள்க.

பெப்ச் PEPS

கெற்ப சஞ்சீவி எண்ணெ.

ஸ்திரீகளுக்கு மாதாந்தரத்தில் வரும் பொறுக்கமுடியாத வயிற்று வலியை அந்த க்ஷணமே நிறுத்தும். சூதக க்ஷயம், சூதக சூலை, சூதக ஜுரம், சூதக வாய்வு, சூதக கட்டு, சூதகச் சிக்கல், சூதகத் திரக்ஷி, சூதகக் கட்டினால் உண்டாகும் தலைவலி, உடம்புவலி, கைகால் பொருத்துகள் உளைவு, மேலெல்லாம் குத்து, குடைச்சல், உடம்பு ஸ்தூலித்துப் போதல், வயிர் பெருத்தல், காந்தல், எழுந்திருக்க முடியாமை, திகைப்பு, மூச்சு, மயக்கம், பசியின்மை, சாப்பாட்டில் வெறுப்பு, ஒருசெம்பு ஜலங்கூட தூக்கமுடியாத பலஹீனம், சூதக ஜன்னி முதலிய வியாதிகளையெல்லாம் தீர்த்து கெற்பப்பை சுத்திகரிக்கப்பட்டு, கெற்ப உற்பத்தியை உண்டுபண்ணும். 6-வித மலடு தீரும். கெற்பம் தரிக்கவிடாது பண்ணும் கிருமிகளைக் கூட்டுடன் வெளியிலகற்றிவிடும். திடகாத்திரமும், பூரண ஆயுளுமுள்ள குழந்தை தரிக்கும்.

1 நபருக்கு 3 புட்டி வேண்டும்.

1 புட்டி ரூ. 2. 3-புட்டி ரூ. 5. செலவு வேறு

குணம் இல்லாவிடில் ரூபா 5 வாபீஸ்

பழனி வைத்திய ஆசிரியர்

ஆர். எம். கே. வேலுசாமி பிள்ளை,

சித்த வைத்திய சாலை,

146, புரசவாக்கம் ஹைரோட், சென்னை

தலைமை ஆபீஸ், பழனி

'எதிர்கால பலன்'

பராதன சாஸ்திர ஆராய்ச்சியின் பேரில் அனுபவம் பெற்ற இருவர் கலந்து தெளிவுபடக் கூறப்படுவதாம்.

பண்டிட் M. R. K மூர்த்தி, ஜோதிஷ கலா வல்லபர்

பண்டிட் E. S K. சுவாமி. ஜோதிஷ தத்வ க்கியானி

ஒரு ஜாதகம் குறிக்க ரூ. 1, ஜாதகம் (அல்லது) பிறந்த நேரத்தின் பேரில் கேள்வி 1-க்கு ரூ. 1, ஒரு வருஷ மாதவாரி பலன் எழுத ரூ. 2, ஆயுள் வரை பலன் எழுத ரூ. 10 விவாகப் பொருத்தம் பார்க்க ரூ. 1.

"ஜோதிட கழகம்" 14, பிராட்வே, மதராஸ்.

ஜோதிர் மண்டலம்

தாது வருஷம்—ஐப்பசி மாதம்

(ஸ்ரீமான் பி. ஸ்ரீநிவாஸ வ்ரதன் எழுதியது.)

ஜோதிடத்தில் பிரியமுள்ளவர்கள் பொருட்டு, இம் மாதத்திய இராசி சக்கிரத்தைக் கீழே கொடுத்துள்ளோம்.

தாது வருஷம் ஐப்பசிமீ 12-ம் தேதி-சூரிய உதயம்.

<table>
<tr><td></td><td></td><td></td><td>கேது</td></tr>
<tr><td>சனி</td><td colspan="2" rowspan="2">1உ—துலா—ரவி (19-46)
2உ—விருச்சிக—சுக்கிரன.
13உ—தனுர்—குரு.
14உ—துலா—புதன்.
19உகன்னி—குஜன்.
27உ—தனுசு—சுக்கிரன்.</td><td></td></tr>
<tr><td></td><td>குஜன்</td></tr>
<tr><td>ராகு</td><td>குரு</td><td>சுக்கிரன்</td><td>சூரியன்
புதன்</td></tr>
</table>

சென்னையில் இராக்காலங்களில் இம்மாதம் நம் பார்வைக்குத் தென்படும் நக்ஷத்திரக் கூட்டங்களைக் கீழேயிருக்கும் படம் காட்டுகிறது. படத்திலுள்ளவாறே இம்மாதம் முதல் தேதி (16-10-36) இரவு 10-32 மணிக்கும், 15-ம்-தேதி (30-10-36)9-36 மணிக்கும், 30-ம்தேதி (14-11-36) 8-36 மணிக்கும் நக்ஷத்திரக் கூட்டங்கள் நமக்குப் புலப்படும். இப்படத்தையே மற்ற ஊர்களுக்கும் உபயோகப்படுத்தலாம். ஆனால் முக்கியமாகக் கவனிக்க வேண்டியது என்னவென்றால் இப்படத்தில் காட்டியுள்ள வட்டமே நம்மைச் சுற்றியுள்ள அடிவானம். அவ்வட்டத்தின் மத்தி, நம் தலைக்கு நேரேயுள்ள ஆகாயத்தின் உச்சி. சென்னைக்கு வடபுறம் இருக்கும் ஊர்களுக்கு இக்கூட்டங்கள் சிறிது தென்புறமிறங்கியும், தெற்கேயுள்ள ஊர்களுக்குச் சிறிது வடபுற மேறியும் விளங்கும் ஆனால், தென்படும் கூட்டங்களின் பொது அமைப்பு, படத்தில் காட்டியுள்ளவாறு இருக்குமேயன்றி வித்தியாசப்பட்டிராது. குறிப்பிட்டுள்ள நேரங்கள் தவிர மற்றைய நேரங்களிலும் படத்தை உபயோகப்படுத்தலாம். ஒவ்வொரு நக்ஷத்திரமும், மூன் நாள் எப்பொழுது உதயமாகிறதோ அந்நேரத்தைவிட சுமார் நான்கு நிமிஷம் முன்னதாகவே உதயமாகி விடுகிறது. அவ்வாறே ஒவ்வொரு நாளும்நான்கு நிமிஷம் வீதம் முன்னதாகவே நக்ஷத்திரங்கள் உதயமாகி அஸ்தமித்து விடுகின்றன. ஆதலால் இப்படத்தை இன்று 10–32 மணிக்குச் சரியாயிருப்பதென்று வைத்துக்கொண்டால், நாளைக்குப் படத்திலுள்ளவாறே 10–28 மணிக்கு ஆகாயத்தில் நக்ஷத்திரங்கள் காணப்படும். ஆகையால், இம் மாதத்தில் எந்த நாளுக்கும் எந்த மணிக்கும் படத்திலுள்ளபடியே ஆகாயத்தில் நக்ஷத்திரக் கூட்டங்கள் தோன்றுமென்பதைச் சுலபமாகக் கணக்கிட்டுக்கொள்ளலாம்.

படத்தை உபயோகிக்கும் விதம்

படத்திலுள்ள வட்டத்தைச் சுற்றித் திக்குகளின் பெயர்கள் எழுதப்பட்டிருக்கின்றன. எத்திசையை நோக்கி நிற்கிறேமோ, அத்திசையைப் படத்தின் அடிப்பாகமாக வரும்படிப் படத்தைத் திருப்பி வைத்துக்கொள்ள வேண்டும். அப்பொழுது நம் எதிரில் அடிவான முதல் உச்சி வரை தெரியும் நக்ஷத்திரக் கூட்டங்கள், படத்தில் அடிப்பாக முதல் நடு வரையில் தெரியும். இக்கூட்டங்களின் வல, இடப்புறங்களிலுள்ள நக்ஷத்திரங்களும் படத்திலும் முறையே வல, இடப்புறங்களில் காணப்படும்.

இம்மாதம் குறித்த நேரங்களில் ஆகாயகங்கை வடவானத்தில் வில்போல் வளைந்த தோற்றத்துடன் கிழக்கு முதல் மேற்குவரை வியாபித்திருக்கிறது. அது ரிஷபம், ஆரிகே, பர்ஸியூஸ், கஸியோபியா, ஆண்டிரமெடா, சிபியஸ், அம்சம், இராஜாளிக் கூட்டங்களினிடையே ஊடுருவிச் செல்கின்றது. வட மேற்கிலுள்ள பாகம் மிகவும் குறுகியும், இருபிளவாகப்பிரிவுபட்டும் இருந்தபோதிலும் வட கிழக்குப் பாகத்தைவிட மிகப் பிரகாசமாகத் தோன்றுகிறது.

நக்ஷத்திரக் கூட்டங்கள்

இராசிக் கூட்டங்களில், தனுசு, மகரம், கும்பம், மீனம், மேஷம், ரிஷபம் முதலியவை வரிசைக் கிரமமாக மேற்கு முதல் கிழக்குவரை புலப்படுகின்றன. மேற்கு வானிலுள்ள கூட்டங்களில் மிகப் பிரகாசமான நக்ஷத்திரங்கள் அதிகமில்லை. கிழக்கே ரிஷபக் கூட்டத்திலுள்ள ரோஹிணி நக்ஷத்திரம் ஜ்வலிக்கிறது. ரிஷபத்தின் கொம்பு முனையைக் குறிக்கும் இரு நக்ஷத்திரங்களும் முதல்தர ஒளியுள்ளவை. இக் கூட்டத்திலுள்ள கிருத்திகாக் கூட்டம் இம்மாதமும், இன்னும் வரும் மழைக்கால மாதங்களிலும் கிழக்கே சூரியாஸ்தமனத்திற்குப் பிறகு அழகுடன் விளங்கும்.

இதரக் கூட்டங்களில் துருவ மண்டலமும் துருவனும் அழகுடன் வடவானில் விளங்குகின்றன. துருவனைக்காக்கும் அசுரக் கூட்டம் அநேகமாக வடமேற்கே மறைந்துவிட்டது. கஸியோபியா, W தோற்றத்துடன் நேர் வடவானத்தை அடைகிறது. அம்சமும், லைரா கூட்டமும் வடமேற்கே பிரகாசிக்கின்றன. கிரேக்கர் புராணமாகிய ஆண்டிரமெடா சரித்திரத்தை நக்ஷத்திரப் படங்களாக இம்மாதம் காணலாம். ஆண்டிரமெடாவும் அவளைக் காப்பாற்றிய பர்ஸியூஸும் வடக்கேயும் வடகிழக்கேயும் அமைந்திருக்கின்றனர். அவிட்டக் கூட்டமும் இராஜாளியும் மேற்கே அடிவானத்தை நெருங்குகின்றன. கிழக்கே ஆகாயத்தில் நக்ஷத்திரக் கூட்டங்களில் உன்னதப் பதவியை அடைந்துள்ள ஓரியன்கூட்டம் உதயமாகிறது. இக்கூட்டத்தை எல்லாக் காலத்திலும் எல்லா த்தேசத்தவர்களும் கண்டு களித்திருக்கின்றனர். ஓரியனின் கால்பாக முதல் தென் அடிவானவரை, எரிடானஸ் எனும் ஆகாய நதி ஓடுகிறது. பினிக்ஸ், க்ரூஸ், இண்டஸ், பாவோ முதலிய சிறு கூட்டங்கள் தெற்கே பிரகாசிக்கின்றன.

ஐப்பசி மீ கிரஹங்களின் நிலை

புதன்:—இம்மாதம் 22-ம் தேதி வரை (6-11-36) புதன் கன்னிக் கூட்டத்திலேயேயிரு



ந்து, பிறகு துலாக் கூட்டத்திற்கு மாறுகிறது. இக்கிரஹம் இம்மாதமெல்லாம் சூரியனுக்கு முன்பே உதயமாகிய போதிலும், அருணோதய ஒளியில் நம் பார்வைக்குத் தென்படாது.

சுக்கிரன்:—இக்கிரஹமே இம்மாதத்தின் முக்கிய காக்ஷி. மேற்கே சூரியாஸ்தமனத்திற்குப் பிறகு, மற்ற நக்ஷத்திரங்கள் நம் பார்வைக்குப் புலப்படுமுன்னமேயே தோன்றி, இரவு சுமார் 8-மணி வரை மேல்வானத்தில் தன் அதிப்பிரகாசமான குளிர்ந்த ஒளியால் நம் பார்வையைக் கவர்ந்து பிரமிக்கச் செய்கிறது. சுக்கிரனின் பிரகாசத்திற்கு முக்கிய காரணம் அதைச் சூழ்ந்துள்ள மேகங்களே. சுக்கிரனின் மேல் தோற்றம் எப்படியிருக்குமோ என்பதைக்கூட, அறியவிடாதபடி இம்மேகங்கள் சுக்கிரனைச் சூழ்ந்துவிட்டிருக்கின்றன. சூரியனின் வெளிச்சத்தை இம்மேகங்கள் பிரதிபிம்பிப்பதால் சுக்கிரன் ஒளியுடன் தோன்றுகிறது. எக்காலத்தில் இம்மேகங்கள் சிறிது விலகுமோ, என்றுதான் சுக்கிரனின் உண்மைத் தோற்றத்தையும் அதன் மற்ற விவரங்களையும் அறிவோமோ என வான சாஸ்திரிகள் இன்னும் ஏங்கி, ஆவலுடன் கவனித்து வருகின்றனர். இக்கிரஹம் மாத முதலில் தனுசுக்கூட்டத்திலிருந்து 9-ந் தேதியன்று (24-10-36) விருச்சிகக் கூட்டத்திற்குக் கடைசி வாரத்தில் தனுசுக்கும் மாறுகிறது. விருச்சிக — தனுசுக் கூட்டத்தின் பிரகாச நக்ஷத்திரங்களுக்கிடையே சுக்கிரனின் தோற்றம் பார்க்கத்தக்க காக்ஷியே. இக்கிரஹம் இம்மாதம் குருவை அணுகுகிறது. குருவும் சுக்கிரனும் 29-ந் தேதியன்று (13-11-36) ஒரே சமயத்தில், வெள்ளி சிறிது குருவுக்குத் தெற்கே தோன்றும். அப்பொழுது இக் கிரஹங்களின் பிரகாசங்களை ஒத்திட்டுப் பார்க்கலாம். சுக்கிரன் குருவைவிடச் சுமார் 8 மடங்கு அதிக ஒளி வீசும்.

குஜன்:—இம்மாத முதலில் சிம்மக் கூட்டத்திலும் 18-ந் தேதியன்று (2-11-36) கன்னிக்கும் மாறுகிறது. இது மாத முதலில் இரவு 3-10 மணிக்கும் மாதக்கடைசியில் 2-32 மணிக்கும் உதயமாகிறபடியால், விடியற்காலையில் கிழக்கே நாம் இதைக் காணலாம்.

குரு:—இம்மாதமெல்லாம் குரு தனுசுக் கூட்டத்தை நோக்கியே ஊர்கிறது. அடுத்த மாதம் 8-ந் தேதியன்று தனுசையும் அடைகிறது.

சனி:—(வக்ரீ) இம்மாதமெல்லாம் கும்பத்திலிருக்கிறது. இதை சூர்யாஸ்தமனத்தின் பொழுது உச்சியில் காணலாம். யூரானஸ், நெப்டியூன் முறையே மேஷத்திலும், சிம்மத்திலும் அமைந்திருக்கின்றன.

சந்திரன்:—ஆகாயத்திலுலவி வருகையில், கீழ்க்கண்ட தேதிகளில் கிரஹங்களினருகே அமைந்திருக்கும்:—

அக்டோபர்மீ
18உ சுக்கிரனருகில்
20உ குருவினருகில்
27உ சனியருகில்
நவம்பர்மீ
10உ குஜனருகில்

சந்திரன் பிறைத்தோற்றத்துடன் சுக்கிரனையும், குருவையும் நெருங்கிக் கடந்து செல்வது பார்க்கத்தகுந்த காக்ஷியே. சனியை அணுகும்பொழுது ஏறக்குறைய முக்கால் சந்திரனின் பாகம் ஒளிபெற்று விளங்கும்.

வலுவுக்கான பாராட்டு

உங்களுக்கு கிடைக்கும்-ஸனடோஜனல்

"வலுவூட்டுவதில் ஸனடோஜனுக்கு இணையான தயாரிப்பை நான் கண்டதில்லை"

என்கிறர் புகழ் வாய்ந்த ஓர் ஐரோப்பிய வைத்தியர்.

நீங்கள் விரும்புகிற அவ்வளவுக்கு உங்கள் தேகம் வலுப்பெற்றிருக்கிறதா—நீங்கள் பூரண ஆரோக்கியத்துடனும், ஜீவசக்தி நிரம்பியும் இருக்கிறீர்களா? இல்லையேல் **ஸனடோஜன்** உங்களுக்குச் சிறந்த வலுவூட்டி, உங்கள் தேகம் பூராவுக்கும் புத்துணர்வளித்து, உங்களுக்கு அழியாத பலத்தையும், ஜீவ சக்தியையும் கொடுக்கும்.

பலஹீனத்தையும், ஆண்மைக் குறைவையும் வெல்ல விரும்பும் உலக மக்களில் பலர் **ஸனடோஜனை** உட்கொண்டு, வாழ்வின் பூரா இன்பங்களையும் அனுபவிக்கின்றனர்.

விரைவாகவும், நிச்சயமாகவும் ஸனடோஜன் தசைகளுக்கும் இரத்தத்திற்கும், நரம்புகளுக்கும் வலுவூட்டுகிறது.

வலுவூட்டும் இப்பிரசித்தி பெற்ற ஆகாரத்தைச் சொற்ப காலம் உட்கொண்டால் நீங்கள் ஜீவ சக்தி ததும்பி நிற்பீர்கள். இன்றே ஒரு புட்டி **ஸனடோஜன்** வாங்குங்கள். எல்லா மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

SANATOGEN

ஸனடோஜன் கை படாதது; மிருகக் கொழுப்பற்றது.

உண்மையான டானிக் உணவு

எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்

ஒரு லோபி தன் நண்பனுக்கு ஏதாவது பரிசாக அனுப்பவேண்டுமென்று ஒரு கண்ணாடிக் கடைக்குச் சென்றான். அங்கு சில வாரிசல் சாமான்களை வாங்கித் தன் நண்பனின் விலாஸத்தைக் கொடுத்து அனுப்பும்படி சொன்னான்.

சில தினங்கள் கழித்து லோபிக்கு அவனது சிநேகிதனிடமிருந்து பின்கண்ட கடிதம் வந்தது:—நீ கடைக்காரர் மூலம் அனுப்பிய பரிசு கிடைத்தது. ஆனால் வழியில் சாமான்கள் உடைந்திருக்கக் காரணமில்லை. கடைக்காரர் உடைந்துபோன சாமான்கள் ஒவ்வொன்றையும் தனித்தனியாகக் கட்டி அனுப்பியிருந்தனர்.

———

நண்பன்:—சித்திரப்படக் காட்சிக்குச் சென்றிருந்தேன். அதில் உன் படம் ஒன்றுதான் பார்க்கும்படியாகவிருந்தது.

சித்திரமெழுதுபவன்:—ரொம்ப சந்தோஷம்.

நண்பன்:— மற்றப் படங்களைச் சுற்றி ஜனங்கள் கூட்டமாக நின்றுகொண்டிருந்தனர்.

———

மாஜிஸ்திரேட்:—இதுவரையில் நானே உன்னைச் சுமார் 15-தடவைகள் தண்டித்திருக்கிறேன். இந்தத் திருட்டுத் தொழிலை விடக்கூடாதா?—

திருடன்:—அது தானே என் தொழில்.

———

மாஜிஸ்திரேட்:—இவன் குடித்திருந்தான் என்று எப்படித் தெரிந்தது?

போலீஸ்காரன்:—நேற்றிரவு ஒரு மினுமினுப் பூச்சியை சுருட்டுக்கு நெருப்புக் கேட்டுக்கொண்டிருந்தான்.

———

கணவன்:—புதிய சமையல்காரி நன்றாகச் சமைக்கிறாள்.

மனைவி:—ஆமாம். நான் தான் கற்றுக்கொடுத்தேன்.

கணவன்:— அப்படியிருந்தும் நன்றாகச் சமைக்கிறாள்.

———

கந்தன் கிழிந்த சொக்காயைப் போட்டுக்கொண்டு ஆபிஸில் நுழைந்தான். மானேஜர் இதைப் பார்த்துவிட்டு "என் அதைத் தைத்துப் போட்டுக் கொண்டு வரக்கூடாது?" என்று கேட்டார்.

[illegible] —தைத்துப் போட்டுக்கொண்டு வந்தால் ஏழை என்று கூறுவார்கள். அப்படியே வந்தால் ஏதோ தவறி நடந்துவிட்டதென்று சொல்லி விடுவார்கள்.

———

வேலைக்காரன்:—எனக்கு வேலை ஏதாவது கொடுக்கமுடியுமா?

மேஸ்திரி:—இன்று வர வேண்டிய ஒருவன் வரவில்லை. அவன் நாளைக்கு வராவிட்டால் அவனுக்குப் பதிலாக உன்னை வேலைக்கு வைத்துக் கொள்ளுகிறேன்.

———

கணவன்:—இன்று நான் என்னை இன்ஷ்யூர் செய்து கொண்டேன்.

மனைவி:—எப்பொழுதும் உங்களைப்பற்றித்தானே ஞாபகம்.

———

'சிறைச்சாலை அதிகாரி சிறையைச் சுற்றிப் பார்த்து வருகையில் அவரது கெடியாரம் காணமற் போய்விட்டது.'

"சிறையில் யார் - யாரை அனுமதிக்கலாம் என்பதில் சிறைச்சாலை அதிகாரிகள் இன்னும் எச்சரிக்கையாகவிருக்கவேண்டும்."

———

"இலவச சாம்பிள் கொடுத்து வியாபாரத்தை விருத்தி செய்வது மிகவும் நல்ல முறையாம்"

"மோட்டார் விற்பனை செய்கிறவர்கள் இதை அனுஷ்டிக்கவில்லையே" என்று ஒரு தனவந்தர் கவலைப்படுகிறார்.

———

பள்ளிக்கூடத்திற்குச் சென்ற சாம்பு காலணாவைத் தொலைத்துவிட்டதாகச் சொல்லிக்கொண்டு அழுதுகொண்டே வந்தான்.

தாய்:—மூன்று நாட்களாகத் தொலைத்து விடுகிறாயே?

சாம்பு:—என்றைக்காவது எனக்கு அதிருஷ்டம் வரும். ஒவ்வொரு நாளுமா சோமு ஜெயிப்பான்.



சிகாகோவிற்கும் டென்வெருக்கும் 1,039 மைல் தூரமிருக்கிறது. இதை 16 மணி நேரத்தில் கடப்பதற்காகக் கட்டப்பட்டுள்ள புதிய டீஸல் எஞ்சின்.

ரூ. 500 இனும்!

திமிர் குஷ்டமும், வெண்குஷ்டமும்,

உலகக் கியாதி வாய்ந்த எனது மருந்துகளை 15 தினங்களுக்கு உபயோகித்தால் எல்லாவிதமான திமிர் குஷ்டமும், வெண்குஷ்டமும் நிரந்தரமாக நிவர்த்தியாகிவிடும். பற்பல டாக்டர்கள், கவிராஜர்கள், ஹக்கீம்களும் கைவிட்டதானல்கூட பரவாயில்லை. எனது அற்புத மருந்துகளை உபயோகியுங்கள். பலனில்லை என நிரூபிப்பவருக்கு ரூ. 500 இனும். 7 நாள் மருந்து ரூ. 2—8; 15 நாள் மருந்து ரூ. 4. தபால் செலவு தனி.

SRI SWAMI & Co,
(34) Panchpota, Bengal.

மியூச்சுவல் அஷ்யூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்.

தலைமை ஆபீஸ் :

187, மவுண்ட் ரோட், மதராஸ்.

———

நவீன, சாஸ்திர பூர்வமான, தாராளத் தன்மை கொண்ட பாலிஸி ஒப்பந்தங்கள் எம்மிடம் கிடைக்கும். எல்லோரையும் திருப்தி செய்விப்பவை குறைந்த பிரீமிய விகிதங்கள்

டி. வி. ராமமூர்த்தி,
செக்ரிடரி.

த்யாகராஜ கீர்த்தனம்.

[காபிரைட்.]

ஸங்கீதவித்வான் காஞ்சி பி. பி. ஸ்ரீனிவாஸய்யங்கார், பி. ஏ. எழுதியது

I

பல்லவி

தெரதீய்யக ராதாநாலோனி—திருப்பதி வேங்கடரமண மத்ஸரமனு (தெர)

அனுபல்லவி

பரம புருஷ தர்மார்த்த மோக்ஷமுல—பாரதோலு சுன்னதிநாலோனி (தெர)

சரணங்கள்

1. மச்சமு யாகலி கொனி காலமுசே—மக்னமைன ரீதியுன்னதி
அச்சமைன தீப ஸந்நிதினிமறு—கட்டபடி சொசி நட்டுன்னதி (தெர)
2. இரவொந்தக புஜியிம்சு ஸமயமுன—ஈகதகுலு ரீதியுன்னதி
ஹரித்யானமு ஸேயுவேள சித்தமு—அந்த்யஜுவாடகு போயி நட்டுன்னதி (தெர)
3. வாகுரமனி தெலியக ம்ருக கணமுலு—வச்சிதகுலு ரீதியுன்னதி
வேகமே நீ மதமுனனுஸரிஞ்சிதி—த்யாகராஜனுத மதமத்ஸரமனு (தெர)

II

திருப்பதி வேங்கடரமண	—திருப்பதியில் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் வேங்கடரமணப் பெருமாளே!
நாலோனி	—என்னுள்ளே யிருக்கும்
மத்ஸரமு அனிதெர	—மாற்சரியம் என்னும் திரையை
தீயகராதா	—போக்கக் கூடாதா?
பரமபுருஷ	—முழுமுதற் கடவுளே!
	(அத்திரையானது)
தர்ம அர்த்த மோக்ஷமுல	—அறம் பொருள் வீடு என்பவைகளை
பார தோலு சுன்னதி	—தூரத்திலே துரத்துகின்றது.
மச்சமு ஆகலி கொனி	—மீனானது பசியின் மிகுதியினால்
காலமுசே மக்னமைன ரீதி உந்நதி	—தூண்டில் முள்ளினால் அழிவுற்றவிதமாக(என் நிலைமை)உள்ளது
அச்சமைன தீப ஸந்நிதினி	—களங்கமின்றிப் பிரகாசிக்கிற தீப வெளிச்சத்தை
மறுகு அட்டபடி சொசினட்டு உன்னதி	—ஒரு மறைவானது இடையிட்டுப் பாவவொட்டாதபடி கெடுத்துவிட்டதுபோல (மாத்ஸரியம் என் ஞானத்தை மூடுவதானது) இருக்கிறது.
இரவொந்தக புஜியிம்சு ஸமயமுன	—நன்றாக உணவை யுட்கொள்ளும் ஸமயத்தில்
ஈகதகலு ரீதி யுன்னதி	—தொண்டையில் ஈ புகுந்ததுபோல (என் மாற்சரியம் செய்யும் தடையானது) இருக்கின்றது.
ஹரித்யானமு ஸேயுவேள	—ஸ்ரீ மஹாவிஷ்ணுவைக் குறித்துத் தியானம் செய்யும் வேளையில்
சித்தமு	—மனமானது
அந்த்யஜுவாடகு போயி நட்டுன்னதி	—புலைச்சேரிக்குப் போனதுபோலிருக்கின்றது.
ம்ருக கணமுலு	—மிருகக் கூட்டங்கள்
வாகுரமனி தெலியக	—வலைகளென்று அறியாமல்
வச்சிதகுலு ரீதியுன்னதி	—வந்து அவற்றில் அகப்பட்டுக்கொள்வதுபோல் (என் மனம் மாற்சரியத்தில் சிக்கிக்கொண்டு) இருக்கிறது.
த்யாகராஜநுத	—த்யாகராஜனால் கொண்டாடப்பட்ட ஸ்ரீநிவாஸப் பெருமாளே!
வேகமே நீமதமுனனு ஸரிஞ்சிதி	—விரைவாக உன் அபிப்பிராயத்தை அனுஸரித்தேன்.
மதமத் ஸரமனுதெர	—மதம், மாற்சரியம் என்னும் திரைகளை,
தீயகராதா	—விலக்கக் கூடாதா?

III

திருப்பதி ஸ்ரீநிவாஸப் பெருமாள் விஷயமான கீர்த்தனங்களில் இது ஒன்று. "வேங்கடேசாநினு," "தரமாநீ" என்பன மற்றவை. இது ஸ்வாமிகள் திருப்பதிக்குச் சென்ற காலத்தில், எம்பெருமானுடைய ஸேவைக்காகக் கோயிலுக்குச் சென்றபோது அங்கு திரையிட்டிருந்ததாகவும், அதுகண்டு மனம் வருந்தித் தம்முடைய துர்ப்பாக்கியமே அப்படியிருந்ததாகப் பாடப்பட்ட கீர்த்தனையாகுமென்று கர்ண பரம்பரையான செய்தி.

(8-ம் பக்கம் பார்க்க)

Broadcast

வெகு நேரம் பாடும் வெகு அருமையாகப் பாடும்

செவிக்கோர் இனிய விருந்து!

நாடகமேடை திலகங்கள்

S. V. சுப்பய்யா பாகவதர், M. S. விஜயாள்

இவர்களின் தர்க்க ரிகார்டுகள்.

எஸ். வி. சுப்பய்யா பாகவதர் | எம். எஸ். விஜயாள்

&

B. T. 2333

ஞானசௌந்தரி—பிலேந்திரன் —தர்க்கம்
பாகம் 1 & 2

B. T. 2349

கண்ணகி - கோவலன் —தர்க்கம்
சாவித்திரி - சத்தியவான் —தர்க்கம்

B. T. 2099

அன்னமுண்ணுமலே —கோவலன்
காதல்கோண்டேன் —லலிதாங்கி

தி மியூஸிகல் பிராடக்ட்ஸ் லிமிடெட்,

167, மவுண்ட் ரோட், மதராஸ்

ஏஜன்ட் இல்லாத இடங்களுக்கு ஏஜன்டுகள் தேவை ஏஜன்ஸி நிபந்தனைகளுக்கு மேற்குறிப்பிட்ட விலாசத்துக்கு எழுதவும்

F. M. S. & S. S-க்கு சோல் டிஸ்டிரிபியூட்டர்கள்:—
தி இண்டியன் பிலிம் ஏஜன்சி, பினங், சிங்கப்பூர்.

இங்கு ரிகார்டுகள் கிடைக்குமிடம்:—
ஜம்ஸ் ஸ்டோர்ஸ். 167, மவுண்ட்ரோட், மதராஸ்

திருச்சி ஏஜன்ட்:—

டாக்கர்ஸ் மியூஸிகல் பிராடக்ட்ஸ், பெரிய பஜார்.

மத்ஸரமனுதேர:—காமக்ரோதாதிகளில் மிகவும் கொடியதான மாத்ஸரியத்தைச் சொன்னபடியால் மற்ற எல்லாவற்றையும் கூடக் குறிப்பிட்டதாகக் கொள்ளவேண்டும். இவைகளே முடிவில் மனுஷ்யனுக்கு அதோகதியை யுண்டுபண்ணுகின்றன. இதை நிவர்த்திப்பதற்குப் பகவானுடைய சரணாரவிந்தங்களில் பக்திசெய்வதே மார்க்கமாகும்.

தர்மார்த்தமோக்ஷமுல:—ஸ்வாமிகள் புருஷார்த்தங்களைப் பற்றிக் கூறவேண்டியவிடத்து, காமத்தைப்பற்றிக் கூருததைக் கவனிக்கவேண்டும். காமத்தைப்பற்றி அவர் எப்போதும் இழிவுபடுத்தியே கூறியிருக்கிறர். ''எந்தநேர்ச்சின'' ''மேனுஜூசி'' முதலிய கீர்த்தனைகளைப் பார்க்க ''தர்மாதி மோக்ஷமுல'' என்று பாடங் கொண்டால் ''தர்மம்' அர்த்தம், காமம் ஆகிய மோக்ஷங்களை'' என்றவாறு விபரீத அர்த்தம் ஏற்படும். ஸ்ரீமான் K. V. ஸ்ரீநிவாஸ ஐயங்காருடைய த்யாகராஜ ஹ்ருதயம் முதல் வால்யூமில் காணப்படுகிற (தமிழ்ப்பதிப்பு, பக்கம்-377) பாடம் இங்கு அநுசரிக்கப்பட்டிருக்கிறது.

சித்தமு அந்த்யஜுூ வாடதிபோயின:—இதனுல்தான் மனத்தைப் பேரியோர்கள் குரங்கென்றனர். இதுபோல் சித்தம் பகவானைத் தியானிக்கும் ஸமயத்தில் பலவித சேஷ்டைகளுக்குள்ளாவதைப் பற்றி ஸ்வாமிகள் செய்துள்ள ''மனஸூ விஷய'' முதலிய கீர்த்தனங்களைப் பார்க்க.

மீமதமுனனு ஸரிஞ்சிதி:—''மோக்ஷமிச்சேத் ஜனார்த்தனாத்'' என்றபடி, மோக்ஷத்தைத் தரவல்லவர் விஷ்ணுமூர்த்தியேயாதலால், ஸ்வாமிகள் இவ்வாறு கூறுகிருர்.

கௌளிபந்து **ஆதிதாளம்**

இந்த ராகம் 72 மேளகர்த்தா முறைப்படி 15–வதான மாயாமாளவ கௌளையில் ஜன்யம். ஸரிமபநிஸ்-ஸ்நிதப மகரிஸ என்று ஸஞ்சாரம். பாடுபவர்கள் மத்யமத்தைச் சிறிது தீவிரமாகப் பிடிப்பது ஸம்ப்ரதாயமாகக் காண்கிறது. சுத்த மத்யமமும் காகலீ நிஷாதமும் ராகச் சாயாஸ்வரங்கள். சில ஸந்தர்ப்பங்களில் ஸாதாரண காந்தாரப் பிரயோகம் செய்யப்படுவது (உதாரணம்-ஸ்ரி க்ரி ரிஸ்ஸா) சாஸ்திர ஸம்மதமல்ல. அவரோஹணத்தில் ஒரோரிடங்களில் 'ஸநித பதமா கரிஸா' என்று பிடிப்பது இந்த ராகத்துக்கு ரஞ்ஜகத்தைத் தருகிறது.

IV

பல்லவி

; *	நி ப நீ ; ஸாரீ	ரிஸநீ	ஸா ; ;	ஸா	ஸாரீ	ரிஸநீ
; *	தொ ர தீ ; ய க	ரா	தா ; ;	நா	லோ	நி
; *	நி ப நீ ; ஸாரீ	ரிஸநீ	ஸா ; ;	பா	பதபமகரி	கரி
; *	தொ ர தீ ; ய க	ரா	தா ; ;	நா	லோ	நி
; *	·நி ப நீ ; ஸாரீ	ரிஸநீ	ஸா ;	மட தா	பதபமகரி	கரி
; *	தொ ர தி ; ய க	ரா	தா ;	நா	லோ	நி
ஸநி *	நி ப நீ ; ஸாரீ	ரிஸநிஸ	ரிஸபம	தபநீ	பதபமகரி	கரி
*	தொ ர தி ; ய க	ரா	தா	நா	லோ	னி
ஸநி *	ஸஸ பாமா	பாநீஸ் ஸ்ா	ஸ்ரிஸ்நி	பதமா	பதபமகரி	கரி
*	திருப் ப தி	வேங் கட	ர ம	ண ம	த்ஸ ர ம	நு
ஸநி *						
* (தொதிய்யக)						

அனுபல்லவி

; *	ப மா ப ஸ்ா ஸ்ா	ஸ்ா ; ஸ்ா	ஸ்ா ; ஸ்ா	ஸ்ா	; ஸ்ா	ஸ்ரிக்ரி
; *	ப ர ம பு ரு	ஷ ; தர்	மார் ; த்த	மோ	; க்ஷ	மு
ஸ்நி *	ரீ ஸ்ா ஸ்நிதாதா	பாமா	பா தா பா		பதபம	கரிகரி
நு *	பா ர தோ லு	சு ந்	ந தி நா		லோ	நி
ஸநி *						
* (தொதிய்யக)						

சரணம்

; *	பா, ப பா பா	பா தா பா	பா நீ	பா பா	பத பம	கரி கரி
; *	வா, கு ர ம	நி தெ லி	ய க	ம்ரு க	க ண	மு லு
ஸநி *	நிபநீ ஸாஸாஸா	ரீகா	ரீ ; ;	ஸரி	கரி	ரிஸஸா ;
*	வ ச்சி த கு லு	ரீ	தி ; ;	யுந்	ந	தி ;
; *	ஸ்நிதாபா நீ ஸ்ா	ஸ்ாஸ்ா	.ஸ்ா ஸ்ா	ரீ ஸ்ா	ஸ்ரீக்ரி	ரிஸ்ஸ்ா
; *	வே க மே நீ ய	த மு	ந நு	ஸ ரிம்	சி	ந
; *	ஸ்ாஸ்ா ஸ்நிதாபா	பா பா	பா தா பா ;		பதபமகரி	கரி
; *	த்யாக ரா ஜ	நு த	ம த மத் ;		ஸ ர ம	நு
ஸநி *						
* (தொதிய்யக)						

தென்னிந்தியாவிற்கு சோல் டிஸ்டிரிபியூட்டர்கள்:—டி. டி. கிருஷ்ணமாச்சாரி, 11-14, அரமனைக்காரத் தெரு, மதராஸ். B 6

நமது தொடர் கதை

ஜம்புலிங்கத்தின் திருவிளையாடல்கள்

(ஸ்ரீமான் வ. தே. வரதன் எழுதியது)

முன் கதைச் சுருக்கம்.

தவமணி, சக்ரபாணி முதலியாரின் குமாரன். முதலியார் இறக்குந் தருவாயில் தம் நண்பர் வேலாயுத முதலியாரிடம் தவமணியையும் தமது திரண்ட சொத்துக்களையும் ஒப்புவித்தார். பிற்காலத்தில் வேலாயுத முதலியார் சொத்துக்களை எடுத்துக்கொண்டு தவமணியை வீட்டை விட்டுச் செல்லும்படிச் செய்துவிட்டார். ஒரு கனவான் ஒரு நாள் தவமணியை மிகவும் கஷ்ட நிலைமையில் கண்டு அவனைப் பராமரித்து வருகிருர்.

ஜம்புலிங்கம் என்பவன் பல கொள்ளைகள் நடத்தி வருகிருன். அவனைப் பிடிப்பது சம்பந்தமாகப் போலீஸ் டெபுடி கமிஷனர் கிருஷ்ணஸ்வாமி நாயுடுவும் இன்ஸ்பெக்டர் சொக்கலிங்கம் பிள்ளையும் யோசிக்கின்றனர். ஆனல் தன் விஷயங்களில் பிரவேசிக்கவேண்டாமென்று ஜம்புலிங்கம் ஒரு கடிதம் எழுதுகிருன். வேலாயுத முதலியார் தமக்கு ராவ்பகதூர் பட்டம் கிடைத்ததற்காக ஒரு விருந்து நடத்துகிருர். அதற்கு ஜம்புலிங்கம ஜாலவித்தை காட்டுபவனுகச் சென்று வேலாயுத முதலியார் மனைவியின் ஏராளமான பெறுமானமுடைய நகைகளைத் துப்பாக்கி முனையில் எடுத்துச் செல்லுகிருன்.

ஜம்புலிங்கத்தைக் கண்டுபிடிக்கும் வேலையில் இறங்கிய இன்ஸ்பெக்டர்கள் கிருஷ்ணசாமி நாயுடுவும் ராமலிங்கும் அவனிடமே சிக்குகின்றனர். போலீஸ் கமிஷனரின் ஏற்பாட்டின்படி வெளியூரிலிருந்த போலீஸ் அதிகாரியான **துரைராஜ்** என்பவர் ஜம்புலிங்கத்தைப் பிடிக்க நியமிக்கப்படுகிருர். இவரும் ஜம்புலிங்கத்தனிடம் சிக்கிக்கொள்கிருர். போலீஸ் ஆபீஸிற்கு ஒரு பீரோ வருகிறது. அதில் துரைராஜ் அனுப்பப்படுகிருர்.

ஜெயலக்ஷ்மி உயர் குலத்தில் பிறந்து நடிப்புத் தொழிலில் இறங்கியிருக்கிருள். மெஜயங்கொண்ட சோழபுரம உலகநாதம் பிள்ளை இவளை விவாகம் செய்துகொள்ளப் போகிருர்.

ஜம்புலிங்கத்தைக் கண்டுபிடிக்க உலகநாதம் முயற்சி செய்கிருர். அவர் சில உளவுகளைக் கொண்டு ஒரு கள்ளுக்கடைக்குச் செல்லுகிருர்.

உள்ளே இரண்டடிகள் எடுத்து வைத்தான். இவனுடைய மனது சொல்லொணு வேதனையையடைந்தது. சாராயக்கடைகளிலெல்லாம் ஒரு வித நாற்றம் வீசும் என்பதை எதிர்பார்த்தவனுலும் அந்த நாற்றம் இவ்வளவு சகிக்கக்கூடாதபடியிருக்கும் என்பதைக் கொஞ்சமும் எதிர்பார்க்கவேயில்லை. ஒருமூலையில் மண்கலயங்கள் குவிக்கப்பட்டிருந்தன. இன்னொருபக்கம் தாறுமாருய் பீப்பாய்கள் உருட்டப்பட்டுக் கிடந்தன. தரையெங்கும் ஈக்கள் கூட்டங்கூட்டமாய் மொய்த்துக்கொண்டு, பார்ப்பதற்கு மகா ஆபாசமாகவிருந்தது. நாய் வேஷம் போட்டாற் குரைத்துத்தான் தீரவேண்டும் என்று தன் மனதைத் திடப்படுத்திக்கொண்டு இவ்வளவு இடைஞ்சல்களையும் சகித்துக்கொண்டான். தான் அங்கிருந்து சுற்றுமுற்றும் விறைக்க விறைக்கப் பார்த்துக்கொண்டிருப்பது சந்தேகத்திற் கிடமுண்டாகும் என்றெண்ணி, அக் கடைக்காரனிடம் போய் "ஒண்ணரை தொரம் போடப்பா" என்று கால் ரூபாயை நீட்டிஞன். அவன் ஒரு கிளாஸில் இவன் கேட்ட அளவு பானத்தைக்கொடுக்க, அதை எடுத்துக்கொண்டு அதிகம் கூட்டமில்லாத ஒரு மூலையை அடைந்து உட்கார்ந்துகொண்டு, அதைக் குடிக்கும் பாவனையாய் தன்னைச் சுற்றிலும் கவனிக்கலாஞன். தான் பின் தொடர்ந்து வந்தவர்கள் அங்கொரு பக்கமாய் 'உட்கார்ந்து குடித்துக்கொண்டிருப்பதைக் கண்டான். அவர்களிருவரும், எதைப்பற்றியோ சாதாரணமாகப் பேசிக்கொண்டிருந்ததாகக் காணப்பட்டது. அவர்களை விட்டு, இன்னும் அங்கு யார் யார் என்னென்ன செய்துகொண்டிருக்கிருர்கள் என்று தன் கண்களைச் சுழற்றிக் கூர்ந்து கவனிக்கலாஞன்.

சுமார் இருபது நிமிடங்கள் கழிந்திருக்கலாம். தான் பின்தொடர்ந்துவந்தவர்களில் ஒருவன் எழுந்ததைக் கண்டான். அவன் வெளியே செல்லப் போகிருன்போலிருக்கிறதே! அவனைப் பின்தொடருவோமா அல்லது மற்றவன்மீது கண் வைப்போமா என்ற முடிவிற்கு வருவதற்குள், முன் எழுந்தவன், வெளியே செல்லாமல் எதிர்ப்புறமாயிருந்த சுவரண்டையிற் சென்று அங்கு சுவரோடு சுவராய் இருந்த ஒரு கதவைத் திறந்துகொண்டு திடீரென்று உள்ளே சென்றுவிட்டதைக் கண்டான். இவனது கண்களுக்கு அதற்கு முன் அங்கு கதவிருந்ததாகவே தெரியவில்லை. அவன் உள்ளே நுழைந்ததைக் கண்டதும் தான் சரியான உளவையே பின்பற்றி வந்திருப்பதாய் இவன் மனதில் தோன்றியது. தான் இறங்கிய காரியம் சற்றே அனுகூலம் ஆகலாம் என்ற எண்ணமும் அப்படி அநுகூலத்தையடையுமுன் ஆபத்துகளுக்கு உள்ளாகவேண்டி வந்தாலும் வரும் என்ற எண்ணமும் சேர்ந்து இவனது ஹிருதயத்தைச் சற்றுப் படபடவென்று அடிக்கத் தூண்டின. ஜெயலக்ஷ்மி "ஜாக்கிரதையாகச் சென்று வாருங்கள். என்னை அம்பலத்தில் விட்டுவிடாதீர்கள்" என்று சொன்னது ஞாபகத்திற்கு வரவும், இதெப்படியாவது போகட்டும், நாம் வெளியேறிப் போய்விடலாமா என்றெண்ணிஞன். இந்த எண்ணம் ஒரு விநாடியே இருந்தது. மறுவிநாடி, தான் ஜம்புலிங்கத்திடம் அடைந்த அவமானமும், கமிஷனர் தான் ஜயமடைந்தால், நல்ல கியாதி ஏற்படும் என்று குறிப்பாய்த் தெரிவித்ததும் சேர்ந்து, கடைசிவரை பார்த்தே விடவேண்டும் என்ற திடத்தை ஊட்டியது.

மற்றொருவன் என்ன செய்வானே பார்க்கலாம் என்று சற்று நிதானித்தான். அவன் அப்படியே உட்கார்ந்திரு

மனோரஞ்சனி

இது ஒரு மாதாந்த நாவல் சஞ்சிகை. இராஜலக்ஷ்மி என்னும் நாவல் தொடர்ச்சியாய் வெளிவந்துகொண்டிருக்கிறது. இதன் வருட சந்தா ரூ. 1-8. மாதிரிக்காபி இனம்!

எம். எஸ் ராமுலு கம்பெனி,
286, எஸ்பிளனேட், மதராஸ்.

தான். உலகநாதன் மறுபடியும் அந்த அறை முழுவதும் ஒருமுறை சுற்றிப்பார்த்தான். அங்கிருப்பவர்களில் எவரேனும் உருமாறிய ஜம்புலிங்கமாயிருக்கக் கூடுமா வென்று கூர்ந்து கவனித்தான். ஒவ்வொருவரையும் கவனித்துக் கொண்டே வரும்பொழுது, இவனது பார்வை தற்செயலாய் ஒருவன்மீது பதிந்தது. அவன் ஒருவருடனும் சேராமல் தனியே உட்கார்ந்திருந்தான். மேலும் அவன் உட்கார்ந்திருந்த இடம் சற்றே இருட்டாயிருந்தது. ஆகவே, அவனை உலகநாதன் எண்ணியபடி அவ்வளவு நன்றாக உற்று நோக்கி அறிந்துகொள்ளக் கூடவில்லை. அவன் உடம்பில் ஒரு சாதாரண சட்டையும், தலையில் ஒரு தலைப்பாகையும் அணிந்திருந்தான். திரண்ட தோள்களையுடைய சரியான தடிப்பயல் என்று மட்டும் கண்டுகொண்டான். இப்படிப்பட்ட தடிப்பயலிடம் தான் அகப்பட்டுக் கொண்டுவிட்டால் எப்படித் தப்புவது என்று இவன் மனம் சற்று கலங்கியது. மறுபடியும் தன்னாலானவரை கூர்ந்து கவனித்தான். "அவனாயிருக்குமா? சே! ஒருக்காலும் இருக்க முடியாது. அவன் இவ்வளவு பருமனில்லையே! எனக்குத் தெரியாதா" என்று தானே ஆக்ஷேபனையும் சமாதானமும் செய்துகொண்டான். இப்படியாக இவன் யோசனை செய்துகொண்டே அம்மனிதனைக் கவனித்துக்கொண்டே இருந்தபொழுது, இவன் ஹிருதயம் தட்டென்று நின்றாற் போலிருந்தது! கூர்ந்து கவனித்தான். ஆம், சந்தேகமேயில்லை என்று கண்டான். தான் கவனித்துக்கொண்டிருந்த மனிதனும், தன்னை உற்று நோக்கி, ஒரு கண்ணை மூடி, தன்னை அவனருகில் வரும்படி சைகை செய்வதைக் கண்டான். அதே சமயம் ஜம்புலிங்கத்தினிடமிருந்து வந்த கடிதத்தின் ஞாபகம் வந்துவிட்டது. அதில் எழுதப்பட்டிருந்த ஒவ்வொரு எழுத்தும் இவனது கண்முன் தோன்றிற்று? உலகநாதனது மனத்தில் இவன் யார்? ஜம்புலிங்கத்தின் ஆட்களில் ஒருவனாயிருக்கலாமோ? நம்மை அடையாளம் கண்டு கொண்டானா; ஏன் நம்மைக் கூப்பிடுகிறான்? அதுவும், பிறருக்குத் தெரியாதபடி மிக்க ரகஸியமாக ஜாடை செய்கிறானே! என்ன செய்வது? என்று ஒன்றும் தோன்றாமல் மனது உழன்றுகொண்டிருந்தது. இப்படியிருக்கும் சமயம் யாரோ ஒரு மனிதன் எதிர் சுவரிலிருந்த கதவைத் திறந்துகொண்டு, முன்பு போனவன் சென்றதைப்போலவே சென்றது தெரிந்தது. இதைக் கண்டதே, அந்தத் தடியனும் அதைக் கவனிக்கிறானா என்று அவன் பக்கம் திரும்பினான். அவன் முன்போலவே, ஒரு கண்ணை மூடி, ஜாடையாய்த் தன்னையருகில் வரும்படி அழைப்பதைக் கண்டான். என்ன செய்வது, போகலாமா வேண்டாமா என்று யோசனை செய்தான். தன்னை மிகவும் நன்றாயறிந்திருந்த, ஜெயலக்ஷ்மியின் வீட்டு வேலையாளே அடையாளம் கண்டுகொள்ள முடியாமல் ஏமாந்திருக்கும்பொழுது, மற்றவர்களால் அவ்வளவு சுலபமாய் அறிந்துகொள்ள முடியாது என்று தன்னைத்தானே தேற்றிக்கொண்டு, மெதுவாய் எழுந்திருந்து ஜாக்கிரதையாயும், வெளிப் பார்வைக்குச் சாதாரணமாகவும் செல்வதைப்போல அம்மனிதனை யணுகினான்.

இவன் தன்னை நோக்கி வருவதைக் கண்டதும், அம்மனிதன் சற்று ஒதுங்கி இவனுக்கு உட்கார இடங்கொடுத்தான். இருவரும், ஒருவரையொருவர் சில விநாடிகள் பார்த்துக் கொண்டார்கள். அப்பொழுதும் அம்மனிதன் இருந்தவிடம் அவ்வளவு வெளிச்சமில்லாதிருந்ததால், உலகநாதனால் நன்றாய்க் கவனிக்கக் கூடவில்லை. ஆனால் ஒன்றுமட்டும் தெரிந்தது. அவனிடம், ஜம்புலிங்கத்தினுடைய அடையாளங்கள் ஒரு சிறிதும் காணப்படவில்லையென்று நிச்சயித்துக்கொண்டான். அம்மனிதன் உலகநாதனை நோக்கி,

"எதுனும் கொண்டாரச் சொல்லட்டா?" என்று சற்று தாழ்ந்த குரலில் கேட்டான். அந்தக் குரல், அவனது வெளிப் பார்வைக்குத் தகுந்தபடி முரட்டுத்தனமாயிராமல், மிகவும் மெல்லியதாகவிருந்தது. ஒன்றும் வேண்டாமென்று சொல்வது, அவ்வளவு மரியாதையாக இராது என்று நினைத்து, "ஒரு தொராம் கொண்டாந்தா பத்தும்" என்று சொன்னான். அவன் எழுந்து, கடைக்காரனிடம் போய் இரண்டு கிளாஸ் டம்ளர்களில் வாங்கிக்கொண்டு வந்தான் ஒரு டம்ளரை உலகநாதன் கையிற் கொடுத்துவிட்டு, மற்றொன்றைத் தன் கையில் வைத்துக் கொண்டு, அவனைப் பார்த்துப் புன்முறுவல் செய்தான்.

என்னை ஏமாற்றிவிடவா நினைத்தாய்? அதெல்லாம் என்னிடம் பலிக்குமா?" என்று கேட்டான். இந்தக் குரலைக் கேட்டதே, உலகநாதன் ஆச்சரியமும் பிரமிப்பும் அடைந்தவனாய்,

"ஆ! தியாகராஜு! நீயா! உன்னை அடையாளமே கண்டு கொள்ள முடியவில்லையே!" என்று தாழ்ந்த குரலிற் சொன்னான்.

தியாக:—பிறருக்குத் தெரியக் கூடாதென்றுதானே வேஷம் போட்டுக் கொள்வது? எல்லோரும் நம்மைக்கண்டுகொள்

(அடுத்த பக்கம் பார்க்க)



ஹார்லிக்ஸ் கிரிக்கெட் கோஷ்டி காப்டனுக்கு மேஜர் ஸி. கே. நாயுடு 'பாட்'டைக் கொடுக்கிறார்.

—:[○]:—

ஹார்லிக்ஸ் தொழிற் சாலைக்கு இந்திய கிரிக்கெட் கோஷ்டியினர் விஜயம்.

—:[○]:—

ஹார்லிக்ஸ் 'ஆகாரத்தைப் பற்றி நமது நாட்டில் ஒவ்வொருவரும் தெரிந்து கொண்டிருப்பார்கள். அது சிறு குழந்தைகளுக்கு மட்டும் ஆகாரமாகவிருக்கிறது என்று இன்னும் சிலர் நம்பியிருந்த போதிலும் பெரியோரும் இதைச் சாப்பிட்டுச் சுகமடைந்து வருகின்றனர்.

இங்கிலாந்தில் கிரிக்கெட் பந்தயங்கள் ஆடுவதற்காக இந்தியாவிலிருந்து விஜயநகரம் குமார ராஜா தலைமையில் ஒரு கோஷ்டி சென்றது அனைவருக்கும் தெரிந்ததே. இந்தக் கோஷ்டியினர் ஹார்லிக்ஸ் தொழிற்சாலைக்கு விஜயம் செய்தது முக்கிய சம்பவமாகும். இத்தொழிற்சாலை பக்கிங்ஹாப்ஷயருக்குச் சமீபமாயுள்ள ஸ்லோ என்னுமிடத்திலிருக்கிறது

இந்திய கோஷ்டி அங்கத்தினர்களை ஸர் பீடர் ஹார்லிக் வரவேற்றார். ஹார்லிக்ஸ் கம்பெனியின் தலைவர் லெப்டினனட் கர்னல் ஜே. என். ஹார்லிக் தாம் அன்று பிரஸன்னமாகவிருக்கமுடியாது போனதுபற்றி வருத்தம் தெரிவித்தும்அவர்களுக்கு ஆசிகூறியும் ஒரு தந்தியனுப்பியிருந்தார்.

இந்திய கோஷ்டியினர் தொழிற்சாலையின் சுத்தத்தைப்பற்றிப் புகழ்ந்து பேசினர். அவர்கள தொழிற்சாலை முழுவதையும் பார்வையிட்டனர். ஹார்லிக்ஸ் தயாரிக்கும் விதம் அவர்களுக்குக் காட்டப்பட்டது

ஹார்லிக்ஸ் பாட்டில்கள் 'பாக்' செய்து அனுப்பப்படுமிடத்தில் ஒரு விசேஷ சம்பவம் நடைபெற்றது ஒரு கிரிக்கெட் 'பாட்'டில் இந்திய கிரிக்கெட் கோஷ்டியினர் அனைவரும் கைச்சாத்திட்டு அதை ஹார்லிக்ஸ் கம்பெனி கிரிக்கெட் கோஷ்டிக்கு அளித்தனர். இது இந்திய கோஷ்டியின் சார்பாக மேஜர் ஸி கே. நாயுடுவால் ஹார்லிக்ஸ் கோஷ்டி காப்டன் டபிள்யூ. ஆர். பௌடனுக்குக் கொடுக்கப்பட்டது. பிறகு இந்திய கோஷ்டி அங்கத்தினர்களுக்கு ஒரு விருந்து நடத்தப்பட்டது

இங்கிலாந்து கோமண்ட் பிரிட்டிஷ் கம்பெனியார் இவ் விஜயத்தைப் படமாகத் தயாரித்தனர். விஜயம் செய்த இந்திய கோஷ்டி அங்கத்தினர்கள் வருமாறு:—மேஜர் ஸி கே. நாயுடு, எம். ஜே. கோபாலன். மகமத் உசேன், பாகா ஜிலானி, முஸ்டாக் ஆலி, பி. இ பாலியா, அமார் ஸிங், மெஹரோப்ஜி, பானர்ஜி, ஸி. எஸ் நாயுடு, ஹாடி, வாஸிர் ஆலி, ஜேய், ஜிஹாங்கிர் கான், அமீர் இலாஹி, ஸி. ராமசாமி, ஹிண்ட்லேகர், மேஜர் பிரிட்டன ஜோன்ஸ்.

கொனேலா - கொனேலாக்ஸ் - கொனேசல்ப்
கொனேகான்
வெள்ளை, வெட்டைக்கு
பாட்டில், ரூ. 1-8-0. யுனைடெட் கன்ஸர்ன், பந்தர் தெரு, மதுரை,
201, மோகல் வீதி, ரங்கூன். (மதுரை, பம்பாய், கல்கத்தா.)

வதானால், நாம் வேஷம் போட்டுக் கொண்டு என்ன பிரயோஜனம்?

உலக:—நீ செய்த ஜாடைகளினால், நான் மிக்கக் கலவரமடைந்துவிட்டேன். நீ ஜம்புலிங்கமாயிருக்கலாமோவென்றுகூடச் சந்தேகப்பட்டுவிட்டேன். ஆமாம்—அதிருக்கட்டும்—நீ இவ்வளவு பருமனாகக் காணப்படுகிறாயே அதெப்படி?

தியாக:—அதென்ன பிரமாதமா? கைதேர்ந்த தையற்காரர்களிருக்கும்போது என்ன கவலை? அதெல்லாம் அட்டைகளின் வேலைகள்!

இப்படிப் பேசிக்கொண்டிருக்கும்போதே உலகநாதனின் மனதில் ஒரு வருத்தம் தோன்றியது. நம்முடைய வேஷம் நன்றாகப் பலித்திருக்கிறதென்று மனப்பால் குடித்துக்கொண்டு வெளியேறிவிட்டோமே. இவனே அடையாளங் கண்டுகொண்டானே! நாம் அவன் கண்களுக்கு எப்படி தப்பப்போகிறோம்?'' என்று கவலைப்பட்டுக்கொண்டே தியாகராஜுவை நோக்கி,

''என்னை நீ எப்படி அடையாளங் கண்டுகொண்டாய்?'' என்று கேட்டான்.

தியாக:—அது ஒரு பிரமாதமா? உன்னுடைய வேஷம் என்னமோ நன்றாய்த்தான் பொருந்தியிருக்கிறது. அதற்கு தகுந்தபடி உன்னுடைய செய்கை பொருந்தியிருக்கவில்லையே! அந்த சாராயத்தைக் குடிப்பதைப்போலப் பாவனை செய்தாயே! சாராயம் குடித்தவர்கள், தூ! தூ! என்று காறித் துப்புவதைப் போலத் துப்ப மறந்துவிட்டாயே. இதெல்லாம் பார்வைக்கு அல்ப விஷயமாயிருந்தபோதிலும், இவைதானே நம்மைக் காட்டிக் கொடுத்துவிடும். இதை மறக்கலாமா?

உலக:—ஆம்! ஆம்! நீ சொல்வதுண்மையே. எனக்கு அது அவ்வளவு பழக்கமில்லைதான்.

தியாக:—சரி! அதுபோகட்டும். கமிஷனர் சிக்கிக்கொண்டார்.

உலக:—என்ன!

தியாக:—ஸ்! மெதுவாய்! நடப்பதைக் கவனி.

இதைக் கேட்டதும், தியாகராஜு பார்க்கும் பக்கம் தானும் பார்த்தான். வெளியேயிருந்து ஒரு மனிதன் சந்தடி செய்யாமல் உள்ளே நுழைந்து இவர்களிருந்தவிடத்தைக் கடந்து, எதிர்ப்புறம் இருந்த கதவின் வழியாய் உள்ளே நுழைந்துவிட்டான்.

தியாக:—அவன் எட்டாவது.

உலக:—என்ன எட்டாவது?

தியாக:—இதுவரை அப்படி உள்ளே சென்றவர்களில் இவன் எட்டாவது மனிதன்.

உலக:—சரி அதிருக்கட்டும், கமிஷனர் சிக்கிக்கொண்டாரா!

ஹார்லிக்ஸ் அதிக ஊக்கத்தைத் தருகிறது

வளரும் குழந்தைகளுக்கு, விளையாட்டிலும் சரி, வளருவதிலும் சரி, அதிக ஊக்கம் செலவாகி விடுகிறது. விரைவில் இந்த ஊக்கத்தை மீண்டும் உயிர்ப்பிக்காவிட்டால் அவர்கள் சக்தி குறைந்து, அயர்ந்தும், சோர்ந்தும் போய்—ரொம்ப கஷ்டப்படுகின்றனர்.

பகலிலும், படுக்கைக்குப்போகும் சமயத்திலும் தவறாமல் ஹார்லிக்ஸ் கொடுத்து வந்தால் அவர்களுக்கு அவசியமான அதிக ஊக்கம் கிடைக்கக்கூடிய போஷாக்கை அவர்கள் பெறுகின்றனர். ஹார்லிக்ஸ் ருசி மிகுந்தது; இதைக் குழந்தைகள் விரும்புகின்றன. இது விரைவில் குழந்தைகளுக்கு பலமும், புஷ்டியும் தருகிறது.

ஹார்லிக்ஸ் மிக்சருடன் சூடாகவோ அல்லது குளிர்ச்சியாகவோ தயாரிக்கப்படும் ஹார்லிக்ஸ் அதிக ருசியாகவிருக்கும். ஸ்டோர்களில் கிடைக்கும் அல்லது 14 அணா ஸ்டாம்பனுப்பி கல்கத்தா, த. பெ. 2229-லிருந்து, பெறலாம்.

ஹார்லிக்ஸ் அசதி அணுகாமல் காப்பது

(H 264)

தியாக:—ஆம். பேபர்களில் போடப்பட்டிருக்கிறதே!

உலக:—அப்படியா! நான் காணவில்லை. சரி, எட்டுமனிதர்கள் என்றாயே, எப்படி?

தியாக:—எப்படியா? ஒருவர் பின்னொருவராக இதுவரை எட்டு மனிதர்கள் அந்தக் கதவின் வழியாய் உள்ளே நுழைந்து சென்றிருக்கிறார்கள். ஒவ்வொருவரும், பத்து நிமிஷங்களுக்கு ஒருவராக, ஒருவர் பின்னொருவராய் உள்ளே சென்றிருக்கிறார்கள். நீ வருமுன், நானும் ஏதோ சாதாரணமாகச் செல்வதைப்போல உள்ளே செல்ல முயன்றேன். என்னை ஏதோ சாக்குப் போக்குக் கூறி உள்ளே செல்லவொட்டாமல் தடுத்துவிட்டார்கள். ஆகையால் உள்ளே ஏதோ ரகஸிய சமாசாரமிருக்கிறது என்று எண்ணவேண்டியிருக்கிறது.

உலக:—ஜம்புலிங்கத்தின் கூட்டத்தார்தானா?

தியாக:—அதெப்படிச் சொல்ல முடியும்?

உலக:—இங்கெப்படி வந்து சேர்ந்தாய்?

தியாக:—ஏன்! இப்பக்கத்தில் தானே முன்பு இருவரும் காணாமற் போனது? ஓரிடமும் விடாமல் தேடவேண்டுமென்று நினைத்து, ஒவ்

(30-ம் பக்கம் பார்க்க)

சிறுவர் பகுதி



மெட்ராஸ் காலிங்!

"கிட்டு பேசுவது"

என். ஆர்.

அண்ணன் தம்பிகளே, அக்கா தங்கைகளே!

இன்று நான் சொல்லப் போவதை நீங்கள் மிக அமைதியாய்க் கேட்க வேண்டும். அப்படிக் கேட்பதற்கும் சௌகரியமிருக்கிறது. இன்று நமது சகோதரிகள் பலர் அங்கே வந்திருக்க மாட்டார்கள். கொலு வேடிக்கை பார்க்கப் போயிருப்பார்கள். ஆகையால் பேச்சுச் சப்தம் ரொம்பக் குறைந்திருக்குமல்லவா?

உங்களில் சிலர் இன்னும் ஒரு வாரத்துக்குள் சுதந்திரத்தை இழக்க நேரிடுமென்று பயப்படுகிறேன். இதுவரையில் அவர்கள் பள்ளிக்கூடம் கிள்ளிக்கூடம் போகாமல் இஷ்டப்படிக் காலங் கழித்து வந்தார்கள். இப்பொழுது விஜயதசமி வருவதால், அன்று பள்ளிக்கூடத்தில் வைத்துவிடுவார்கள்.

'கிள்ளிக்கூடம்' என்றால் என்னவென்று உங்களில் சிலருக்குச் சந்தேகமுண்டாகலாம். வெகுநாள் வரையில் நானும் அது பள்ளிக்கூடத்துக்கு அத்தானோ அம்மாஞ்சியோ என்றுதான் எண்ணிக் கொண்டிருந்தேன். அப்படியில்லையாம். பெரியவர்கள் பேசும்போதெல்லாம் அப்படி ஒரு வார்த்தை சேர்த்துக்கொண்டு பேசுவது வழக்கமாம். அதற்கென்ன அர்த்தமோ ஸாமிக்குத்தான் தெரியும்.

நீங்கள் உங்கள் தகப்பனாரிடம் "கடைக்குக் கிடைக்குப் போனால் எனக்குப் பம்பரம் கிம்பரம் விளையாடக் கிளையாட வாங்கிக் கீங்கித் தாருங்கள்" என்று சொல்லிவிடுங்கள். அப்பொழுது அவர்களுக்கு வரும் கோபத்தைப் பார்க்க வேண்டுமே.

கிடக்கட்டும்; நமக்கு மூன்று, நாலு வயதாகும்போதே வீட்டில் அ, ஆ சொல்லிக் கொடுக்கிறார்கள். அண்ணாவோ, அக்காவோ சிலேட் வைத்திருந்தால் பிடுங்கிக் கைவலிக்கு மட்டும் நாம் அதில் எழுத்துக்களைக் கிறுக்கித் தள்ளுகிறோம். சில சமயம் பள்ளிக்கூடம் போவதற்கு முன்பாகவே நமக்கு எழுத்துக்கள் வந்து விடுகின்றன. ஆனால் அது போதாது. சாஸ்திரப்படிப் பள்ளிக்கூடத்தில் வைக்க வேண்டுமாம். செலவு பண்ணினால்தான் படிப்பு வருமாம். ஆனால் நமக்குப் புது வேஷ்டி, புதுச் சட்டையெல்லாம் வாங்கிக் கொடுக்கிறார்கள். ஆகையால் செலவு பண்ணுவதைப் பற்றி நாம் ஆக்ஷேபிக்க வேண்டியதில்லை. ஆனால், அந்த வாத்தியார் மணலில் விரலைப் போட்டு ஏன் தேய்க்க வேண்டுமென்றுதான் எனக்குத் தெரியவில்லை.

இதில் ஒரு விசேஷத்தைக் கவனித்தீர்களா? நமக்கு ஏதாவது நல்ல நாள் வந்தால் அவர்கள் ஒன்றும் சரியாகச் செய்வதில்லை. நாம் பிறந்த ஏழாவது நாள் கொண்டாடக் காப்பரிசி, ஆண்டு நிறைவுக்குக் காப்பரிசி, பள்ளிக்கூடத்தில் வைத்தால் காப்பரிசி, எல்லாவற்றிற்கும் அந்தக் காப்பரிசிதான். கேவலம் ஒரு முந்திரிப் பருப்பு உருண்டையோ, சாகலேட்டோகூட இல்லையென்றால் அதைப்பற்றி என்ன சொல்வது? நாம் அரிசியைத் தின்றுவிட்டு வயிற்று வலியால் கஷ்டப்பட வேண்டியிருக்கிறது.

இன்னும் ஓர் அநியாயம் பாருங்கள்! படிக்க வைப்பது பையனை மட்டுந்தான். நமது சகோதரிகளைக் கவனிப்பதே இல்லை. அப்பாவுக்கு என்றைக்காவது கோபம் வரும் சமயத்தில் அக்காவோ தங்கையோ விஷமம் செய்துகொண்டிருந்தால், உடனே பள்ளிக்கூடத்தில் கொண்டு போய் விட்டுவிடுவார். அவர்களைப் பள்ளிக்கூடத்தில் வைப்பது அத்துடன் சரி. நண்பர்களே! இப்பொழுது ஒரு விஷயம் ஞாபகம் வருகிறது "பள்ளிக்கூடத்தில் வைப்பது" என்ற வார்த்தைகளை உபயோகிப்பதை நாம் பலமாக ஆக்ஷேபிக்க வேண்டும். அவற்றிற்கு 'ஜெயிலில் வைப்பது' என்றும் அர்த்தம் உண்டாம்.

படிப்பு வரவேண்டுமென்பதற்காகவே நம்மைப் பள்ளிக்கூடம் போகச் சொல்கிறார்களென்று சொல்வதற்கில்லை. நேற்று அம்புஜம் அவள் தம்பி மணியை அழைத்துக்கொண்டு பன்னிரண்டு மணிக்குப் பள்ளிக்கூடத்துக்கு வந்தாள். மணியின் சிலேட் புத்தகமெல்லாம் அம்புஜத்தின் கையிலிருந்தது. அவன்



பாட்டில் ஏதோ பக்ஷணம் தின்றுகொண்டு இடுப்பு வேஷ்டி கீழே விழாதபடிப் பிடித்துக்கொண்டிருந்தான்.

"ஸங்கீத அபிமானி"

சென்ற இரண்டு வருஷமாக ஸங்கீதத்துக்கென்றே நடத்தப்பட்டு வரும் ஒரு உயர்தர மாதாந்தப் பத்திரிகை.

உள்நாட்டு வருடச் சந்தா ரூ. 1—8.
வெளிநாட்டு ,, ரூ. 2—0
1935-ம் வருஷத்திய காலிகோ பயிண்ட் செய்த வால்யும் விலை ரூ. 3.

ஸங்கீத அபிமானி ஆபீஸ்,
மைலாப்பூர், மதராஸ்.

மின்சாரரசம்

சகல வியாதிகட்கும் தேவாமிருதம் போன்றது.
புட்டி 1-க்கு ரூபா 2.
மின்சார ரசம் கம்பெனி, (லிட்)
சேலம்,

"ஏன் லேட்?" வாத்தியார் கேட்டார்.

"வழியிலே மணி ஓடி ஓடிப் போய்விடுகிறுன். நான் போய் இழுத்துக் கொண்டு வர வேண்டியிருக்கு" என்று அம்புஜம் சொன்னுள். அப்படிச் சொல்லும்போது அவளுக்கு அழுகைகூட வந்துவிட்டது.

"பின்னே ஏன் அவனை அழைத்து வந்தாய்?"

"அம்மா இன்று கறி வடாம் பிழிகிறுளாம். பள்ளிக்கூடத்துக்குத் தொலைச்சிண்டு போ என்று அனுப்பினுள்" என்று அம்புஜம் சொன்னுள்.

இதிலிருந்து விஷமம் பண்ணுகிருக்கத்தான் பள்ளிக்கூடம் போகச் சொல்கிறுர்களென்று தெரிகிறது.

ஆனல் பள்ளிக்கூடம் போவது நமக்கும் நல்லது. வீட்டிலேயே இருந்தால் விளையாட நாலைந்து பையன்கள்கூட வரமாட்டார்கள். பள்ளிக்கூடத்தில் வேண்டிய பையன்களிருக்கிறுர்கள். விளையாடுவதற்கும் நிறைய இடமிருக்கிறது.

பள்ளிக்கூடத்தில் முதன் முதலில் நமக்கு எழுத்துக்கள் சொல்லிக் கொடுக்கிறுர்கள். எழுத்துக்களை நூறுதரம் ஆயிரம் தரம் எழுதினல் தான் ஞாபகம் வருகிறது. சில சமயம் அவற்றைப்பற்றிச் சொப்பனங்கூடக் காண்கிறேம். 'ஈ' தலையில் குல்லாய் வைத்துக்கொண்டு வாக்கிங் போவதுபோலவும் 'ஔ' பயமுறுத்துவது போலவும் தோன்றுகிறது.

இந்தக் கஷ்டங்கள் எல்லாம் இல்லாமல் எழுத்துக்களைத் தெரிந்து கொள்ள ஒரு சுலபமான வழி இருக்கிறது. படிப்புச் சொல்லிக் கொடுப்பதில் பெரிய பெரிய பேர் வழிகள் என்று சொல்கிறுர்களே? அவர்களுக்குக் கூட அது தெரியாது. அந்த ரகசியம் எனக்கு மட்டுந்தான் தெரியும்.

நண்பர்களே! தூங்காதேயுங்கள். படிப்பு விஷயமென்றல் தூக்கம், துக்கம் இரண்டும்தான் வரும். என் யோசனைப்படி செய்தால் படிப்பை மிகவும் ருசிகரமானதாகச் செய்யலாம். 'அ;' ஆ; க, 'கா' முதலிய எழுத்துக்கள் மாதிரி பெப்பர்மெண்டுகள் செய்துவிட வேண்டும். வாத்தியார் நம்மிடம் 'கி' யைக் கொடுத்துத் தின்னச் சொல்லி, இப்பொழுது என்ன தின்னுய்?" என்று கேட்பார். 'கினு ஸார்" என்று நாம் உடனே சொல்லி விடலாம். என் யோசனையை நீங்கள் ஏகமனதாக ஆதரிப்பீர்களென்று நம்புகிறேன். படிப்பைப் பற்றி ஒரே நாளில் அதிகமாகச் சொல்லிவிட்டால் தலை வலிக்கும். ஆகையால் இத்துடன் நிறுத்திக் கொள்கிறேன்.

ஹல்லோ குட்நைட் எவ்வரிபாடி.

ஜோதிஷ மகுடவர்த்தனர்

இந்து மன்னர் சமஸ்தான 25-வது தலைமுறை ஜோதிஷர்-பீமகவி-சுகர்-புஜண்டா சாஸ்திர நிபுணர் இப்பூமண்டலப் புகழுரையில் எதிர்கால பலன் கூறுவதில் "உலக சிரேஷ்டர்" என வெற்றி பாமாலையும் தங்க சன்னதுகளும் பெற்றவர்.

ஜாதகம் லக்கின நக்ஷத்திர ஸ்புடஞ் செய்து பொதுப் பலன் எழுத ரூ. 1 ஒரு தெசைக்கு புக்தி பலன் ரூ 2. அஷ்ட வர்க்கம் ஆயுள்வரை புக்தி பலன் ரூபா 7. ஜாதக குறிப்பு முன் பணம் ரூபா 4. தேவை.) 1 வருட மாதா மாதப் பலன் ரூ. 1-8. கேள்வி 6-க்கு ரூ. 1. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை.

புரோபஸர் N. சுப்பிரமணியம்,
நெ. 2 (ஜோதிஷ ஆசிரமம்)
வாலாஜாபாத், S. I. R. சென்னை.

வெண்குஷ்டம் பெருவியாதி

எவ்வளவு கடுமையானதாயினும், எவ்வளவு நாட்பட்டதாயினும் நாலே வாரத்தில் குணம். நிவர்த்திக்கு உத்தரவாதம்.

விவரங்களுக்கெழுதுக,
KAMALA WORKS (S. M.)
Panchpota—Bengal, India.

எரிப்பும், வெடிப்பும் வராமல் உடம்பைக் காப்பாற்று.

அனேக ஸ்திரீகள் தோல் வெடிப்பினுலும், தோல் எரிப்பினுலும் வரும் சஞ்சலம் விலக்கமுடியாததென்று எண்ணுகிருர்கள். இன்னுளில் ஆயிரக் கணக்கானவர்கள் குடிகூரா டால்கம் (Cuticura Talcum) தூளினல் வரும் விநோதமான தேற்றத்தை கண்டுபிடித்துக் கொள்கிருர்கள்.

கொதிப்பான நுட்பமுள்ள உடம்பின் தோலுக்கு இந்த தூள் பரிமள தைலம் போலிருக்கும். குடிகூரா டால்கம் (Cuticura Talcum) தூள் ஆற்றுந் தன்மை யுள்ள தைலங்கள் கலந்து மருந்தூட்டி ரசாயன முறைப்படி, உத்தமமான வழியாய்ச் செய்யப்பட்டது. இந்த தூள் மிகவும் நேர்த்தியானது, அதிக சுத்தமானது. இதற்கு மேலான தூள் வாங்கமுடியாது. சாதாரணத் தூள்களைவிட இந்த தூளுக்கு தணித்து ஆற்றும்படியான வல்லமை அதிகம். உடம்பின் தோலில் பதர் வந்த இடங்கள்மேல் இலேசாக இந்தத்தூளைத் தூவினுல் மேன்மையாயிருக்கும். வேர்வையைத் தணிக்கும். அதன் வாசனை மணமாயும் உல்லாசமாயுமிருக்கும்; திரேகம் முழுதுக்கும் கமப்பான வாசனையைக் கொடுக்கும்.

ஒருடப்பி குடிகூரா டால்கம் (Cuticura Talcum) தூள் இன்றைக்கே வாங்கு. அது சமுசாரத்திலிருக்கும் ஒவ்வொருவருக்கும் கட்டாயமாக வேண்டியது. இந்த தூள் குழந்தைகளுக்கு முக்கியமானது.

குடிகூரா டால்கம்
CUTICURA TALCUM
எல்லா மருந்து கடைகளிலும் பஜார்களிலும் விற்கப்படும்.

"மாடர்ன் டயமண்ட்ஸ்"

ஐரோப்பியா, இந்தியா வைரவியாபாரிகளால் போற்றப்பெற்றவை. ஹைகோர்ட்டு நீதிபதிகள், ராஜாக்கள், ஜமீன்தார்கள், பிரபுக்கள் முதலியவர்களால் உபயோகிக்கப்படுபவை.

இழைக்கப்பட்ட ஆபரணங்கள் அருமையான அமைப்பும், நேர்த்தியும், அழகும் மிகுந்தவை.

ஒரு முறை பரீக்ஷித்து உண்மை அறியுங்கள்.

வி. வி. ஆச்சார்யுலு & ஸன்,
S—63, பொன்னப்ப செட்டி தெரு, பார்க் டவுன், மதராஸ்.



ஸ்ரீகர கஸ்தூரி கோரோஜன மாத்திரை
"பாலக்ஸ்" பேதி மாத்திரை "யூனிகான்" டானிக்

14, ஈசா அவுஸ், மாடுங்கா, பம்பாய்.

ஹாஸ்யப்பகுதி

கொடாக் கணவனும் விடாத மனைவியும்

(ஸ்ரீமான் பி. ஆர். ஆர். ஐயங்கார், பி.ஏ. எழுதியது.)

"இல்லெங்கோ, கீழே திருடன் வந்திருக்கான். நீங்க போய் அவனைத் தொரத்துங்கோ" என்று வேண்டிக்கொண்டாள் விமலா.

"என்னாங்கோ, இன்னிக்கி பொடவக்காரச் செட்டி வருவான். நேத்தி ஒரு பொடவெ வாங்கினேன். அதுக்கு பதினோரு ரூபா தரணம். அதெ குடுத்துட்டு ஆபீசுக்குப் போங்கோ" என்றாள் விமலா.

அதைக் கேட்டதும் சுப்பரமணிக்கு அடக்க முடியாத கோபம் வந்துவிட்டது.

"எண்டி, உன்னைக் கேட்பார் கிடையாதா? போன மாசந்தானே ஒரு பொடவெ வாங்கினே. மாசாமாசம் புதுசு புதுசா பொடவெ வாங்கறதுன்னா, இது என்ன மஹாராஜா சமஸ்தானமா என்ன? துட்டு விளையறதா உன்னிஷ்டம்போல செலவு பண்ண? பொம்மனாட்டிகளுக்கோ குடும்பத்திலே அக்கரெ இருக்கவாண்டாமா? பொண்ணு அவலமா இருக்க வீடு பாழாபூடுமே. இதேமாதிரி மாசாமாசம் பொடவெ வாங்கினா, வாடகெ எங்கேர்ந்து கொடுக்கறது? மளிகைக்காரன் சும்மா இருப்பானா? பால்காரம் டணம் கேக்காமெ இருப்பானா? ஊரெல்லாம் எனக்குக் கடன் பிடுங்கித் தின்னறது. வெளியிலே சொன்னா வெக்கக் கேடு. நூறு ரூபா சம்பாதிக்கிறெயெ, உனக்கென்ன? ஆம்படியாம் பெண்டாட்டிதானே செலவென்ன இருக்குன்னு எல்லாரும் கேக்கறா. அவாளுக்கு நெஜம் தெரிஞ்சா அப்பறம் நீ மூஞ்சியெக்கூட வெளியிலெ காட்டமுடியாதே" என்று சரமாரியாய்ப் பொழிந்தான்.

"ஆமாம், எனக்கு ஒரு பொடவெ வாங்கிண்டதாலே தான் நீங்கோ கடன்காரரா போய்விட்டிங்களா? என்னமோ, உடுத்திக்கோ ரெண்டாம் பொடவெகூட இல்லையென்னு வாங்கிண்டேன். அதனாலே குடியே முழுகிப்பூட்டதுன்னு சொல்லறீங்களே நீங்கோ கிண்டியிலே போய் நோட்டு நோட்டா விட்டு விட்டு வறீங்களே, அதுலே இது ஆயிரத்திலே ஒரு பங்கு காணாதே."

"நான் பந்தயத்திலே தம்பிடிகூட தோற்கிறதே கிடையாது."

"அப்படியானா நான் ரெண்டு சீட்டி போடவெ வாங்கிண்டதாலே தான் கடனா போச்சா? ஒங்களைக் கலியாணம் பண்ணிண்டு பத்து வருஷமாச்சு. இந்தப் பத்து வருஷத்திலே நீங்கோ என்ன செய்துடிங்க, வெரலெ மடக்குங்க. நான் வாய்செத்த பூச்சியா இருக்கவே, சும்மா இருக்கேன். ஒங்களுக்கு அண்டையாத்து அமிர்தம் மாதிரியா பொண்டாட்டி வந்திருந்தா, அப்பொ தெரியும் நீங்கொ படறபாடு."

"சரி, போதும், வாயெ மூடு. அடங்காப் பிடாரியா ஆரம்பிச்சுடாதே."

"நான் வாயெ அடக்காமெ, வுங்களோடே ஒரும்மெ வாயாடிண்டுதான் இருக்கனா? பொடவெக்கு ரூபாய்க்கு செட்டி வருவான்னு சொன்னா நீங்கொ தானே வாயிலெ வந்ததெல்லாம் சொல்லி, என்னெ திட்டிறீங்கொ."

"என்னைக் கேக்காமல் என் பொடவெயெ வாங்கினாய்?"

பொடவெயெ உடுத்திக்கப் போறது நானா நீங்களா? நான் உடுத்திக்கிறதுக்கு ஒங்களெ என் மாதிரி கேக்கணம்?"

"அப்பொ என்னெ ரூபா கேக்காதே."

"நீங்க ரூபா தராவிட்டா வேறெ யாரு கொடுப்பா?"

"அது தெரிஞ்சிருந்தா என்னெ என் கேக்காமெ பொடவெ வாங்கினே?"

"செட்டி வரபோது நீங்கொ ஆபிசிலே இருக்கிங்கோ, இன்னுமெ, ஒங்களெ கட்டிண்டதற்கு பொடவெக்காரனையும் அழெச்சுண்டு ஒங்க ஆபீசு தேடிண்டு வரணம்போல இருக்கே."

சுப்பரமணிக்கு மனைவி தன்னுடன் வாதாடினது நிமிஷா நிமிஷம் கோபத்தை அதிகமாக்கியது.

"போதும் வாயெ மூடு" என்று அவளை யடக்கினான்.

"நான் வாயை மூடிண்டா பொடவெக்காரன் செட்டி வாயை மூடிப்பானா?"

"எனக்கு என்ன அதைப் பற்றி?"

"உங்களுக்கு அந்தப் பொறுப்பில்லாமெ வேறு யாருக்கு? நான் பட்ட கடனெயெல்லாம் நீங்கோதானே அடைக்கணம்.

"அதுதானே சனியன். அந்த இழவுக்குத்தானே ஒன்னெ கடன்வாங்காதேன்னு அடிச்சுகிறேன்."

"பொடவெய என்னமோ வாங்கியாச்சு. இன்னுமே என்ன செய்யறது. சொல்லுங்கோ."

"அவன் கையிலே திருப்பிக் குடுத்துடு."

"பொடவெயெ நான் உடுத்திண்டாச்சே. நலங்கிப் போயிருக்கே"

"அடிபோடி, எடாகூட சனியனே. நீ இல்லாமெ இருந்தாலும் நான் நிம்மதியா இருப்பேன். எங்கேயாவது ஓடிப் பூடலாமான்னு இருக்கு ஒன்னெ கட்டிண்டு மாரடிப்பது"

"நெஜமாவா?"

"சத்தியமா சொல்லறேன். நீ எங்கேயாவது தனியா இருந்துக்கோ; நான் ஓட்டலிலே சாப்பிட்டுண்டு, ஒரு ரூமிலே இருக்கேன். அப்போ எனக்குச் சந்தோஷமா இருக்கும்"

"அப்படியே செய்யுங்கோளேன், நான் வாண்டாம்னு தும்பலே; இன்னிக்கே ஓட்டலுக்குப் போய்விடுங்கோ"

"நான் அப்படி தனியா போய்விட்டா, நீ என்னெ திரும்பி வான்னு சொல்லக்கூடாது"

"நான் சொல்லப்போறேனா? நீங்கோ வந்து, என் காலில் விழுந்து, மறுபடியும் ஒங்களோடே குடித்தனம் செய்யும்படியா வேண்டாமெ இருந்தா போதாதா?"

"நான் அந்தமாதிரி மானங்கெட்டு ஒன்னே மறுபடியும் கூப்பிடுவேன்னு கனவிலேயும் நினைக்காதே"

"சரி, பார்க்கலாம், போகிறதாக இருந்தால் சீக்கிரம் போங்களேன்" என்றாள் விமலா.

சுப்பரமணிக்கென்னவோ, அவ்வாறு மனைவியை விட்டுவிட்டுத் தனியே வசிக்கவேண்டும் என்னும் ஆசை கிடையாது. ஆயினும் வாக்குவாதத்

உலகப் பிரசித்தி பெற்ற, அழுத்தமான, சுத்த ஸ்வதேசி பட்டு "மைசூர் பட்டு"தான்.

சிகப்பு அல்லது மஞ்சள் பட்டு மடி பஞ்சா 50"×4 கெஜம் ரூ 11.	வெள்ளைப்பட்டு கோட்டுத்துணி 45'×1 கெஜம் ரூ. 3. அங்கவஸ்திரம் 42"×3 கெஜம் ரூ.6.	புதிய மோஹினி, இந்திராணி, கரை பூஞ தலைப்பு தர்மாவரம் பட்டுப் புடவைகள்.

பூராத் தொகையும் அட்வான்சாகக் கிடைத்தால் தபால், பாக்கிங் செலவில்லை.

D. R. NARAYANASWAMY & SONS., Darmavaram (Anantapur Dt.)

தில் தனியே வசிக்க விரும்புவதாகச் சொல்லியும் ஆய்ற்று. சத்தியமும் செய்தாயற்று. ஆண்பிள்ளையல்லவா அவன். செய்த சபதத்திற்கு விரோதமாக நடக்லாமா? ஆகவே, மனைவிக்குப் பாடம் கற்பிக்க வேண்டும் என்னும் தீர்மானத்துடன் தன்னுடைய துணிமணிகளை யெடுத்துக் கொண்டு, ஓட்டலில் ஓர் அறை வாடகைக்கு எடுத்துக் கொண்டு தனியே வசிப்பதற்குத் தயாரானன். அவன் துணிகளைப் பொறுக்குவதைப் பார்த்தாள் விமலா. அவளுக்கும் தன் கணவனுக்கு நல்ல பாடம் கற்றுக்கொடுக்கவேண்டும் என்னும் விருப்பம்.

"என்னங்கோ, யோசனை பண்ணறீங்கோ? வீட்டை விட்டுப் போறதுக்கு மனசு வரலியா என்ன. சத்தியம் செய்தீங்களே, சத்தியம் என்னமோ ரொம்ப பிரமாதமா" என்ருள்.

"என் துணியெல்லாம் எடுத்துக்கறேன்" என்று பதிலளித்தான் சுப்பரமணி.

"நீங்கோ போய் ரூம் பார்த்து ஏற்பாடு செய்துட்டு எனக்குச் சமாசாரம் சொன்னு நான் அங்கே எல்லாத்தையும் அனுப்பி விடறேன்" என்ருள் விமலா.

வேறு வழி யாதும் காணுதவனுக, சுப்பரமணி தன்னுடைய சட்டையை யணிந்து கொண்டு வெளியே கிளம்பினுன். ஒரு ரூமைப் பார்த்து அட்வான்ஸ் வாடகையைக் கொடுத்தான். ஒரு வேலைக்காரனிடம் தன்னுடைய புது விலாசத்தை எழுதிக் கொடுத்து, மனைவியிடம் சென்று அவள் கொடுக்கும் பெட்டியை எடுத்து வரச் சொன்னுன்.

* * *

தன்னுடைய துணிமணிகளை யெல்லாம் சுப்பிரமணி ஒழுங்காக எடுத்து அடுக்கி வைத்துக்கொண்டான். ஒரு மேஜை, இரண்டு நாற்காலி, ஒரு கட்டில் மாத வாடகைக்கு வரவழைத்து, தன்னுடைய அறையை நன்ருக அலங்காரம் செய்துகொண்டு காலத்தைக் கழிக்கவாரம்பித்தான். முதல் இரண்டு மூன்று நாள் அவனுக்குப் புதிய வாழ்க்கையில் மோகம் இருந்தது. ஆனல் ஒரு வாரம் கழிந்த பின்னர் மீண்டும் மனைவியுடன் காலங்கழிக்க வேண்டும் என்னும் அவா ஏற்பட்டது. அதற்குக் காரணம் ஓட்டல் சப்பாடே. அது அவனுக்குப் பிடிக்கவில்லை. அவனுடைய உடம்புக்கு ஒத்துக்கொள்ளவில்லை. ஆயினும் என்ன செய்வது? மனைவியிடம் என்னவோ தான் மீண்டும் அவளிடம் வருவதில்லையென்று சபதம் செய்தாயிற்று. ஆண்பிள்ளைகள் தாம் செய்துகொண்ட சபதத்தை மீறலாமா? மீண்டும் அவன் விமலாவிடம் சென்று, தனக்குத் தனியே வாழ்வது பிடிக்கவில்லையென்று சொல்லலாமா? அவள் தலைக்கு மேல் ஏறிக்கொள்வாளே. அதற்குப் பிறகு அவன் சொல்கிறபடி நடந்து கொள்ளமாட்டாளே.

ஒருக்கால் ஓட்டல் சாப்பாடு பிடிக்காததுதான் அவன் மீண்டும் குடித்தனம் செய்ய விரும்புவதன் காரணமாக இருக்கலாம். ஒருக்கால் வேறொரு ஓட்டலுக்குச் சென்ருல் சாப்பாடு நன்ருக இருக்குமோ என்னவோ. ஆகவே. ஒவ்வொரு வேளையும் ஒரு புதிய ஓட்டலில் மூன்றணவோ அல்லது நான்கணவோ கொடுத்து விட்டுச் சாப்பிடுவது என்று அவன் தீர்மானித்தான். ஆனல் அதுவும் பிடிக்கவில்லை. மனைவியிருந்தால் அறையை அப்போதைக்கப்போது சுத்தமாக வைத்திருப்பாள். அவனுக்குத் தேவையான சாமான்களையும் வஸ்துக்களையும் எடுத்துக் கொடுப்பாள். வீட்டில்சில்லறை வேலைகளைக் கவனிப்பாள். ஆகையால், அந்த வேலைகளை யெல்லாம் செய்வதற்கென்று ஒரு வேலைக்காரப் பையனை வைத்துக்கொண்டான்.

ஆனல் அப்பொழுதுகூட மனைவியுடன் குடித்தனம் செய்தபோது கிடைத்த வசதிகள் சுப்பரமணிக்குக் கிடைக்கவில்லை. அது மட்டுமல்ல. முன்னைவிட செலவு இரட்டை மடங்கு அதிகமாக ஆக வாரம்பித்தது.

சுப்பரமணிக்கு என்ன செய்வது என்பது விளங்கவில்லை. தான் குடியிருந்த தெருவின் வழியே அன்று சாயங்காலம் சென்ருன். விமலா வாயிலில் இருந்தால் ஒருக்கால் கூப்பிட்டாலும் கூப்பிடுவாள் என்னும் எண்ணமே அதற்குக் காரணம்.

வீட்டு வாயிலில் விமலாவைக் காணும் ஆனல்குடித்தனத்திற்கு வீட்டில் அறைகள் வாடகைக்கு விடப்படும் என்று ஒரு பலகை தொங்கிக் கொண்டிருந்தது. அவனுக்கு ஒரு யுக்தி தோன்றியது உள்ளே சென்ருன். "அம்மா, இந்த வீட்டில் அறைகள் வாடகைக்கு விடுகிருர்களாமே" என்று கூவினுன்.

அவனுடைய மனைவி வெளியே வந்தாள் தன்னுடைய கணவனைக் கண்டதும் அவனை முன்பின் பார்க்காதவள் போல் பாசாங்கு செய்தவாறே, 'என்ன சார் வேண்டும்?" என்று கேட்டாள்.

"குடித்தனத்துக்கு ஒரு அறை."

"இங்கே சமுசாரத்துடன் வருகறவர்களுக்குத்தான் வாடகைக்கு இடம் கொடுக்கப்படும்."

"ஏன்?"

"ஒரு சமையலறையும், படுத்துக் கொள்ளும் அறையையும் ஜோடியாக இருக்கிறது.

இந்தியா கவர்ன்மெண்டில் மெடிகல் ஸன்னதுடன் வைத்தியப் பட்டம் பெற்றவரும், கவர்ன்மெண்டு இந்திய வைத்திய கவர்னிங் பாடி & ஸெண்டிரல் போர்டு மெம்பரும், கவர்ன்மெண்டு வைத்திய கலாசாலை & I. M. S. ஹாஸ்பிடல் பரீக்ஷாதிகாரியுமான

வைத்யரத்ன பண்டிட் யு. ராமநாத சாஸ்திரியாருடைய

(Sastriar in Govt Medical dress)

மஹா பில்வாதி லேகியம்

பித்தவாயு, கீல் பிடிப்பு, பித்த மயக்கம், பலஹீனம், அன்னத் துவேஷம், அஜீர்ணம், மலச் சிக்கல் இவைகளைக் கண்டிக்கும். 1 சேர் கொண்ட டப்பி 1-க்கு ரூபா 3. வி. பி. வேறு.

ஆனந்த பற்பொடி

குணம், ருசி, வாசனை இவைகளில் இது ஒன்றுதான் மார்க்கெட்டில் சிறந்தது. டப்பி 1-க்கு 0—2—9 ஒரு டஜன் கொண்ட பெட்டி 1-க்கு ரூபா 1—14—0. வி.பி.வேறு. எங்கும் கிடைக்கும்.

ஆனந்த பற்பசை

ஆனந்த பற்பொடியை பசை ரூபமாக செய்ப்பட்டிருக்கிறது. ட்யூப் 1க்கு 0-8-0 வி. பி. வேறு எங்கும் கிடைக்கும்.

மேன்மை தங்கிய ஹிஸ் எக்ஸலென்ஸி ஸர் கே. வி. ரெட்டி நாயுடு காரு, Kt, சென்னை மாகாண கவர்னர் அவர்கள் எழுதுகிறர்:—

"வைத்யரத்ன பண்டிட் யு. ராமநாத சாஸ்திரி, D. V. S. அவர்களால தயார்செய்யப்படும் மருந்துகளின் அபாரமான வீர்யத்தற்கு நான் நற்சாக்ஷி கொடுக்க மிகவும் ஸந்தோஷமுள்ளவனுக இருக்கிறேன். இவர் நன்ருய்ப் படித்துத் தேர்ந்த ஸம்ஸ்கிருத வித்வானுக இருக்கிருர். இவர் ஸம்ஸ்கிருததகதிலுள்ள வைத்திய சாஸ்திரங்களை நன்ருய் படித்துப் பரிசோதித்து யதோக்தமான அனேக மருந்துகளைத் தயார் செய்வதில் தமது கியானத்தை உபயோகித்து அவைகளை அனுபவத்திற்குக் கொண்டு வந்து இருக்கிருர். அப்பேர்க்கொத்த இவருடைய மருந்துகளை நான உபயோகித்ததில் அம்மருந்துகள் உண்மையில் வீர்யமுள்ளவைகள் என்பதை நம்பிக்கையுடன் நான் தெரிந்துகொண்டேன்."

நேரில் வருவோருக்கு கன்ஸல்டிங் சார்ஜ் கிடையாது.

சகல ஆயுர்வேத ஔஷதங்களும் கிடைக்கும். கேட்லாக் இனும்.

வைத்தியரத்ன யு. ராமநாத சாஸ்திரி,

வைத்திய ஸித்தாச்ரமம், 39, பஜார்ரோட், மயிலாப்பூர், மதராஸ்

ஸ்தாபிதம் 1913

சவரன் மாத்து தங்கத்துக்கும், அசல் வெள்ளி சாமான்களுக்கும் மேன்மையான வேலைப்பாட்டுக்கும் உத்திரவாதமுள்ள இடம்.

கரம்சந்த் சபில்தாஸ் & ஸன்

நகை வியாபாரிகள

175, சைனுபஜார் ரோட் — மதராஸ்.

காட்லாக்குக்கு எழுதவும்.

அதனைப் பிரித்து வாடகைக்குக் கொடுக்க முடியாது."

"அப்படியானல் நான் இரண்டு அறைகளையும் எடுத்துக் கொள்கிறேன். வாடகை என்ன?"

"முப்பது ரூபாய்."

"இரண்டு அறைக்கா முப்பது ரூபாய்? நான் இருந்த வீட்டிற்கே இருபது ரூபாய்தானே வாடகை."

"உங்களை அதெல்லாம் கேட்கவில்லை உங்களுக்கு இடம வாடகைக்கு விடுவதாகவும் உத்தேசமில்லை. போய் வாருங்கள், சார்" என்ருள் விமலா.

வேறு வழியில்லாததால் சுப்பாமணி முப்பதுரூபாய் வாடகை கொடுக்க சம்மதித்

சேலத்தில் முதல் முதல் ஸ்தாபிக்கப்பட்ட நர்சரி தோட்டம்

3 வருஷத்தில் காய்க்கக்கூடிய ஒட்டுமாஞ்செடிகள், ஒட்டு பழ வர்க்கச்செடிகளும் இன்னும் இதர செடிகளும் கிடைக்கும். இங்கிலீஷ் அல்லது நாட்டுக் காய்கறி. இங்கிலீஷ் புஷ்ப விதைகள், 20 சாம்பல் பாக்கெட் விலை ரூ. 2-10. சாம்பல் பாக்கெட்விலை ரூ 1-4 கேட்லாக இனம்.

ச. கோ. இ. காதர்மீரா சாயபு,

ஹெட் நர்சரி தோட்டம், சேலம்.

தான். மூன்றுமாத அட்வான்ஸும் கொடுக்கவேண்டியதாயிற்று. அட்வான்ஸைப் பெற்றுக்கொண்ட பின்னர், விமலா அவனை நோக்கி, "சார்,

(34-ம் பக்கம் பார்க்க)

கண்ணேட்டம் - பிரமுகர்கள்

சாம்ராஜ்ய விவசாய ஆராய்ச்சி சபையின் வேலைகளைப்பார்வையிடுவதற்காக இங்கிலாந்திலிருந்து வரும் ஸர் ஜான் ரஸ்ஸலுக்கு ஆலோசனை கூறுபவராகவும், காரியதரிசியாகவும் நியமிக்கப்பட்டிருக்கும் ஸ்ரீமான் ஆர். எல். சேதி.

(வலது பக்கம்)
இந்தியாவில் பால்பண்ணை அபிவிருத்தி விஷயமாக ஆலோசனை கூறுவதற்காக இங்கிலாந்திலிருந்து இந்தியாவிற்கு வரும் டாக்டர் நார்மன் ஸி. ரைட்டுக்கு ஆலோசனை கூறுபவராகவும் காரியதரிசியாகவும் நியமிக்கப்பட்டிருக்கும் காப்டன் எ ஸி அகர்வாலா.

பம்பாய் ஹாப்கைன் இன்ஸ்டிட்யூட் டாக்டர் கர்னல் எஸ். எஸ். ஸோகி. பல வருஷ ஆராய்ச்சிக்குப் பிறகு பிளேக் நிவாரணத்திறகாக இவர் ஒரு மருந்து கண்டு பிடித்திருக்கிறூர்.

பம்பாய் கார்ப்பொரேஷன் ஹாலில் காலஞ்சென்ற தாதாபாய் நௌரோஜியின் முகச்சிலை திறந்து வைக்கப்பட்டது

மைசூர் சமஸ்தான போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் மிஸ்டர் எப். எ. ஹாமில்டன் தமது பதவியிலிருந்து உபகாரச் சம்பளம் பெற்று விலகிக் கொள்ளுகிறூர்



கும்பகோணப் ரெவரண்டு ஞானதிக்கம். இவர் சமீபத்தில் கத்தோலிக் டயோஸிஸ் வைகார் ஜெனரலாக நியமனம் பெற்றூர்.

கும்பகோணம் தேவஸ்தானக் கமிட்டிக்குச் சீர்காழி தாலூகாவினின்றும் அங்கத்தினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் கடவாசல் ஸ்ரீமான் கே. இராமய்யர்.

பிராங்கின் மதிப்புக் குறைக்கப்பட்ட பிறகு பாரிஸ் பங்கு பரிவர்த்தனை மாசுமகட்டுகள் மூடப்பட்டன. ஆனால் தெருவிலேயே வியாபாரம் நடத்தப்பட்டது.

மற்ற பக்கங்களில்.

நடிப்பின் வெற்றி (சிறுகதை) 2
ஜோதிர்மண்டலம் 3
விநோதக்கொத்து 5
ஸங்கீதப்பகுதி 6
ஜம்புலிங்கத்தின் திருவிளையாடல்கள் (தொடர்கதை) 9
மெட்ரூஸ் காலிங் (சிறுவர் பகுதி) 12
கொடாக் கணவனும் விடாத மனைவியும் (ஹாஸ்யப்பகுதி) 14
கண்ணோட்டம்- பிரமுகர்கள் 16
இந்தியவர்த்தமானம் 23
நாட்டு நடப்பு- சித்ரக் கண்ணாடி 25
பெருவிரல் மர்மங்கள் 27
தையல்வேலை 28
அதிசயம் ஆனால், உண்மை! 29
மஹாபாரதம் 33
. . னிகதய பிரமுகர்கள் 35
நவகாதரீகம 37

பிரபஞ்ச வர்த்தமானம்

"சுபாஷ் போஸுக்குக் காங்கிரஸ் தலைமை அளிக்க வேண்டும்"

ஜப்பானிலுள்ள இந்திய தேசீயவாதிகளைக்கொண்ட இந்திய சுதந்திரச் சங்கம் சமீபத்தில் டோகியோவில் ஸ்ரீமான் ராஷ் பிஹாரி போஸ் தலைமையில் கூடியது. அடுத்த டிஸம்பர் மாதத்தில் பெய்ஸ்பூரில் கூடும் காங்கிரஸின் தலைமைப் பதவிக்கு ஸ்ரீமான் சுபாஷ் சந்திர போஸின் பெயரைச் சிபார்சு செய்யுமாறு எல்லா மாகாணக் காங்கிரஸ் கமிட்டிகளையும் வணக்கமாகக் கேட்டுக் கொள்வதாக ஏகமனதாக ஒரு தீர்மானம் நிறைவேறியது.

* * * *

அராபியர் வேலை நிறுத்தம் ரத்து செய்யப்பட்டது.

பல மாதங்களாகப் பாலஸ்தீனத்தில் அராபியருக்கும் யூதர்களுக்குமிருந்த தொல்லை இப்பொழுது நீக்கப்படும். அராபியர் வேலை நிறுத்தம் செய்தும் கலகம் விளைவித்துக் கொண்டுமிருந்ததை ரத்து செய்வதென அராபியப் பிரமுகர்கள் கமிட்டியார் தீர்மானித்திருக்கின்றனர். இந்த முடிவு ஏற்படுமுன் அக் கமிட்டியினர் தேசீய அராபியக் கமிட்டி அங்கத்தினர்களுடன் கலந்து பேசினர். இந்தக் கூட்டத்தில் மன்னர் இபுன்ஸாத், இராக் மன்னர் காஸி, டிரான்ஸ்ஜார்டன் அமீர் அப்துல்லா ஆகியோர் விடுத்துள்ள சமாதான வேண்டுகோளை ஏற்பதென முடிவு செய்யப்பட்டது. சமாதான வேண்டுகோளில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டிருக்கிறது:—தற்பொழுது பாலஸ்தீனத்திலிருந்து வரும் நிலைமை கவலைக்கிடமானதாகவிருக்கிறது. நீதியை நிலைநாட்டுவதாகப் பிரிட்டிஷ் சர்க்கார் ஏற்கனவே உறுதி கூறியிருக்கின்றனர். அவர்களது நல்லுணர்ச்சியில் அராபியர் நம்பிக்கை கொண்டு கலகம் செய்வதை விடுத்துச் சமாதானமேற்படுத்த வேண்டுகிறோம்.

* * * *

தொழிற்கட்சி மகாநாடு

இங்கிலாந்து தொழிற் கட்சியின் வருஷாந்திர மகாநாடு சென்ற வாரம் நடைபெற்றது. மிஸஸ். ஜே. எல். ஆடம்ஸன் தலைமை வகித்துச் செய்த பிரசங்கத்தின் சாராம்சம் வருமாறு:—

"வேலையில்லாதோரது காலட்சேபத்திற்கு வழியிருக்கிறதா, இல்லையா எனக் கண்டறியத் தற்போது கையாளப்படும் முறையை ரத்து செய்ய வேண்டும். தொழிலாளருக்கு வீட்டு வசதியளிப்பது சம்பந்தமாகச் சர்க்கார் அமைத்துள்ள திட்டம் மிகவும் அதிருப்திகரமானது.

சர்வதேசச் சங்கத்தை வலுப்படுத்தவேண்டியது அவசியம். பொதுஜன அபிப்பிராயம் எதுவோ அதனபடி நடவடிக்கை எடுததுக்கொள்ள ராஜதந்திரிகள் சிறிதும் தயங்கக்கூடாது. சமாதானம் ஏற்படவேண்டுமென்பதே ஜனங்களின் முக்கிய ஆவல்.

ஸ்பெயினிலுள்ள நமது சகோதரர்கள் பால் நமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்போமாக."

மகாநாட்டில் பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன. ஸ்பானிய விவகாரங்களில் தலையிடுவதில்லையென்ற வேலை முறையை ஆதரிப்பதாக ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

"பிறநாடுகளின் ஆயுத பலத்துக்குத் தக்கவாறு நம்மிடமும் போதிய அளவு ஆயுத பலமிருக்க வேண்டுமென்பதே தொழிற்கட்சியின் வேலை முறையென மகாநாடு வற்புறுத்துவதாகவும், தற்போதுள்ள அரசாங்கத்தின் ஆயுத விஸ்தரிப்புத் திட்டத்தைபபற்றிக் குணதோஷம் கூறத் தனக்குள்ள உரிமையை இம்மகாநாடு எவ்விதத்திலும் விட்டுக் கொடுக்கவில்லையெனவும் சர்க்கார் ஆதிக்கத்திலில்லாத ஆயுத உற்பத்திச் சாலை

அறிவிப்பு.

விஜயதசமியை முன்னிட்டு நமது வாரப் பதிப்பு காரியாலயத்திற்கு விடுமுறையாகும். ஆகையால் அன்று வழக்கம்போல் வாரப் பதிப்பு வெளிவராது. விஜயதசமியன்று வருஷ அனுபந்தம் ஒன்று வெளிவரும். அதன் விலை அணா நான்கு. தபால் மூலம் தேவையானால் ஐந்தணாவிற்கு ஸ்டாம்பு அனுப்பவேண்டும். வாரப் பதிப்பு சந்தாதார்களுக்கு மட்டும் வருஷ அனுபந்தம் இரண்டணாவிற்குக் கொடுக்கப்படும். தபால் மூலம் தேவையானால் மூன்றணாவிற்கு ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

மானேஜர்.

சென்னையில் பண்டித ஜவஹர்லால் நேரு பத்திரிகைக்காரர்களுக்குப் பேட்டியளித்த அவர்களுடன் பேசுகை

களில் தனிப்பட்டவர்களுக்கு மேலும் விசேஷ பாத்தியதைகள் இருந்து வருவதானது உலக சமாதானத்துக்குப் பேராபத்து விளைவிக்கக் கூடியதாகும் என்றும் ஒரு தீர்மானம் நிறைவேறியது. பொதுவுடமை வாதிகள் தங்கள் கட்சியைத் தொழிற் கட்சியுடன் இணைக்க அனுமதிக்குமாறு கோரியிருந்தனர். இவ்விஷயம்பற்றி நாட்டின் பல்வேறு பாகங்களிலிருந்து அனுப்பப்பட்டிருந்த வாக்குச் சீட்டுகள் கணக்கிடப்பட்டுப் பார்த்ததில் பெரும்பான்மையோர் பாதகமாக அபிப்பிராயம் தெரிவித்திருந்தனர். இதன் பேரில் மேற்படி கோரிக்கை நிராகரிக்கப்பட்டது.

* * * *

இத்தாலிய-ஜெர்மனி உறவு

இத்தாலிய வெளிநாட்டு மந்திரியான ஸியானோ (ஸீனர் முஸோலினியின் மருமகன்) ஹிட்லருடன் கலந்து பேசும் பொருட்டு பர்லினுக்குச் செல்வாரென உத்தியோக முறையில் அறிவிக்கப்பட்டிருக்கிறது. இத்தாலியச் செலாவணியின் மதிப்பு குறைக்கப்பட்டிருக்கிறது. ஜெர்மனியுடன் நேசபாவத்தோடு ஒத்துழைப்பது என்ற இத்தாலிய வேலை முறையை மாற்றிக்கொள்ளும் கருத்துடன் மேற்படி செலாவணி சம்பந்தமான நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படவில்லையென்று ஹிட்லருக்கு உறுதி கூறுவதற்கே ஸியானோ பெர்லின் செல்லுவதாகக் கூறப்படுகிறது.

இத்தாலியின் விமானப் படைப் பெருக்கம்

இத்தாலியின் விமானப் படையைப் பெருக்குவதெனத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. ஒரு குறிப்பிட்ட தேசத்தை எதிர்த்து இது செய்யப்படவில்லையாயினும் மத்தியதரைக் கடலிலும், செங்கடலிலுமுள்ள பிரிட்டிஷ் பாதுகாப்புப் படையை பாதிக்குமெனக் கூறப்படுகிறது.

* * * *

பாஸிஸ்டு கட்சி ஆர்ப்பாட்டத்திற்கு எதிர்ப்பு

லண்டனில் கிழக்குப் பாகத்தில் பாஸிஸ்டுக் கட்சியினர் சென்ற 4-ந் தேதி பிற்பகல் ஒரு பவனியும் ஆர்ப்பாட்டமும் நடத்தவிருந்தனர். இது பற்றிய அறிக்கை ஏற்கனவே வெளியாகியிருந்தது. இதற்கு அனுமதி கொடுக்கக்கூடாதென யூதர்களும், தொழிற் கட்சியைச் சேர்ந்தவர்களும் அறிவித்திருந்தார்கள்.

இவ்விஷயமாகத் தங்கள் கண்டனத்தை வெளிப்படுத்தும் முறையில் யூதர் சபை ஒரு லக்ஷம் கையெழுத்துக்கள் கொண்ட ஒரு மகஜரை உள்நாட்டு மந்திரிக்கு அனுப்பியிருந்தது. சுயேச்சைத் தொழிற் கட்சியினர் தாங்கள் போட்டி ஆர்ப்பாட்டம் நடத்தப்போவதாகத் தெரிவித்திருந்தார்கள். அதிகாரிகள் கலகம் ஏற்படக்கூடுமென அஞ்சி, 5000 போலீஸ்காரர்களைக் கொண்டு தக்க பந்தோபஸ்து செய்தனர். ஆயினும் ஜனங்களுக்கும் போலீஸாருக்கும் தகராறு ஏற்பட்டுப் போலீஸார் தடிகளைப் பிரயோகிக்க நேர்ந்தது. இது காரணமாகச் சிலருக்குக் காயமுண்டாயிற்று. பலர் கைது செய்யப்பட்டனர்.

பட்டுச் சேலைகள்!

வருஷத்திற் கொருமுறை வரும் தீபாவளிப் பண்டிகை புதிய ஆடைகளைப் புனைந்துகொள்ளும் விழாவாகும். எனவே, ஆடையில் மேலானதைப் பொறுக்குங்கள்; நேர்த்தியான பட்டுச் சேலைகளையே அணியுங்கள்.

உயர்ந்த ரகம்; கெட்டிச் சாயம்; நேர்த்தியான நெசவு; $1\frac{3}{4}$" கரை (சரிகையுடன்) 44" அகலம்; இந்தியா, பர்மா & இலங்கை பூராவும் யாவராலும் புகழப்படுபவை.

9 கெஜம்	ரூ. 9-0-0	6 கெஜம்	ரூ. 6-12-0
8 ,,	,, 8-0-0	5 ,,	,, 5-15-0
7 ,,	,, 7-7-0	எந்தக் கலரிலும் கிடைக்கும்	

மேலான பட்டுச் சேலைகளின் விவரங்களடங்கிய துண்டுப் பிரசுரமொன்று புடவை வாங்கும் ஒவ்வொருவருக்கும் இனாமாக வழங்கப்படும்.

இக்குறைந்த விலைகள் நிகர விலைகள்; பாக்கிங் இலவசம்; தபால் சார்ஜ் பிரத்தியேகம். இவ்விலைகள் சொற்ப காலத்திற்குத்தான் அமுலிலிருக்கும்; முன்னறிவிப்பில்லாமலேயே எப்பொழுதும் மாற்றப்படும்.

கோட்டா பிரதர்ஸ்,

குடியாத்தம்

ஸ்திரீகளுக்கும், குழந்தைகளுக்கும் உகந்த

நவீன மோஸ்தர் மணி மாலைகள்



18 இஞ்சு முதல் 27 இஞ்சு வரையில் அளவுக்குத் தகுந்தபடி $1\frac{1}{4}$ சவரன் முதல் 20 சவரன் வரையில் — தயாரிக்கப்படுகின்றன. —

கூலி, கல் உள்பட ரூபா. 8

வெள்ளியில் தயாரித்துப் பொன் கில்ட் கொடுக்கப்பட்ட மாலைகள் ரூபாய் 4—0—0.

—: காட்லாக் இனாம் :—

கரம்சந்த் சபில்தாஸ் & ஸன்,

175, நைனியப்பநாயக்கன் ... 175, சைனாபஜார் ரோட், :: :: மதராஸ்.

கணேஷ் பிலிம்ஸின் ''கவிரத்ன காளிதாஸ்'' என்ற தமிழ் பேசும் படத்திலிருந்து ஒரு காட்சி.

பிரபாத் பிலிம் கம்பெனியாரின் ''அமார் ஜோதி'' என்ற ஹிந்தி பாஷைப் பேசும் படத்திலிருந்து ஒரு காட்சி.

காங்கி

ஜவஹ



சென்னைக் கார்ட்பொரேஷன் பண்டித ஜவஹர்லால் நேருவுக்கு ஒரு உபசாரப் பத்திரம் படித்துக் கொடுத்தது. காங்கிரஸ் தலைவர், மேயர் ஜனாப் அப்துல் ஹமீத்கானுடனும் மற்ற அங்கத்தினர்களுடனும் காணப்படுகிறார்.

(கீழ்ப் படம்) காங்கிரஸ் தலைவர் பிரஜா உரிமைச் சங்கத்தின் சென்னைக் கிளையை ஆரம்பித்து வைத்தார்.



(மே

சென்னையி
நேரு தமிழ்
கமிட்டித் த
எஸ். சத்
தங்கியிருந்
ஸ்ரீமான் சத்
ரது
டித ஜவஹ
ஸ்ரீமான்
லாச்சாரிய
ரைக்

சன்னையில்

...மகாசபைத் தலைவர்

...ண்டித

...ர்லால் நேரு

காங்கிரஸ் தலைவர் சென்னையில் தொழிலாளர்கள் கூட்டமொன்றில் பேசினர். சுயராஜ்யம் முக்கியமாக விவசாயிகள், தொழிலாளர்கள் முதலிய பாமர ஏழை மக்களுக்குத்தான தேவையென்றும் சுயராஜ்யமில்லாமல் அவர்களுக்கு நன்மை கிடைக்காதென்றும் அவர் தொழிலாளர்களுக்குச் சொன்னர்.

(கீழ்ப்படம்) கோடம்பாக்கத்திலுள்ள ஹரிஜனக் கைத்தொழில் பள்ளிக்கூடத்தைப் பண்டிதர் திறந்து வைத்தார். ஸ்ரீமான் கே. நாகேஸ்வர ராவ் பந்துலுவும், ... திவான்பகதூர் வி. பாஷ்யம் அய்யங்காரும் அவருடன் காணப்படுகின்றனர்.

...படம்)
... ஜவஹர்லால்
... காங்கிரஸ்
...வர் ஸ்ரீமான்
...மூர்த்தியுடன்
... படத்தில்
...மூர்த்தி அவ
... பண்
...ல் நேரு
... ராஜகோபா
... முதலியோ
...ணலாம்.



லண்டனிலிருந்து அமெரிக்காவிற்குத் தனியாக விமானத்தில் சென்ற முதல் ஸ்திரீயான மிஸஸ் பெரில் மார்கஹாம் இங்கிலாந்து திரும்பிய போது ஸதாம்டன் மேயர் அவரை வரவேற்ற காட்சி.

இங்கிலாந்து விமான ஸர்வி ஸைச் சேர்ந்த மிஸ்டர் எப். ஆர். டி. ஸ்வெயின். இவர் வலது பக்கப் படத்தில் காணப் படும் விமானத்தில் 49,967 அடி உயரத்தில் பறந்தார். இந்த உயரத்தில் வேறு எந்த விமானியும் இதுவரை பறக்க வில்லை.



அபிஸீனியாவின் துரோகி. பாரிஸ் நகரில் அபிஸீனிய ஸ்தானீகராகவிருந்த வோல்டி மரியம் அங்குள்ள இத்தாலிய ஸ்தானீகர் முன்பு இத்தாலி யின் பரிபூர்ண ஆதிக்யத்தை ஏற்றுக்கொள்வதாகப் பிரமா ணம் செய்தார். அவர் ஒப்பந் தத்தில் கையெழுத்திடுவதைக் காணலாம்.

அகில இந்திய நர்ஸ்கள் மகாநாடு சென்னையில் நடைபெற்றது. மகாநாட்டைத் திறந்துவைத்த லெப்டினன்ட் கர்னல் நியூகோம் மத்தியில் காணப்படுகிறார்.

இந்திய வர்த்தமானம்

பத்திரிகை உரிமை பறிமுதல்

"அமிர்தபஜார்" பத்திரிகையில் வெளியான சில தலையங்கங்களை ஆக்ஷேபித்து அப்பத்திரிகை சட்ட சபை நிருபருடைய அநுமதிச் சீட்டை இந்தியா சட்ட சபைத் தலைவர் ரத்து செய்துவிட்டார். இதனால் பத்திரிகை உரிமைக்கு ஏற்பட்ட நிர்ப்பந்தமாகிற அவசர விஷயத்தைப்பற்றி விவாதிப்பதற்காக ஸ்ரீமான் பல்லிவால் இந்தியா சட்ட சபையில் ஒரு அவசரப் பிரேரணை கொண்டு வந்தார். அவர், பத்திரிகை நிருபருக்கும், தலையங்கங்களுக்கும் சம்பந்தமில்லையென்று கூறினார். ஸ்ரீமான் பல்லிவால் தம் உத்தரவைப் படித்ததுண்டாவென்று தலைவர் கேட்டார். இல்லையென்று ஸ்ரீமான் பல்லிவால் சொல்லவும், "கனம் அங்கத்தினர் அவ்வுத்தரவைப் படியாமல் பிரேரணை கொண்டு வந்தது தவறு. தலைவர் உத்தரவுபற்றி அவசரப் பிரேரணை கொண்டுவரவியலாதென அவருக்குத் தெரிந்திருக்க வேண்டும்" என்று தலைவர் சொல்லிப் பிரேரணையை நிராகரித்துவிட்டார்.

* * * *

[illegible] அவா சர்க்கரை அபரிமிதமாக [illegible] றக்குமதியாகுமா?

[illegible] ஹாலந்து தங்க மதிப்பு [illegible] றையிலிருந்து விலகிவிட்ட [illegible] யால் ஜாவாவிலிருந்து இந் [illegible] யாவில் அபரிமிதமான சர்க் [illegible] ர இறக்குமதியாகுமென [illegible] க்கார் எதிர்பார்க்கிறார்களா [illegible] ன இந்தியா சட்டசபை [illegible] மிஸ்டர் ராம்ஸே ஸ்காட் [illegible] க்காரைக் கேட்டார். ஸர் [illegible] ம்ஸ் கிரிக் பதிலளிக்கையில் [illegible] ாவிலிருந்து அபரிமிதமாக சர்க்கரை இறக்குமதியாகுமென்று எதிர்பார்க்கவில்லையென்றும், ஹாலந்து தங்க மதிப்பு முறையிலிருந்து விலகியதால் ஜாவாவிலிருந்து இந்தியாவில் இறக்குமதியாகும் பொருள்களின் ரூபா விலை அதிகரியாதென்றும் கூறினார்.

* * * *

ராமசந்திர சர்மாவின் உண்ணாவிரதம் முடிந்தது

கல்கத்தா காளிகாட் ஆலயத்தில் மிருக பலியை நிறுத்த வேண்டுமென்பதற்காகப் பண்டித ராமச்சந்திர சர்மா 39 நாட்கள் உண்ணாவிரதமிருந்து பிறகு விரதத்தை முறித்துக் கொண்டார். பண்டித மாளவியா, ஸ்ரீமான் பிர்லா முதலியோர் தலையிட்டதே இதன் காரணம். சென்ற வருஷமும் ஸ்ரீமான் சர்மா உண்ணாவிரதமிருந்து இதே மாதிரி தலைவர்கள் தலையிட்டால் உண்ணாவிரதத்தை நிறுத்திக் கொண்டது நேயர்களுக்கு ஞாபகமிருக்கும்.

* * * *

குமாரராஜா முத்தையா செட்டியாருக்கு மந்திரி பதவி

சென்னை கவர்ன்மெண்டு கல்வி மந்திரி திவான் பகதூர் எஸ். குமாரஸ்வாமிரெட்டியார் அவரது பதவியை ராஜிநாமாச் செய்துவிட்டார். அவரது ஸ்தானத்தில் செட்டிநாட்டு குமாரராஜா எம். ஏ. முத்தையா செட்டியார் நியமிக்கப்பட்டிருக்கிறார். டாக்டர்கள் யோசனைப்படி கனம் ரெட்டியார் தேக அசௌக்கியத்தால் ராஜிநாமாச் செய்ததாகக் கூறப்படுகிறது.

* * * *

சாஸ்திர ஆராய்ச்சிக்காக 11லக்ஷம் நன்கொடை

வங்காள மாகாணத்தில் சாஸ்திர ஆராய்ச்சிக்காக ரூ. 11 லக்ஷம் அளிப்பதென்று ஆசாரிய பி. ஸி. ராய் தீர்மானித்திருப்பதாகச் செய்தி கிடைத்திருக்கிறது. பெங்கால் கெமிகல் அண்டு பார்மக்யூடிகல் ஒர்க்ஸ் கம்பெனியில் அவருக்குப் பல வருஷங்களாகக் கிடைத்த லாபம் 11 லக்ஷ ரூபாயாகும். இத்தொகையை சாஸ்திர ஆராய்ச்சி அபிவிருத்திக்காக உபயோகிக்க வேண்டுமென்பது அவருடைய கருத்து.

* * * *

தன் குழந்தையைக் கொன்று உண்ட பர்மிய ஸ்திரீ

பெகு ஜில்லாவைச் சேர்ந்த ஒரு கிராமத்தில் பர்மிய தாய் ஒருத்தி தனது நாலுமாதக் குழந்தையைக் கொன்று அதனைச் சமையல் செய்து அந்த மாமிசத்தைத் தானே உண்டாள் என்ற பயங்கரமான செய்தி ரங்கூனிலிருந்து கிடைத்திருக்கிறது. போலீஸார் வீட்டைச் சோதனை செய்தபோது சமையலறையில் துண்டிக்கப்பட்ட குழந்தையின் தலையையும் பாகஞ் செய்யப்பட்ட சில மாமிசக் கண்டங்களையும் கண்டெடுத்தனர். அந்த ஸ்திரீ இப்பொழுது கைது செய்யப்பட்டிருக்கிறாள்.

1 & 2 மேலக்கோபுர வீதி

மதுரையில்

நரசுஸ்

சுத்தமான

காபித்தூள், நீலகிரி காப்பிக்கொட்டை

தேயிலை

முதலியவைகளை விற்பனை செய்ய
12-வது கிளை ஆபீஸ் திறக்கப்பட்டிருக்கிறது.

உயர்ந்த சரக்கு! நயமான விலை!!

நாகரீக மின்சார இயந்திரங்களுடன் அமைக்கப்பட்டிருக்கிறது.

நரசுஸ் மான்யுபாக்சரிங் கம்பெனி,

மதுரை, பிராஞ்சு:

H. O. SALEM.

தென்னிந்தியாவெங்கும் கிளை ஆபீஸ்கள்:—

பாட்ணு ஹைக்கோர்ட்டில் வேடிகுண்டு விபத்து

சென்ற 5-ந் தேதி பிற்பகல் சுமார் 2-30மணிக்கு பாட்ணு ஹைக்கோர்ட்டில் சீப் ஜஸ்டிஸ் விசாரணை நடத்தி வந்த கோர்ட்டில் திடீரென ஒரு வெடி விபத்து நேரிட்டது. கோர்ட்டிலிருந்த வக்கீல்களும், கட்சிக்காரர்கள் மற்றவர்களும் குழப்பமுற்று ஓட்டம் பிடித்தனர் சீப ஜஸ்டிஸ் அவருடனிருந்த ஜஸ்டிஸ் ஜேம்ஸ் இருவரும் கோர்ட்டை விட்டு வெளியே போய்விட்டார்கள். இதனுல் எல்லாக் கோர்ட்டுகளிலும் வேலை நின்றுபோயிற்று. போலீஸார் இது சம்பந்தமாக விசாரணை செய்து மூன்று பேர்களைக் கைது செய்திருப்பதாகச் செய்தி கிடைத்திருக்கிறது.

* * . * *

இந்தியா மந்திரி, ஜில்லா கலெக்டர் மன்னிப்பு

இந்தியா மந்திரியும் ஸாஹாபாத் ஜில்லா கலெக்டரும் கோர்ட்டை அவமதித்ததாக குற்றஞ் சாட்டப்பட்ட வழக்கில் பாட்ணு ஹைக்கோர்ட்டார் தீர்ப்புக் கூறியிருக்கின்றனர்.

மேற்படி வழக்கின் சாராம்சமாவது:—முருளிமலையில் சுண்ணும்புக் கல்லெடுக்கும் உரிமையை கச்வார் கம்பெனியார் குத்தகைக்கு எடுத்துக் கொண்டிருந்தார்கள். குத்தகை பறிமுதல் செய்யப்பட்டுவிட்டதாக 1934-ம் வருஷம் ஏப்ரல் மாதம் இந்தியா மந்திரி மேற்கண்ட கம்பெனிக்கு நோட்டீஸ் கொடுத்தார். இதன் பேரில் கச்வார் கம்பெனியார் வழக்குத் தொடர்ந்தார்கள். குத்தகை பறிமுதலாகவில்லையென்றும் வாதிகளின் உரிமையில் தலையிடக்கூடாதென்றும், 1935-ம் வருஷம் ஹைக்கோர்ட்டார் தீர்ப்புக் கூறினர்.

அதற்கிப்பால் இந்தியா மந்திரியிடமிருந்து குத்தகை பெற்றதாகச் சொல்லி கல்யாண்பூர் கம்பெனியார் முருளி மலையில சுண்ணும்புக்கல் பொறுக்கினுர்கள். ஸாஹாபாத் கலெக்டர் மிஸ்டர் வில்லியம்ஸ__ம் இவ்வேற்பாட்டுக்கு உடன்பாடாக விருந்தார். கோர்ட்டு உத்தரவை அவமதித்து இந்தியா மந்திரியும் கலெக்டரும் நடந்திருப்பதாகவும், கல்யாண்பூர் கம்பெனியாரும் இவர்களுக்கு உடந்தையாகவிருந்ததாகவும் கச்வார் கம்பெனியார் மனுச் செய்து கொண்டார்கள்.

"இந்தியா மந்திரி, கலெக்டர், கல்யாண்பூர் கம்பெனி மானேஜிங் டைரெக்டர் ஆகியோர் நிச்சயமாகக் கோர்ட்டையவமதித்த குற்றத்திற்குள்ளாகியிருப்பதாகவும் அவர்கள் மன்னிப்புக் கேட்பதால் தாம் தண்டனை விதிக்கவில்லையென்றும், வாதி கம்பெனியின் செலவில் பாதியை இந்தியா மந்திரியும், பாதியை கல்யாண்பூர் கம்பெனியும் கொடுக்கவேண்டு"மென்றும் ஜட்ஜ்கள் தீர்ப்புக் கூறினர்.

இந்தியா மந்திரி கோர்ட்டை அவமதித்த குற்றம்செய்ததாக இந்தியாவில் தீர்மானிக்கப்படும் முதல் வழக்கு இதுதானென்று சொல்லப்படுகிறது.

* * * *

திருவல்லிக்கேணி ஸ்ரீ நிகமாந்த மகாதேசிகன உத்ஸவம்.

கான்ஸ்டபிள் வேலைக்கு பி. ஏ. பி. எல். பட்டதாரி

சாதாரண கான்ஸ்டேபிள் உத்தியோகங்களுக்கு நன்கு படித்தவர்கள் ஏராளமாக மனுப் போட்டிருப்பதாக பஞ்சாப் மாகாண ஜில்லாக்களிலிருந்து செய்திகள் கிடைக்கின்றன. பஞ்சாபில் வேலையில்லாத் திண்டாட்டத்தின் கடுமை இதிலிருந்து ஒருவாறு புலப்படும். 20 பட்டதாரிகளுள்பட 500 பேர் ஐந்து கான்ஸ்டேபிள் உத்தியோகங்களுக்கு மனுப்போட்டதாக மாண்ட் கோமரியிலிருந்து செய்தி கிடைத்திருக்கிறது. ஒரு பி ஏ. பி. எல். பட்டதாரி உள்பட அறுவர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள். சியால் கோட்டில் ஆறு கான்ஸ்டேபிள் உத்தியோகங்களுக்கு 150 பேர் மனுச் செய்து கொண்டனர். இவர்களில் பெரும்பாலோர் மெட்ரிக்குலேஷன் படித்தவர்களாவர். இவர்களில் 11 பேர் முதலிலும் அறுவர் பின்னரும் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

* * * *

தேர்தலில் அதிகாரிகள் தலையீடு

ஐக்கிய மாகாண காங்கிரஸ் கமிட்டி காரியதரிசி பின்வரும் அறிக்கையை வெளியிட்டிருக்கிருர்:—

மான்பூரில் நடந்த தேர்தல் பிரசாரத்தில் சர்க்கார் அதிகாரிகள் தலையிட்ட செய்தியொன்று இப்போது தெரிய வந்திருக்கிறது. அங்கே அக்டோபர் 5-ந் தேதியன்று ஜில்லா காங்கிரஸ் கமிட்டியினுதரவில் ஒருகூட்டம் நடக்கவிருந்தது. அதை நடத்தாதிருக்கும்படி சப் டிவிஷனல் ஆபீஸர் கி. பு. கோ. 144-வது பிரிவுப்படி உத்தரவிட்டு விட்டார். தேசிய விவசாயிகள் கட்சிக் காரியதரிசியான ராஜா மகேச்வராதித்ய சேட் என்பவரின் அபேட்சையை யாதரிப்பதற்காக அக்கூட்டம் கூட்டப்பட்டிருந்தது. சப் டிவிஷனல் மாஜிஸ்திரேட்டு சில போலீஸ்காரர்களோடும் சப் இன்ஸ்பெக்டர்களோடும் அங்கே வந்து அக்கிராமத்திலிருந்து 5 பர்லாங் தூரத்திற்குள் கூட்டத்தை நடத்தக் கூடாதென்று சொல்லி உத்தரவைச் சாதரா செய்தார். பிறகு பக்கத்துக் கிராமமொன்றில் கூட்டம் நடந்தது. சுமார் 3,000 கிருஷிகர்கள் வந்திருந்தனர். ஒரு ஊர்வலத்தையும் அவர்கள் தடுத்துப் பத்துப் பேருக்கு மேல் கூடலாகாதென்று உத்தரவிட்டுவிட்டார்கள்.

உயர்ந்த
வைரங்கள்
T. R.
ஜோஷி & சன்ஸ்,
Diamond Merchants
38, ஏகாம்பரேசுவரர் அக்ரஹாரம்
பி டி. மதராஸ்

30ஞு பிரசித்தி பெற்றது
வாயுமுக்தா
வலி பைத்தியம் இவற்றிற்குச் சிறந்த நிவாரணி
ஆயிரக்கணக்கான ஸ்திரீகள்-பலவீனர்களும். கர்ப்பிணிகளும்—பிதற்றல், அழுகுரல் கிளப்பல், அடித்துக்கொள்ளுதல், நரம்பு பலவீனம். பித்தமயக்கம். வலி. இவற்றுல் கஷ்டப்படுகிருர்கள். இவ்வளவையும் இம் மருந்து 24 மணி நோத்தில் நிறுத்திவிடுகிறது. பிரக்ஞையின்மை, இழுப்பு. 10 நிமிஷத்தில் மறைகின்றன.
10 நாள் மருந்து ரூ. 2.
30 நாளுக்கு ,, ரூ. 5.
தபால் செலவு தனி. ஆங்கிலத்திலேயே கடிதமெழுதுக.
C. L. NAMAWALLA
Palace Road, Baroda

கொசு வலைகள்.

பிரத்யேக வலுவான வெள்ளை வலைகளாலானவை. நல்ல தையல். நீடித்துழைப்பவை, வெளுத்த பச்சை, நீலம், சிகப்பு, மஞ்சள் முதலிய கலர்களிலும் கிடைக்கும். வெள்ளையா கலரா என்பதைக் குறித்தெழுக.

நீளம்	அகலம்	உயரம்	சாதா	உயர்ந்தது	மேலானது
அடி	அடி	அடி	ரூ.	ரூ.	ரூ.
6	3½	3½	1-4	1-8	2-4
6	4	4	1-8	1-12	2-6
6½	4½	4½	1-12	2-4	2-12
7	5	5	2-4	2-12	3-4
7½	6	6	2-12	3-4	4-4

தபால் செலவு தனி. பாக்கிங் இலவசம். இலவசம் ஏககாலத்தில் மூன்று வலைகள் வாங்குவோருக்கு 6X4X4 வலை ஒன்று இலவசம்.
Bally Mosquito Net Factory,
P. O. Bally Dist. HOWRAH.

THE RELIABLE HOUSE

MURCH & SEMOUR
MARSHAL ROAD, EGMORE, MADRAS.

பத்மராஜா
இனிய துப்பறியும் தமிழ் நாவல்.
ஸ்ரீமதி பதமாஸனி எழுதியது
விலை ரூ. 1—8.
மானேஜர், சுதேசமித்திரன் ஆபீஸ், சென்னை.

நாட்டு நடப்பு - சித்திரக் கண்ணாடி

பிரெஞ்சு இந்திய புதிய கவர்னர் மான்ஷியர் க்ராகிஷியோ புதுச்சேரி வந்து சேர்ந்தார். சமீபத்தில் வேலை நிறுத்தம் செய்த புதுச்சேரி கால்வே காலேஜ் மாணவர்கள் அவரைப் பேட்டி கண்டபோது எடுத்த படம்.

"காஸ்மிக் கிரணங்கள்" என்றதொரு புதிய கிரணங்களைப்பற்றி அமெரிக்க டாக்டரான மிஸ்டர் நெஹர் சென்னையில் ஆராய்ச்சிகள் நடத்தி வருகிறார். அவர் சாஸ்திரீயக் கருவிகளை பலூனில் வைத்து ஆகாயத்தில் அனுப்பிக்கொண்டிருப்பதைப் படத்தில் காணலாம்.



லாகூர் மதராஸிகள் சங்கத்தின் உப தலைவர் ஸ்ரீமான் ஆர். பி. சாரதி சென்னைக்கு உதவி அக்கௌண்டட் ஜெனரலாக மாற்றப்பட்டுச் செல்வதையொட்டி அவருக்குச் சங்க அங்கத்தினர்கள் ஒரு உபசாரம் நடத்தினர்.



மார்கேட்டில் கன்ஸர்வடிவ் கட்சி மகாநாடு நடைபெற்றது. அதில் கலந்துகொள்ளச் சென்றவர்கள். ஸர் ஸாமுவல் ஹோரையும் படத்தில் காணலாம்.

சமீபத்தில் நாங்குனேரி ஸ்திரீகள் சங்கத்தின் வருஷாந்திரக் கொண்டாட்டம் நடைபெற்றது.

வெற்றி கிட்டியது

என மிஸ்டர்...........22-6-36உ பம்பாயிலிருந்து எழுதுகிறார்.

"தங்கள் "திபெத் மூலிகை" யால் தான் நான் மெட்ரிக் பரீக்ஷையில் தேறினேன்."

"திபெத் மூலிகை"யால் கீழ்க்கண்டவை சித்தியாகின்றன; லாமா யோகியின் வரப்பிரசாதம்.

வசீகரன் ஆண் பெண் இரு பாலருக்கும் இடையில் துனபமமான காதலை உடனே விளைவிக்கும். இதை அணிபவர் அதன ஆச்சரிய சக்தியை விரைவில் அறிவர். விலை ரூபா 3-8-0

2. வியாபாரமும், தொழிலும்:— நிச்சயமான தொழில் விருத்தியும லாபமும்சித்திக்கும். விலைரூ. 3-8-0

3. வியாஜ்யங்கள்:—இதன் சக்தியால் நம்பமுடியாத எவ்விதவியாஜ்யங்களும் ஜெயமாகும். விலை ரூ. 3-8-0

4. வியாதிகள்:— முடியாதெனக் கைவிடப்பட்ட சகலவித கொடிய ரோகங்களும் அடியோடு நீங்கும். விலை ரூபா 3-8-0 5. உத்தியோகம்:—வேலையில்லாத திண்டாட்டத்தில் அவதிபபடும் இளைஞருக்கு அவரவர் ஸ்திதிக்குத் தகுந்தபடி உத்தியோகம் கிடைக்கும். சம்பள உயர்வும் உத்தியோக மேன்மையும் நிச்சயம். விலை ரூ. 3-8-0 6 பரீக்ஷைகள்:- எவ்விதப் பரீக்ஷைகளிலும் நிச்சயமாய்த் தேறலாம். விலை ரூபா 3-8-0 7. சத்ருக்களை ஜெயித்தல்:—எவ்வளவு அபாயகரமான விரோதிகளும் இதை அணிபவர் முன், முழந்தாளிட்டுப் பணிவர். விலை ரூபா 3-8-0 8. கிரஹ தோஷம்:-எல்லாவிதமான கிரஹ தோஷஙகளும் சாந்தியாகும். விலை ரூபா 3-8-0 9. ஆரோக்யமும், செல்வமும்:—எளிதில் சித்திக்கும். விலை ரூ. 3-8-0

அறிவிப்பு:—இந்த சாஸ்திரஙகளில் நம்பிக்கை உள்ளவர்கள் மாத்திரம் தங்கள் நோக்கம் இன்னதென்பதைக் குறித்து எழுதவும். ஒவ்வொரு நோக்கத்துக்கும் தனிப்பட்டமூலிகை அவசியம். ஒரு மூலிகையின் விலை ரூபா 3-8-0. தபால் சார்ஜு வேறு. ஒரே தடவையில் 3 மூலிகைகள் வாஙகினால் தபால் சார்ஜ் உள் பட ரூ. 9-6-0.

BIJOYA LODGE, (S.M.W.)
P. O. SALKIA HOWRAH

நரையை ஒழியுங்கள்!

இந்த ஆயிலால் தலைநரை ஒழிந்துவிடும். வேரிலிருந்தே கூந்தல் கருமை பெறும்; 60-வயது வரை அப்படியே இருக்கும். பலனில்லையேல் 2 மடங்கு கிரயம் வாபீஸ். சொற்ப நரைக்கு ரூபா 3-க்கும், கால்பங்கு நரைககு ரூபா 5-க்கும் பாதிக்கு மேலோ அல்லது பூராவுமோ விழுந்தால் ரூபா 9-க்கும் ஆயில் வாங்குக

கடிதங்கள் ஆங்கிலத்திலேயே எழுதப்படவேண்டும்

BALA KALA STORES,
P. O. Kansi Simri, (Darbhanga)

10 வருஷம் உத்திரவாதமுள்ள புது மாதிரியான பஞ்சவர்ண கல்செயின்கள்

(செயின் 1-க்கு

ரூபாய் 5-0-0.

எஙகள் ரோல்டு கோல்டு செயின்கள் ஐந்துவித நிறமான செயற்கை கற்கள் வைத்துக் கட்டிய இந்த புது மோஸ்தர் செயின்களை குழந்தைகளும், பெரியவர்களும் அணிந்து ஆனந்த மடையலாம்.

(கேட்லாக இலவசம்)

R. S. பிரகாசம் & Co,
ரோல்டு கோல்டு ஜுவல்லர்ஸ்.
187 சைனு பஜார் ரோட், ஜி. டி.
மதறாஸ்



குமார சஞ்சீவினி
ரிஜிஸ்டர்ட்
குழந்தைகளின்
ஈரல்-குலை-ஜுரக்கட்டி
வியாதிகளுக்கு
நிகரற்ற குணமுடையது
வைத்தியர். அண்ணாமலை முதலியார்
வைத்தியர் அண்ணாமலை தெரு, மயிலாப்பூர், சென்னை

வெண்குஷ்டம், பெரு வியாதி

இம்மருந்தை உபயோகித்தால் இவ்விரு வியாதிகளும் ஒழியும் ஹக்கீம்கள், வைத்தியர்கள், கவிராஜர்களின் வைத்தியத்தில் பலனேற்படாமல் போயிருந்தால்கூட இதை உபயோகியுங்கள். பலனில்லையேல் ரூபா 500 இனாம். விலை ரூபா 2.

Vaidyaraj Akhil Kishore Ram,
No, 32/5, P. O. Katrisarai-(Gaya)

பிரபல ஜோதிஷர்

மஹாராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசுபெற்றவர். ஒரு ஜாதகம் கணிக்க ரூபா 2. 1 வருஷ மாதவாரிப் பலன் எழுத ரூபா 5. திர்காலத்தைப் பற்றின 3 கேள்விகளுக்கு ரூ. 1. மேல் கேள்வி 1-க்கு அணா 8. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை. பண்டித காழியூர் ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார், 58, லஸ் சர்ச் ரோடு, மைலாப்பூர், மதராஸ்.

ரூ. 100 இனாம்

(மாந்திரீக மோதிரம்)



காதல் விஷயங்களில் வெற்றியைத் தரும். பரீக்ஷையில் தேர்ச்சி உண்டாகும், உத்தியோகம், புத்திர பாக்கியம், செல்வம் முதலியவைகளைத் தரும். வியாஜ்ஜியஙகளில் வெற்றி, வியாதிகள் நீங்கும். அதிர்ஷ்டம் உண்டாகும். இதை வாங்கி வைத்துக் கொள்ளுஙகள். விலை ரூ. 2.

BENGAL MESMERISM HOUSE,
(S. M.) Panchpota, BENGAL



[ஒரு மனிதருடைய உண்மை நிலைமையைத் தெரிந்து கொள்ளக் கட்டைவிரல் வழிகாட்டியாகவிருக்கிறது. இது பற்றியே கட்டைவிரலை மாத்திரம் பதியவைத்து அடையாளமாக வைத்துக்கொள்ளுகின்றனர்போலும். கட்டை விரலைக் கொண்டே ஒருவரின் குணாதிசயங்களைத் தெரிந்துகொள்ளலாம். இதுசம்பந்தமான விவரங்களை ''சக்திதாஸன்'' இவ்வாறு விவரிக்கிறார்.]

கட்டை விரல்

ஆதிகாலத்தில் கையைப் பார்த்ததும் கட்டைவிரலைக் கொண்டு குணாதிசயங்களைக் கண்டுகொண்டதாய்த் தெரிகிறது. சர்க்காரிலும் குற்ற இலாகாவிலும் கட்டைவிரலை மாத்திரம் பதிய வைத்து அடையாளமாய் எடுதது வைக்கின்றனர். இது விஷயத்தில் ஆராய்ந்து நிபுணர்களாயும் இருந்து வருகின்றனர். ஒரு மனிதருடைய உண்மை நிலைமையைத் தெரிந்துகொள்ளக் கட்டைவிரல் வழிகாட்டியாயிருக்கிறதென்று சொல்லுகின்றனர். ஒவ்வொருவர் கையாக ஆராய்ந்து பாருங்கள். இந்தக் கட்டை விரல் தனி அமைப்பாயிருக்கும்.

ஐந்து விரல்களும் பஞ்சபூதங்களைக் குறிப்பதாகும். அதில் கட்டை விரல், ஆகாசம் போல், மற்ற விரல்களுக்குத் தாரகமாகிறது இந்தக் கட்டை விரல் பிரவிர்த்தியில் ஒன்றுபடுமையன்றி மற்றக் காலங்களில் தனித்திருப்பது யாவருக்கும் தெரிந்த விஷயம். கட்டை விரலும் ஆள் காட்டி விரலும் சேர்ந்தால் சின் முத்திரையாகும். இது சாதனத்துறையிலிருப்போர் பின்பற்றப்படுகிறது.

கட்டை விரலோடு மற்றிரண்டு விரல்கள் சேர்ந்து மூன்றும் ஒன்றானால் 'திரிபதம்' என்று எல்லா மதஸ்தர்களும் மேன்மையாய்க் கருதுகின்றனர். தானம், ஆசீர்வாதம்செய்வதில் கௌரவம் பெற்றது. வைதீகமாயுள்ளவர்களுக்கு இதன் ரகஸ்யம் தெரியவரும்.

கட்டைவிரலை ஆராயுங்கால் மூன்றாய்ப் பிரித்துக்கொள்ள வேண்டும். வாழ்க்கையில் இம்மூன்றும் உயர்வைத் தரக்கூடியது. இம்மூன்றுமின்றி எவ்வளவுதான் கலாவல்லவனாயிருந்தாலும் பட்டதாரியானாலும் பயன்படாது.

கட்டைவிரலில் நகமுள்ள (அங்குலாஸ்தி) பாகம் முடிவான நிலையையும் உறுதியான தன்மையையும் குறிக்கும்.

இரண்டாம் அங்குலாஸ்தி காரண காரியத்தையும், தர்க்க நிலையையும் காட்டும். அன்பையும் அனுதாப உணர்ச்சியையும் மூன்றாம் அங்குலாஸ்தி விளக்குகிறது.

இந்த ஒரு விரலுக்கு மாத்திரம் மூன்றாம் அங்குலாஸ்தி உள்ளங்கையோடு கலநது சுக்கிர்மேடாய் விளங்குகிறது. உங்கள் கையைப் பார்த்துத் தெரிந்துகொள்க

முதல் அங்குலாஸ்தி இரண்டாவதைவிட நீண்டிருந்தால், முதலில் வேலை செய்துவிட்டு அதன் பிறகே யோசனை செய்வதாயிருக்கும். விசாரமற்ற அல்லது யோசனையற்ற வேலை பிடிவாதத்தைக் காட்டுவதாகும். இதனால் குற்றம் அதிகரிக்கும். தனக்குத்தானே திருந்தி உண்மையையறியும் வரை மற்றவர்களால் திருத்த முடியாது. தங்கள் தவறுகளை நினைத்துத் தனிமையில் சங்கடப்பட்டாலும் அதை ஒப்புக்கொள்ளார்.

இரண்டாம் அங்குலாஸ்தி முதலாவதைவிட அதிகம் நீண்டிருந்தால், விவகாரங்களை நன்றாய் ஆராய்ச்சி செய்வார். ஆனால் முடிவாய் தீர்மானிக்க முடியாது.

மூன்றாம் அங்குலாஸ்தியாகிய சுக்கிரமேடு முக்கோணமாய் விசாலித்தும் உப்பலாய் கம்பீகரித்திருந்தால், ஆத்மாவில் அன்பைச் செலுத்தி, தெய்வீகமான பேரன்பால் ஆனந்தமாயிருப்பர். இந்த அங்குலாஸ்தி சிறுத்து மேடு பள்ளத்துடன்காணப்பட்டால் பாசமுள்ள அன்புடையவராயிருப்பர்.

கட்டைவிரல் ஒடுங்கி அமைப்பில் மற்ற விரல்களை ஒத்திருந்தால், தன்னடக்க மற்றவராயிருப்பர். இத்தகையோர் மிக்க அன்புடையவராய்க் காணப்படுவர்; ஆனால் அதை உறுதியாகக் கருதலாகாது.

முதலிரண்டு அங்குலாஸ்திகளும் வித்தியாசமின்றி ஒரே தன்மையில் அமைந்து, இணைப்பில் இளக்கமாயிருந்தால் சமயத்துக்கேற்றபடியும், சந்தர்ப்பத்துக்கு ஏற்றவாறு நடந்துகொள்வர். முதல் அங்குலாஸ்தி வளையக்கூடியதாயிருந்தால், இயற்கையில் சாதுரியம் வாய்ந்தவரென்பதைக் குறிக்கும். இதனால் செல்வாக்குள்ளவராவர். தனது சௌகரியத்துக்காகத் தாராளமாகச் செலவிடுவார். எப்பொழுதும் சந்தோஷமாயிருக்க இஷ்டப்படுவர்.

உறுதியாயும் கெட்டியாயும் இருந்தால் ஜாக்கிரதையும் பொறுமையுடன் கூடிய உறுதியுடையவராவர். இத்தகையோர் பெரிய தொழில்களை நிர்வாகம் செய்வார்கள். எல்லாவிஷயங்களையும் அப்போதைக்கப்போது விசாரித்து வைத்துச் சமயோசிதமாய் நடந்துகொள்வார்.

முதல் அங்குலாஸ்தி கம்பீரமாய் பெரிதாயிருந்தால், அவருடன் வாதம் செய்யலாகாது. ஒரு முடிவுக்கு வரும்படி வற்புறுத்தக்கூடாது. இத்தகையோர் இருதய சக்தியைவிட மூளையின் சக்தியைக்கொண்டு நடப்பவராவர். இவர்களுக்கு அவகாசம் வேண்டும்.

சிறிய அங்குலாஸ்தியையுடையவர் இருதய சக்தியின் ஆட்சிக்குட்பட்டவர். விருப்பு வெறுப்பைப் பகுத்து நன்குணர்பவராவர். ஆனால் நட்புடையவராகமாட்டார். வேண்டியவர்களிடத்து விருப்பும், மற்றவர்களிடத்து அருவருப்பும் காட்டுவார்.

இரண்டாம் அங்குலாஸ்தி இடுப்பைப்போல் ஒடுங்கியிருந்தால் கீர்த்தியுண்டாவதைக் குறிக்கும். அதிக ஜாக்கிரதையும், நல்ல ஞாபக சக்தியுமுடையவராயிருப்பார். இராஜதந்திரத்தில் மகா சமர்த்தராயிருப்பார். பிரசித்தமான லாயர்களுக்கும், தேசீயவாதிகளுக்கும், ஆசிரியர்களுக்கும், அத்தகைய விரல் அமைந்திருக்கும். இருதய புத்தி ரேகைகள் நன்கு அமைந்திருந்தால் வாழ்வில் ஜெயப்பிரதாபம் நிச்சயமென்பதைத் தெரிவிக்கும்.

முதல் அங்குலாஸ்தி உருண்டையாய் பந்தைப்போல் அமைந்திருந்தால், மூடத்தனத்தைக் குறிக்கும். எவ்வளவுக்குக்கனத்திருக்கிறதோ அவ்வளவுக்கு முன்பின்யோசிக்கக்கூடிய ஞானமற்றவன் என்பதாகும். இத்தகையோர் முன்பின் யோசனையின்றித் திடீரென எத்தகைய தவறையுமிழைத்திடுவர். பொதுவாய் இவர்களுடைய இருதயம் பலஹீனமுடையதாகும.

நன்கு அமையப்பெற்ற கட்டை விரல் திடஞானத்தையும் விசாலமான அன்புள்ள நோக்கத்தையும் குறிக்கும்.

"குப்த மந்திரம்"

ரூபா 100 இனாம்.

லக்ஷம் லக்ஷமாகப் பணத்தைச் செலவழித்துச் சாதிக்க முடியாத காரியங்களை இந்த மந்திரத்தை எழு தடவை ஜபித்துச் சாதிக்கலாம். கஷ்டமெதுவுமில்லை. முன் தயாரிப்பு அவசியமில்லை. யாவரும் உங்களை நேசிப்பார்கள். இது ஓர் 'வசீகரண மந்திரம்' உங்களுக்கு அதிர்ஷ்டமுண்டாகும்; வியாஜ்யத்தில் வெற்றியும், வியாபாரத்தில் லாபமும் அளிக்கும். பலனில்லையென நிரூபிப்பவர்க்கு ரூ 100 இனாம்.

தபால் செலவு உள்பட ரூ 2-7.

SIDDHA MANTRA ASHRAM
No. 8316, P.O. Katri...

லினன் துணியில் திறப்புத் தையல் வேலை

ஸ்ரீமதி ஆ. ராஜசூடாமணி அம்மாள் எழுதியது.

[காபிரைட்:]

ஒரு துணியில் ஊடு, பாவு, நூல் இழைகளில் சிலவற்றை எடுத்துவிட்டு அந்த இடங்களில் பலவகையான சித்திரத் தையல்கள் அமையும்படித் தனித்தனியே பிரிந்து நிற்கிற இழைகளைச் சேர்த்துத். தைக்கிற எல்லா வகையான தையல் முறைக்கும் திறப்புத் தையல் வேலை என்று பெயர்.

இழை நீக்கினது போக மிகுந்திருக்கிற இழைகளைப் பலவகையாக வகுத்து விதவிதமாகத் தைப்பதினாலே மிகவும் அழகான நானாவிதச் சித்திரத் தையல்கள் அமைகின்றன. இந்த முறையை எந்தத் துணியிலும் கையாடித் தைக்கலாம். அதோடு கிராஸ் ஸ்டிச் (குறுக்குத் தையல்) வேலையிலும் எம்பிராய்டரி வேலையிலும் கையாடலாம்.

லினன் துணியில் தைக்கப்படுகிற திறப்புத் தையல்வேலை இரண்டு வகைப்படும்.

ஒன்று ஒற்றைத் திறப்புத் தையல் வேலை—இந்த முறைப்படித் தைக்கும்பொழுது பாவு இழையிலாவது, ஊடு இழையிலாவது, ஒரு அடுக்கு இழைகளைமட்டும் எடுத்துத் தைக்கவேண்டும்.

2-வது முறை:—ஊடு இழையிலும் பாவு இழையிலும் இரண்டு இழைகளிலும் இழை எடுத்துத் தைக்கவேண்டும். இதற்கு வெட்டுத் திறப்புத் தையல் என்று பெயர்.

இதற்கு ஏற்ற நூல்கள் கடைகளில் விற்பனையாகின்றன—இதற்குச் சாதாரணத் தையல் ஊசி போதும்.

ஒற்றைத திறப்புத் தையல் மிகவும் சுலபமான முறையில் தைக்கப்படும் தையல்களில் இதுஒன்று. இதற்குச் சித்திரப் பூ ஓரமடிப்புத் தையல் என்று பெயர். முன்னே நாம் சொன்னபடி ஊடு இழைகளிலாவது பாவு இழைகளிலாவது சில இழை எடுத்துக்கொண்டு தைக்கவேண்டும்.

திறப்புத் தையல் முறையில் தைக்கிற வேலையில் இதுதான் ஆரம்பமானது. சாதாரணமாய்த் தைக்கப்படுகிற ஓரம் மடிப்புத் தையலுக்குப் பதிலாக இப்படித் தைப்பது மிகவும் அழகாக இருக்கும்.

ஒற்றை ஓர மடிப்புத் தையல்

(படம் 1) நீங்கள் எடுத்துக்கொண்ட துணியின் அளவுக்கு ஏற்றவாறு 2-முதல் 4 இழைகள் மட்



படம் 1.



படம் 2.



படம் 3.



படம் 4.

டும் ஓரத்திலிருந்து சற்றுக் கீழாக இழை எடுத்துக் கொள்ளவும். பின்பு பிரிந்து நிற்கிற 2 இழைகளுக்கு மேலே பொருந்தும்படி ஓரத்தை மடித்துக்கொள்ளவும். இடது கைப்பக்கத்தில் ஊசியில் கோத்திருக்கிற நூலை முடி போட்டுக் கொள்ளவும். பின்பு வலது கைப்பக்கத்திலிருந்து இடது கைப்பக்கமாய் ஊசியை ஒட்டித் தைக்க வேண்டும். (படம் 2) ஊசியைப் பிரிந்திருக்கிற இழையில் 3 அல்லது 4 இழைகளுக்குக் கீழாகத் தைத்து மேலாக வாங்கி, மடித்திருக்கிற ஓரத்தில் ஒன்று அல்லது இரண்டு இழைகளுக்குக் கீழாக மடிப்பின்மேலிருந்துகீழ் நோக்காகத் தைக்கவும்.

மற்றொரு விதமான மடிப்புத் தையல்

(படம் 3) இதற்கு முன்னே துணியை ஆயத்தம் செய்த விதமாகவே துணியைத் தயார் செய்தல் வேண்டும். இதில் இடது கையிலிருந்து வலது கைப்பக்கமாய் ஊசியை ஒட்டித் தைக்க வேண்டும். ஆனால் இதில் ஒரு வித்தியாசமிருக்கிறது. ஊசியை மூன்று நேர் இழைகளுக்குக் கீழாக நுழைத்த பிறகு மடிப்பின் 2 இழைகளுக்கு மேலிருந்து கீழ் நோக்காய் தைத்து வாங்க வேண்டும். இப்படித் தைத்து வாங்கும்போது ஊசி மடிப்பு ஓரத்திலேயே வெளிப்படும். இந்தத் தையல்கள் நல்ல பக்கத்திலே அணி அணியாய் அமைந்த கயிற்று மணிகள் போல அழகாய் காணப்படும்.

ஏணி மடிப்புத் தையல்

(படம் 4) படம் இரண்டில் காட்டினபடியே முதலாவது தைத்துக் கொள்ள வேண்டும். பின்பு இன்னும் சில இழைகள் எடுத்துக் கொள்ள வேண்டும். ஆக ஐந்து முதல் ஏழு இழைகள் மட்டும் எடுக்கலாம. பின்பு தையலைத் திருப்பி மேலே தைத்தபடிக் கீழேயும் தைக்கலாம். இப்படித் தைக்கும் பொழுது தனித்து நிற்கிற இழைகள் கூடிக் கூடி ஏணியின் பழுக்கள் போல் அமைந்து காணும்.

நரைமயிரை அகற்றுங்கள்

உங்களது தலைமயிர் வெகுகாலமாகவோ, மிக அதிகமாகவோ நரைத்திருந்தால் விவலேன் ஹேர் ஆயிலை உபயோகித்தால் நரை நீங்கித் தலைமயிர் கருகருவென்று பழையபடிப் பிரகாசிக்கும். இன்றே **விவலேன்** எண்ணெயை உபயோகியுங்கள். அதிக நரையில்லாவிடில் சிறிய பாட்டில் ரூபா 1-12. நரை முற்றியிருந்தால் பெரிய பாட்டில் ரூ. 3. ஏககாலத்தில் 3 பாட்டில்கள் வாங்கினால் தபால் செலவு இனாம்.

சயண்டிபிக் பப்ளிஷிங்கம்பெனி
(மெடிகல் டிபார்ட்மெண்டு, S. 15)
பவானிப்பூர், — கல்கத்தா.

மதராஸ் ஸ்டாக்கிஸ்டு:—
ஜே. ஹஸாரிமால் & கம்பெனி, 260, சைனாபஜார் ரோட்,
ஸப் ஸ்டாக்கிஸ்டு:—
தாதா & கம்பெனி, மருந்து வியாபாரிகள், 52, நைனியப்ப நாயக்கன் தெரு, பி. டி. மதராஸ்.

செகந்தராபாத் ஸ்டாக்கிஸ்டு:—
பரோக் பிரதர்ஸ், ஜம்மா மஸ்ஜித்

அதிசயம் ஆனால் உண்மை

ஜம்புலிங்கத்தின்

திருவிளையாடல்கள்

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

வோரிடமாகக் கவனித்துக்கொண்டே இந்தச் சாராயக் கடையண்டையில் வந்து சேர்ந்தேன். இங்கு ஏதாவது உளவு அகப்பட்டாலும் அகப்படலாம் என்று தோன்றியது. உள்ளே நுழைந்தேன். நான் வந்து சற்று நேரம் கழிந்த பின், ஒவ்வொருவராய் அந்தக் கதவின் வழியாய் நுழைந்து எங்கோ செல்வதைக் கண்டேன்.

உலக:—இனிமேல் நடக்க வேண்டிய சங்கதி?

தியாக:-பேர்வழி வருகிறானா என்று பார்க்கவேண்டும்.

உலக:—உள்ளே போனார்களே, அவர்கள் ஒன்றும்—

தியாக:—அவர்களைப் பற்றி இப்பொழுதென்ன? அவர்கள் ஜம்புலிங்கத்தின் கூட்டத்தைச் சேர்ந்தவர்களானால், கட்டாயம் ஜம்புலிங்கம் வருவான்.

உலக:—ஆம், அதுதான் சரி, உம்—

என்று என்னவோ யோசித்துக்கொண்டே அறையைச் சுற்றிலும் கவனித்தான். அங்கு தாங்கள் இருவரையும், இன்னும் யாரோ வேறு இருவரையுந் தவிர, மற்றவர்களெல்லோரும் போய்விட்டிருப்பதைக் கண்டான். மற்ற இருவரும் கூட வெளியே செல்ல எழுந்துவிட்டார்கள். கடை மூடும் சமயம் நெருங்கிவிட்டது. தாங்களும் வெளியிற் செல்ல வேண்டியதே. வேறெந்த சாக்குப் போக்குகளினாலும், அங்கு அதற்குமேல் தாமதிக்க முடியாதென்பதைக் கண்டான். முன்பு வெளியே செல்ல எழுந்தவர்களைப் பார்த்தான். அவர்கள் கதவைத் தாண்டி, வெளியே போய்க்கொண்டிருந்தார்கள். அவர்கள் வெளியே சென்று ஒரு விநாடிகூடக் கழிந்திருக்காது, உள்ளே ஒரு மனிதன் வந்தான். அவன் உடுத்தியிருந்த உடைகளிலாவது, அல்லது வேறெந்த விதத்திலாவது, அவனுக்கும் அதற்குமுன் உள்ளே சென்றவர்களுக்கும் யாதொரு வித்தியாசமும் காணப்படாவிட்டாலும், அவன் நடந்து வந்தமாதிரியை நோக்க அவன் தன்னைத்தவிர, வேறெவரையும் ஒரு பொருட்டாய் எண்ணவில்லை என்பதை விளக்கிக் காட்டிற்று. இதற்குமுன் சென்றவர்களெல்லாம், ஜாக்கிரதையாகவும், தங்களை வேறு மனிதர்கள் கவனிக்க இடங்கொடாவண்ணமும் சென்றார்கள். இவன், தன்னை யார் கவனித்தாலும் அதைப்பற்றி அக்கரையில்லை என்ற பாவனையாய், தாராளமாய், நேராக அக்கதவை நோக்கிச் சென்றான். உலகநாதன் அவன் முகத்தைக் கவனித்தான். கவனித்ததுதான் தாமதம். இவனது உடல் வியர்த்தது. இவனது முகத்தில் முத்து முத்தாய் வியர்வை வெளிப்பட்டது அதைத் துடைக்கக்கூட இவன் கை கிளம்பவில்லை, மற்றுமொருமுறை கவனித்தான். 'ஆம்' சந்தேகமேயில்லை! ஜம்புலிங்கத்தின் அங்க அடையாளங்கள் தான் என்று எண்ணமிட்டுக்கொண்டிருக்கும் பொழுதே, அம்மனிதன் அக்கதவைத் திறந்துகொண்டு, உள்ளே சென்றுவிட்டான் தன் பக்கத்திலிருந்த தியாகராஜுவை நோக்கி,

"கவனித்தாயா?" என்றான்.

"ஆம், கவனித்தேன்".

"இப்பொழுது என்ன செய்வது?"

"அவசரப்படாதே! சற்று நிதானி. உன்னிடம் துப்பாக்கியிருக்கிறதா?"

"ஆகா, இருக்கிறது."

"சரி."

இருவரும் சுமார் ஐந்து நிமிஷங்கள் வரை பேசாமலிருந்தார்கள். உலகநாதனுக்கு, தியாகராஜுவின் துணிச்சலையும், சமயோசித புத்தியையும் கவனிக்க, அதிக ஆச்சரியமடைந்தான். 'இதற்கு முன், தியாகராஜு இவ்வளவு தைரியமாயும், புத்திசாலித்தனமாகவும் நடந்துகொண்டதே கிடையாது. சந்தர்ப்பம் கிடைக்கவில்லையோ' என்று எண்ணமிட்டுக்கொண்டிருக்கும்பொழுது, தியாகராஜு,

"சுற்றிப் பார்ப்போமா?" என்றான்.

இவன் சொன்னதை எப்படியோ கேட்டுக்கொண்டே வந்த சாராயக் கடைக்காரன்,

"சுத்திப் பாக்கவா! என்னாத்தே?" என்று கேட்டான்.

இவன் இப்படித் திடீரென்று வந்து முளைப்பான் என்பதை அவர்கள் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை. இருந்த போதிலும், சமாளித்துக்கொண்டு தியாகராஜு,

"ஒண்ணும் இல்லிங்கோ, இங்கே இப்படி வெந்துபூடுதே, அந்தப் பக்கம் போனா வாசல் இருக்குமோயிண்ணு பேசிக்கினோம். என்னாங்க அங்கே வாசல் இல்லீங்க?" என்று ஒன்றும் அறியாதவனைப் போலக் கேட்டான்.

அவன் மிகுந்த சந்தேகத்தோடு, இவர்களிருவரையும் மாறிமாறிப் பார்த்தான். பிறகு தனக்குள் ஏதோ முடிவிற்கு வந்தவனாய் 'ஐயா, கடை சாத்துர நேரமாச்சி, இப்படி வாங்க. அங்கே போனீங்கன்னா நல்லா காத்தடிக்கும்"

என்று இவர்களை வாயிற்பக்கமாய் அழைத்துக்கொண்டு போய், "இதோ, இப்படியே சோத்துக்கைப் பக்கமாய்ப் போயி, பிச்சக்கை பக்

அசல் புனு ஜாகர்

வைரங்கள்

இயற்கை முறையில் உற்பத்தி செய்யப்பட்ட

(CULTURE)

நல்முத்துக்கள்

கிடைக்குமிடம்:

சிமன்லால் பிரதாப் சந்த்

175, சைனுபஜார், மதராஸ்.

நீரிழிவு, மதுமேகம்

முதலிய சகல நீர் ரோகங்களுக்கு

பண்டிட் ஸ்வாமி ஸ்ரீநிவாஸய்யங்காரின்

மயூரகாய கற்பம்

ஒரு தெய்வீக சஞ்சீவி!!

இதுவரை இதன் நன்மையைப் பிரபுக்கள் மட்டுமே பெற்று வந்தனர். இப்போது சகல ஜனங்களும் பயன்பெறவேண்டி 20 டோஸ் கொண்ட பொட்டணம் ரூ. 15-8-0 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது. 10 நாளைக்கு வரும். அதற்குள் கண்கூடாகக் குணங்காணும். பிரபல இங்கிலீஷ் டாக்டர்களுடையவும், குணமடைந்த பலருடையவும் உயர்ந்த உண்மை அபிப்பிராயங்கள் கொண்ட இலவசப் புத்தகத்திற்கு

இன்றே எழுதுங்கள்.

ஸ்கந்தாசிரமம்

தபால் பெட்டி, 759 : : எழும்பூர், மதராஸ்

" நீம் டூத் பேஸ்ட்" உங்கள் பற்களுக்கு வெண்மையும், சுத்தமும் அளிப்பது மட்டுமென்றி, ஈறுகளினின்றும் இரத்தம் பெருகுவதை நிறுத்தி, பயரியாவைத் தடுக்கிறது.

'Neem'

TOOTH·PASTE

பவுடர் வேண்டுமாயின் மார்கோபிரிஸ் பல் பவுடர் இருக்கிறது.

கல்கத்தா கெமிக்கல்

திரும்பினு—அட்டே! என்னய்யா தள்ளீட்ர—'' என்றுதான் இவர்கள் காதிற்குக் கேட்டது அதற்குள், அவனைத் திடீரென்று வெளியே பிடித்துத்தள்ளிக்கதவை உட்பக்கமாகத் தாளிட்டுக் கொண்டார்கள்.

''பயல் தொலைந்தான். சற்று நிம்மதியாய் வேலை செய்யலாம்''

''அவன் கூச்சலிட மாட்டானு?''

''சந்தடி செய்தால், கூட்டம் சேர்ந்துவிடும். என்ன ஏது என்று விசாரிப்பார்கள். இவர்கள் ரகஸியம் வெளியே வர வேண்டியிருக்கும் கூட்டம் சேர்ந்தால் போலீஸ்காரன் வந்து முளைப்பான். உள்ளேயிருக்கும் பேர்வழிகளுக்கும் தனக்கும் ஆபத்து என்று தெரியும். ஆகையால் வாயைத் திறக்கமாட்டான். உம்—நாம் உள்ளே போகலாமா?''

''ஆகா, போகலாம்.''

''துப்பாக்கியை ஆயத்தமாய் எடுத்துப் பிடித்துக்கொள்''

என்றதும், இருவருமாய், தங்கள் தங்கள் துப்பாக்கிகளை எடுத்து ஆயத்தமாய்ப் பிடித்துக்கொண்டார்கள். இருவரும் அத்தனைபேர்கள் சென்று மறைந்த கதவண்டை பிற் சென்றுர்கள். தியாகராஜு மெதுவாகக் கதவைத்திறந்தான் தியாகராஜு முன்னும், உலகநாதன் பின்னுமாக உள்ளே நுழைந்தார்கள். அந்தவிடமும் தாங்கள் விட்டுவந்த இடத்தைப்போலவே விசாலமாகக் காணப்பட்டது. அங்கு ஓரிடத்தில் விளக்குமட்டும் 'மினுக்' 'மினுக்' என்று எரிந்துகொண்டிருந்தது. அங்கு ஒருவரும் காணப்படவில்லை. ''பேர்வழிகள், இன்னும் உட்புறம் இருக்கிறார்கள் போலிருக்கிறது'' என்று அந்தவிடத்தையுங்கடந்து, அங்கிருந்த ஒரு கதவைத் திறந்தார்கள். அப்பக்கம் ஒரு பெரிய விசாலமான முற்றம் இருந்தது.

உலக:— அப்பா! ஹும், என்ன நாற்றம்! இச்சென்னையில் இப்படியும் ஓரிடமிருக்கிறதா. ஹெல்த் ஆபீஸர்கள் தூங்குகிறார்கள் போலிருக்கிறதே! வெளியிற் சென்றவுடன், இதைப்பற்றிக் கொஞ்சம் கவனிக்க வேண்டும்—இங்கும் காணேமே! மாயமாய்ப் போய்விட்டார்களா?

தியாக:— இனிமேல் என்ன செய்வது?

உலக:—நான் நினைக்கிறேன்—உம்— அதோ ஒரு சிறிய அறை இருக்கிறுப்போலிருக்கிறதே. அத்தனை பேர்கள் அதனுள் இருக்க முடியாது. ஒருவேளை—ஆம், இருந்தாலும் இருக்கலாம். அந்த அறையையும் பார்ப்போம்.

தியாக:—சரி பார்ப்போம்.

இருவரும் சந்தடி செய்யாமல் அம்முற்றத்தைக் கடந்து அவ்வறையை அடைந்தார்கள். உலகநாதன் சந்தடி செய்யாமல் அவ்வறையின் கதவைக் கொஞ்சங் கொஞ்சமாய்த் திறந்தான். தியாகராஜு தலையை நீட்டி அறைக்குள் எட்டிப்பார்த்தான். உலகநாதனும் தியாகராஜனுக்குப் பின்னுலிருந்தே எட்டிப்பார்த்தான். அறையினுள் ஒருவரையும் காணவில்லை. மெதுவாய் உள்ளே நுழைந்தார்கள். தரையெங்கும், மக்கிப் போன வைக்கோல் கூளங்கள் சிதறிக் கிடந்தன. ஒரு மூலையில், காலி ஜாதிக்காய்ப் பெட்டிகள் தாறுமாருய் எறியப்பட்டிருந்தன. தியாகராஜு தான் ஆயத்தமாய்க் கொண்டு வந்திருந்த எலெக்டிரிக் டார்ச் லைட்டை எற்றி அறையெங்கும் ஒருதரம் பார்த்தான். பிறகு தன் கால்களால் தரையெங்கும்

தியாகராஜு எலக்ட்ரிக் டார்ச்சை ஏற்றிப் பிடித்தான். வெளிச்சம் வந்த விடத்தில் ஓர் கதவிருந்தது தெரிந்தது.

வலுவூட்டும் சிறந்த டானிக்

வெப்ஸ்டர்ஸ் பாஸ்பாடம்

கிருஷ்ராஜ் & கம்பெனி, மெத்தையில் ஆபீஸ்,
மருந்து வியாபாரிகள், சைனபஜார் ரோட், மதராஸ்

எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்

மல்லிகாவின் பாக்யமே பாக்யம்!

போன வருஷம் ஐயோ! அப்பா! என்று கஷ்டப்பட்டவள் இவ்வருடம் ஒரு குழந்தையை அன்புடன் அணைகிறுள்

''வேலன்ஸ் ஸ்திரீ ஸோதரி''

ஸ்திரீகளுக்கு மாதக்குளி காலத்தில் உண்டாகும் சூதக வாய்வு, சூதக பந்தம், சூதகக்கட்டினுல் உண்டாகும் வயிற்று வலி, பேதி, பசியின்மை, வாந்தி, மயக்கம், தலைவலி, ஜ்வரம், உடல் ஸ்தூலித்தல முதலிய எல்லா கர்ப்பாசய வியாதிகளையும் கண்டித்து மலட்டுப் பூச்சிகளைக்கொன்று, கருப்பைக்கு பலந்தந்து ரக்ஷித்து சந்தான பாக்யத்தையளிக்கும் உன்னத ஒளஷதம். பத்தியமில்லை, செட் விலை ரூபா 5.

வேலன்ஸ்மெடிகல் ஹால் 61, காரணீஸ்வரர் கோயில் தெரு மைலாப்பூர், சென்னை

சிதறிக் கிடந்த வைக்கோல் கூளத்தை அப்படியும் இப்படியும் விலக்கித் தள்ளிப் பார்த்தான்.

இரண்டுநிமிஷங்கள் கழித்து தியாகராஜு ஓரிடத்தைச் சுட்டிக் காண்பித்தான். அங்கு ஒரு கதவு புதைக்கப்பட்டிருந்தது. அதிலிருந்த இரும்பு வளையத்தைப் பிடித்துச் சந்தடி செய்யாமல் மெதுவாய் மேலுக்குத் தூக்கினார்கள். சப்தம் செய்யாமல் திறந்துகொண்டது. கீழ் நோக்கிப் படிக்கட்டுகள் சென்றன! வழி இரண்டு ஆட்கள் தாராளமாய்ச் செல்லக் கூடியபடி அகலமாயிருந்தது.

உலக:— இங்கேயிருப்பார்களா!

தியாக:—பின் வேறு எங்கிருப்பார்கள்? மெதுவாய் இறங்குவோமா?

என்று கேட்டுக்கொண்டே, முதலில் தியாகராஜு இறங்கினான். அவன் பின்னே உலகநாதன் இறங்கினான். சுமார் பத்து அல்லது பன்னிரண்டு படிகள் இறங்கியதும், ஒரு நீண்ட தாழ்வாரத்தை யடைந்தார்கள். அந்தத் தாழ்வாரத்தின் மறுகோடியில் ஏதோ ஒரு சிறிய சந்தின்வழியாய் கொஞ்சம் வெளிச்சம் தெரிந்ததிலிருந்து, அங்கு ஓர் அறையிருக்கிறதென்றும், அந்த அறையில் எரிந்துகொண்டிருந்த விளக்கின் வெளிச்சமே தங்களுக்குத் தெரிகிறது என்றும் ஊகித்தார்கள். தியாகராஜு ஒரு நிமிடம் தன் கையிலிருந்த எலெக்டிரிக் டார்ச் லைட்டை ஏற்றிப் பிடித்தான். வெளிச்சம் வந்தவிடத்தில் ஓர் கதவிருந்தது தெரிந்தது.

தியாக:—திருட்டுப்பயல்கள் அதோயிருக்கிறார்கள்.

உலக:—ஸ்! கூச்சலிடாதே! காரியம் கெட்டுவிடப் போகிறது! "இனிமேலா கெடப் போகிறது! அதுதான் முன்னமேயே கெட்டுவிட்டதே!"

என்று இன்னும் சற்று உரத்த குரலில் கூறிக்கொண்டே தன் கையிற் பிடித்திருந்த டார்ச் லைட்டையும் அணைத்துவிட்டான். இப்படித் திடீரென்று கூச்சலிட்டுக் காரியத்தைக் கெடுத்துவிடத் தியாகராஜுவுக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதா என்று சந்தேகித்து தியாகராஜன் நின்றிருந்த இடத்தில் அவனைப் பார்த்தான். அந்த இருட்டில் அவன் நின்றிருந்தவிடமே தெரியவில்லை. அந்த சமயத்தில் மற்றொரு சம்பவம் நடந்தது. தியாகராஜுவைப்பற்றிச் சிந்திப்பதைவிட்டு, அதைக் கவனிக்கலானான். தங்களுக்கு முன்பாகவிருந்த கதவு கொஞ்சங் கொஞ்சமாய்த் திறந்துகொள்ள வாரம்பித்தது. இரண்டொரு விநாடிகளில் கொஞ்சங் கொஞ்சமாய் திறக்கப்பட்ட கதவு சரேலென்று, முழுதும் திறக்கப்பட்டது. உள்ளிருந்து வந்த வெளிச்சத்தைப் பார்க்கக் கூடாமல் முதலில் கண்கள் சற்றே கூசின. ஆனால் அந்த கூச்சம் தெளிந்தவுடன் அறையினுள் உற்று நோக்கினான். தனக்கு நேராய், உள்ளே நால்வர் பிணைக்கப்பட்டுச்சுவரோடு சுவராய் நிறுத்தப்பட்டிருந்தார்கள். ஒவ்வொருவராகக் கவனித்தான். ஒருவர் டெபுடி கமிஷனர் கிருஷ்ணசாமி நாயுடு. இவர் மறைந்துவிட்ட இன்ஸ்பெக்டர்கள் ராமலிங்கும் சொக்கலிங்கமுமாய்த் தானிருக்க வேண்டும் என்று ஊகித்துக் கொண்டான். நான்காமவனைப்பார்த்தான். தான் காண்பது கனவோ அல்லது நினைவோ என்று பிரமித்தான். நன்றாகக் கூர்ந்து கவனித்தான். சந்தேகமில்லை. தான் காண்பது உண்மையான காக்ஷியே என்று கண்டான். நான்காமவன் தன்னுடைய ஆப்த நண்பனாகிய தியாகராஜுவே. உடனே தன்கூட வந்தவன் நின்றிருந்த பக்கம் திரும்பி, "அப்படியானால்—நீ—" என்று மீதியையும் சொல்லி முடிப்பதற்குள் இவன் கையிற் பிடித்திருந்த துப்பாக்கி வெடுக்கென்று பிடுங்கப்பட்டது. இதுகாறும் தியாகராஜுவைப் போல சாமர்த்தியமாய் அபிநயித்தவனே அத்துப்பாக்கியைப் பிடுங்கிக் கொண்டதை யறிந்தான். ஆனால் இப்பொழுது அம்மனிதன் முகத்தில், கறுப்பு முகமூடியை அணிந்திருந்தான்.

"என்! உலகநாதம்பிள்ளையவர்களே! உள்ளே போகலாமே" என்று தன் கையில் பிடித்திருந்த துப்பாக்கியால் அவன் முதுகில் குத்தி அறையினுள் செல்லும்படித் தூண்டினான். உலகநாதனுக்கு சப்தநாடிகளும் அடங்கிவிட்டன! ஒன்றும் செய்யக் கூடாதவனாய், அம்மனிதன் கூறியபடியே உள்ளே நுழைந்தான். உள்ளே பத்துப் பெயர்க கறுப்பு முகமூடிகளை அணிந் கொண்டு, ஒரு புறமாய் ஒதுங்கி நின்றுகொண்டிருந்தனர். உல நாதன் உள்ளே நுழைந் தும், ஒரு விநாடியி அவர்களில் சிலர், இவனுடைய கைசால்களில் விலங்குகளைப் பூட்டிவிட்டனர். உலகநாதன், தன் நிலைமையை இப்பொழுதுதான் ஒருவா உணர்ந்து, தான் கொண்டிருந்த பிரமை தெளிந்து, பே கூடிய நிலைமையை அடை தான்.

"அடடா! படுமுட்டாளாய்விட்டேனே!" என் தன்னை நொந்துகொண்டான்.

அருகிலேயே நின்றிருந் ஜம்புலிங்கம், "நீ சொல்வ உண்மைதான் ஐயோ பாவ என்றான்.

(தொடரும்.)

"அவன் எவ்வளவோ சந்துஷ்டியாக இருப்பது வழக்கம்—
ஆனால் இப்பொழுது ஏனோ இப்படி
படுத்துகிறானே?"

வலுவற்ற, துஷ்டக் குழந்தைக்கு டாக்டர்கள் இந்தச் சுலபமான சிகிச்சை முறையைச் சிபார்சு செய்கின்றனர்.

ஆரோக்கியமாக விருந்தால் பொறுமையும், சுறுசுறுப்புமிருக்குமென்பதைப் பெற்றோர்கள் அறிவர். ஒரு குழந்தை மிகவும் "விஷத்தனமான"தாக விருந்தால்—சொல் பேச்சு கேட்காமல், பிடிவாதமாகவும், துரதிர்ஷ்டமாகவும்—அதற்குக் காரணம் அவனது தேகத்தில் சில சத்துக்கள் இல்லாமலிருப்பதே. இதற்கு ஸ்காட்ஸ் எமல்ஷன் தான் யாவற்றிலும் சிறந்தது. விட்டமின்கள் A & D நிறைந்த சுத்த காட்லிவர் ஆயிலைத் தவிர, தேக எலும்பு வளர்ச்சிக்கு அவசியமான கால்ஷியம், பாஸ்பரஸ் முதலிய உப்புகளும் சேர்ந்தது. ஸ்காட்ஸ் எமல்ஷன் உட்கொள்ள உல்லாசமானது; சுலபமாக ஜீரணிப்பது; சாதாரண காட்லிவர் ஆயிலைவிட மூன்று பங்கு அதிக பலன்தருவது.

பூரணமான வேலை

காட்லிவர் ஆயிலிலிருந்து பூரா அனுகூலத்தையும் அடையத்தக்க சிறந்த சத்துக்கள் ஸ்காட்ஸ் எமல்ஷனிலிருக்கின்றன. சாதாரண காட்லிவர் ஆயிலைச் சாப்பிட்டால்; இதர வகைகளில் கால்ஷியம் மு வற்றை உட்கொள்ள ண்டும். பெரியவர்களுக்கும் சரி, குழந்தைகளுக்கும் சரி, பலவீனத்தை போக்க இதுவே சிறந்தது.

SCOTT'S
Emulsion

பெற்றோர்களுக்கு சில குறிப்புகள்:
எலும்புகளுக்கு வலுவூட்டும் ஸ்காட்ஸ் எமல்ஷன்
—வெண்ணெய் அல்லது சுத்தப் பாலைவிட 80 மடங்கு அதிக பலனளிப்பது.
—முட்டையைவிட இருமடங்கு அதிகப்பலன் தருவது.
தேக வளர்ச்சிக்கு
—வெண்ணெயை விட 8 பங்கு அதிகப் பலன் தருவது.
—அனைசிப் பழத்தைவிட 100 பங்கு பலன்.

சுத்த காட்லிவர் ஆயில் சேர்ந்தது.

மொத்த டிஸ்டிரிபியூட்டர்கள்:—இம்பீரியல் கெமிக்கல் இன்டஸ்டிரீஸ் (இந்தியா) லிமிடெட். கல்கத்தா
பம்பாய் - மதராஸ் - லாகூர் - ரங்கூன் - கொழும்பு - கான்பூர் - பாடலீபுரம்
ஆமதாபாத் - கொச்சி - கள்ளிக்கோட்டை - விசாகப்பட்டணம் - கராச்சி - அமிருதசரஸ்.

(S 33)

மஹாபாரதம் : அநுசாஸன பர்வம்

சுக துக்கங்களுக்கு வினையே காரணம்

கௌதமி, வேடன் முதலியோர் கதை

பீஷ்மர் சாதல்பத்தில் படுத்க்கொண்டே யுதிஷ்டிரருக்ச் சிறந்த தர்மங்களைச் சால்லியபோதிலும் அவருக்த் தனது பந்துக்களையும் த்திரர்களையும் யுத்தத்தில் கான்றுவிட்ட துயரம் நீங்க வயில்லை. “நான் கஷ்டப் ட்டுக்கொண்டிருக்கிற உம்மைப் பார்க்கிறேன். ஆனால் ர்யோதனன பார்க்கவில்லை. ஆகையால் மரணமே சிறந்ததென்று நினைக்கிறேன். நாங்கள் பாவச் செய்கையுள்ளவர்களாகவே பிரும்மதேவரால் படைக்கப்பட்டோமென்று நினைக்கிறேன். நான் இவ்வுலகில் ஜீவித்திருப்பதை மேலாக நினைக்கவில்லை. எனக்கு நன்மை செய்ய விரும்புவீராயின், வேறு உலகத்திலாவது நாங்கள் பாவத்தினின்று விடுபடும் வகையை எனக்கு உபதேசிக்க வேண்டும்” என்று கேட்டார்.

இதற்குப் பீஷ்மர் பதிலளித்து ஒரு கதையையும் சொன்னார்:—கர்மத்தின் வசத்திலிருக்கும் உன்னைக் காரணமென்று நினைத்துக் கொள்ள முடியாது. இந்தக் கர்மங்களின் ஸ்வரூபம் புலன்களுக்கும் ட்டாத நுட்பமான விஷயமாக விருக்கிறது. முன்காலத்தில் கௌதமி என்ற ஒரு ருந்தாள். அவளு குமாரனை ஒரு பாம்பு துவிடவே அவன் இறந்து னான். ஆனால் அர்ஜுனகன் என்ற ஒரு வேடன் அந்தப் பாம்பைப் பிடித்துச் சுருக்கிட்டுக் கொண்டுவந்து, இந்தப் பாம்பு உன் புத்திரனைக் கொன்றதால், இதைக் கொன்றுவிட வேண்டும். என்ன சொல்லுகிறாய்?” என்று கௌதமியைக் கேட்டான். ஆனால் கௌதமி விதியிருக்கும்போது மதியுள்ள ன் எவனும் தன்னைப் பெரியனாக நினைக்கமாட்டானென்றும் ஆகையால் சர்ப்பத்தை விட்டுவிடும்படியும் சொன்னாள். வடன் இதை ஏற்றுக்கொள்ளாமல், “சாந்தியை விரும்புறவர்கள் நேர்ந்த காலத்தை விட்டுவிடுவார்கள். ஆனால் காரியத்தைக் கவனிப்பவர்கள் ஸமயம் நேர்ந்தபொழுது அதைச் செய்து உடனே துயரத்தை விட்டு விடுவார்கள். எப்பொழுதும் துயரப்படுகின்றவர்களுக்குப் பாக்கியம் கெடுகின்றது. ஆகையால் நான் இந்தப் பாம்பைக்கொன்றுவிடுகிறேன். ன் துயரத்தை விட்டுவிடு” என்று சொன்னான். ஆனால் கௌதமி சிறிதும் சமாதானமடையாமல் நாள்தோறும் துயரப்படுகிறவர்கள் அறிவில்லாதவர்களேயென்றும், ஸர்ப்பத்திற்குத் தாங்கள் அதிகாரியல்லவென்றும் கூறிவிட்டாள்.

இதைக் கேட்டுக்கொண்டிருந்த பாம்பும் வேடனைப் பார்த்து, “இந்தக் குழந்தை விஷயத்தில் நான் என்ன குற்றம் செய்தேன்? நான் எண்ணமலேயே என்னை யமன் கட்டளையிட்டான். அவன் கட்டளையினால் நான் இந்தச் சிறுவனைக் கடித்தேனேயன்றி, இவன்மேல் பகையினாலாவது உணவின் விருப்பத்தினாலாவது நான் கடிக்கவில்லை பாவம் ஏதாவது இருக்குமாயின் அது யமனுடையது” என்றது வேடன் இதற்குப் பதில் சொல்லுகையில், ஒரு மண் பாத்திரம் செய்வதற்குத் தடி, சக்கரம் முதலியவையும் காரணமாக நினைக்கப்படுவதுபோல் பாம்பும் காரணம்தானென்றும் ஆகையால் கொல்லத்தக்கதுதானென்றும் சொன்னான் ஆனால் பாம்பு இதற்குச் சமாதானம் சொல்லிற்று:—தடி, சக்கரம் முதலியவை எல்லாம் எப்படித் தாமே காரியம் செய்யத் தகாதவையோ அப்படித்தான் நானும். ஆதலால் என்மேல் குற்றத்தை நீயே நினைக்கமாட்டாய் அல்லது அந்த மண் பாத்திரத்தின் காரணங்களும் ஒன்றையொன்று நடத்துகின்றவையென்று நீ நினைத்தால், எது நடத்துவது? எது நடத்தப்படுவது என்பதில் ஸந்தேகம் உண்டாகிறது. ஆகையால் நான்மட்டும் குற்றவாளியல்ல.

இவ்வாறு பேசிக்கொண்டிருக்கையில், யமனும் அங்கு வந்து பாம்பைப் பார்த்து, “நான் காலத்தினால் ஏவப்பட்டு உன்னை ஏவினேன். இந்தக் குழந்தையின் மரணத்திற்கு நீயும் காரணமில்லை. நானும் காரணமல்லேன். நான் காலத்துக்கு உட்பட்டிருக்கிறேன். ஸாத்விக ராஜஸ தாமஸங்களாகிய தன்மைகளைத்தும் காலத்தை யனுசரித்தே பிராணிகளிடம் செல்லுகின்றன ஆகாயத்திலும் பூமியிலுமுள்ள ஜங்கமங்கள், ஸ்தாவரங்கள் எல்லாம் காலத்தால் நடத்தப்படுகின்றன. இவ்வுலகமே காலத்துக்கு உட்பட்டது. காலத்தினால் எல்லாம் ஆக்கவும் அழிக்கவும்படுகின்றன. இப்படியிருந்தும் என்னிடத்தில் பிழையிருக்குமாயின் நீயும் குற்றமுள்ளவன்தான்” என்று சொன்னான்.

இதைக்கேட்டுக் கொண்டிருந்த வேடன் பின்வருமாறு சொன்னான்:—ம்ருத்யுவும் ஸர்ப்பமுமாகிய நீங்கள் இருவரும் சொன்னதைக் கேட்டேன். ஆயினும் குற்றம் போகவில்லை என்றே நினைக்கிறேன். இந்தச் சிறுவன் இறந்துபோனதற்கு நீங்கள் இருவரும்தான் காரணம்.

பிறகு காலனே நேரில் வந்து எல்லோரையும் பார்த்துப் பின்வருமாறு சொன்னான்:—நாங்களனைவருமே இந்தக் குழந்தை இறந்ததற்குக் காரணமில்லை. இந்தக் குழந்தை செய்த கர்மம்தான் எங்களைத் தூண்டிற்று இவன் செய்த கர்மத்தினாலேயே இவன் மரணமடைந்தான். நாங்கள் அனைவரும் கர்மத்திற்குட்பட்டவர்கள். கர்மம் எங்களை ஏவுகிறதற்குத்தக்கபடிதான் நாங்கள் ஒருவரையொருவர்ஏவுகிறோம். மனிதன் கர்மங்களைச் செய்து அவற்றின் பலனைப் பெறுகிறான். நிழலும் வெய்யிலும் எப்போதும் இடைவிடாமல் நெருங்கிச் சேர்ந்திருப்பதுபோலக் கார்யமும் கர்த்தாவும் முன் வினைகளால் சேர்க்கப்பட்டிருக்கின்றனர்.

இவற்றைக் கேட்டுக்கொண்டிருந்த கௌதமியும் தன் புத்திரன் இறந்து போனதற்கு அவன் கர்மத்தைத் தவிர வேறு காரணமில்லையென்பதை அறிந்து, பிள்ளை மரணமடையத் தக்க கர்மத்தைத் தானும் செய்திருப்பதாயும் நினைத்துத் துயரற்றிருந்தாள். மற்ற அனைவரும் அவரவர்கள் வழி சென்றனர்.

இந்தக் கதையை பீஷ்மர் சொல்லிவிட்டு, மூவுலகங்களும் தம் கர்மத்தில் சார்ந்திருக்கின்றனவென்றும் ஆகையால் யுத்தத்தில் பலர் இறந்துபோனதற்கு ஒருவரும் காரணமல்லவென்றும் சொன்னார். இதைக் கேட்டு யுதிஷ்டிரரும் சாந்தியடைந்தார்.

(தொடரும்)

உலக ரகஸ்யம்

ஒவ்வொருவரும் தெரிந்து கொள்ள வேண்டிய அத்யாச்சரியமான அநேக அறிவு புகட்டும் படங்களுடன் கூடிய 150 விஷயங்களுடன் 350 பக்கங்கள் கொண்டது. விலை ரூ. 1—0—0

சுதேசமித்திரன் புத்தகசாலை,
சென்னை.

ஸ்திரீகளின்
ஆரோக்கியம்,
சந்துஷ்டிக்கு
லோத்ரா

ஸ்திரீகளின் கோளாறுகளை நிவர்த்திக்க வல்லது “லோத்ரா” இது சூதகப் போக்கை ஒழுங்கு படுத்தி, அதிகப் போக்கைத்தடுத்து, சூதக வலி, வயிற்று வலி, முதுகுவலி, வயிற்றுவலி, முதலிய வற்றைப் போக்கிட ஆரோக்கியமும், வலுவு மூட்டுகிறது.

லோத்ரா

கர்ப்பாசய டானிக்
வீட்டில் அவசியம் இருக்க வேண்டியது.

கேஸரி குடீரம்
எழும்பூர் :: :: மதராஸ்

தமிழ்நாட்டில்
குறைந்த சந்தா மாதப்பத்திரிகை
“சித்தன்”

ஒன்றே கட்டுரைகள், கதைகள், ஹாஸ்யம், உலக விநோதம், வைத்தியக்குறிப்பு சினிமா விமர்சனம், முதலியனகொண்டது மாதிரிப்பிரதி இனும். 3000 பிரதிகள் வெளியாகின்றன. விளம்பர விகிதம் குறைவு.
சந்தா உள்நாடு அணா8. வெளிநாடு ரூ.1.
மானேஜர், சித்தன், பழனி.

கொடாக் கணவனும் விடாத மனைவியும்

15-ம் பக்கம்தொடர்ச்சி)

இங்கே பெரிய குடும்பங்கள் குடியிருக்கின்றன. நீங்கள் நான் தங்களுடைய பழைய மனைவியாயிற்றே என்று வீண் வார்த்தையாடுவது கூடாது. நான் யாரோ, நீங்கள் யாரோ வென்று தான் இருக்கவேண்டும். அப்பொழுதுதான் உங்களை இந்த வீட்டில் வைத்திருப்பேன். இன்றேல் நீங்கள் காலி செய்யவேண்டிவரும். அட்வான்ஸையும் திருப்பித்தர மாட்டேன்" என்றாள்.

அதற்கும் சுப்பரமணி சம்மதித்தான். ஒருவாரம் தான் யாரோ ஒரு அன்னியனைப் போல் நடந்துகொண்டான். விமலாவும் சுப்பரமணிஒரு அன்னிய் புருஷன்போல நடந்துகொண்டாள்.

ஆனல் ஒரே வீட்டில் மனைவியும் புருஷனும் ஒருவரையொருவர் முன்பின் பார்க்காதவர்போல் காலங்கழிப்பது சாத்தியமா? ஆயினும் இருவருக்கும் தாழ்ந்துபோகக் கூடாது என்னும் விருப்பம். இந்த நிலைமையில் ....

ஒருநாள் இரவு. சுப்பரமணி அயர்ந்து நித்திரை செய்து கொண்டிருந்தான். அப்பொழுது அவனுடைய மனைவி விமலா மெள்ள வந்து அவனையெழுப்பினள். சுப்பரமணிஎழுந்து உட்கார்ந்து, "என்ன அம்மா, குடித்தன வீட்டில் அக்கிரமம் செய்கிறீர்கள்; யாரேனும் பார்த்தால் என்ன சொல்லமாட்டார்கள்? இங்கே குடியிருந்தால் என்னுடைய பெயரே கெட்டுப்போகும் போலிருக்கிறதே" என்றான்.

"இல்லெங்கோ. கீழே திருடன் வந்திருக்கான். நீங்கோ போய் அவனெ தொரத்துங்கோ" என்று வேண்டிக் கொண்டாள் விமலா.

"திருடன் வந்திருந்தால் எனக்கு என்ன? நீங்கள் யாரோ நான் யாரோ உங்கள் வீட்டில் குடியிருப்பதற்கு வாடகை கொடுத்து விடுகிறேன். திருடனைத் துரத்துவது என்னுடைய வேலையென்று ஆரம்பத்தில் நமக்குள் பேச்சில்லையே" என்று சுப்பரமணி சொன்னான்.

விமலா அவனை மிகவும் மன்றாடிக் கேட்டுக்கொண்டாள். தான் செய்தது தப்பிதம் என்றும், இனிமேல் வீணில் பணத்தைச் செலவு செய்வது இல்லை என்றும் ஒப்புக்கொண்டாள். மீண்டும் தன்னுடன் குடித்தனம் செய்யும்படி அழைத்தாள். அதன் பிறகே சுப்பரமணி திருடனைத் துரத்திவிடச் சம்மதித்தான்.

ஒரு வாரம் பின்னர் சுப்பரமணியும் விமலாவும் பழையபடிக் குடியிருந்தனர். ஒரு நாள் சுப்பரமணி விமலாவைக் கூப்பிட்டு, சென்ற வாரத்தில் திருட வந்தவன் உண்மையில் திருடன் இல்லையென்றும், தன்னுடைய ஆட்களில் ஒருவன் என்றும் ஒப்புக்கொண்டான்.

"ஆனல், நான் நம்ம வீட்டில் திருட வரச்சொல்லி ஒரு ஆளை ஏற்பாடு செய்தேனே, அவன் வரவேயில்லை போலும்" என்று தான் செய்த சூழ்ச்சியை விமலா ஒப்புக்கொ[ண்]டாள்.

அதைக் கேட்டதும் சுப்ப[ர]மணிக்குச் சொல்லொ[ணா] ஆனந்தம் உண்டாயிற்று. வி[ம]லாவை ஆலிங்கனம் செய்[து] கொண்டு..........

சோறியுள்ள
'சருமத்தை'
சொறியாதீர்கள்
'ஜாம்—பெக்' வி[...]த்தையும். நோ[...]யும் தடுக்கிறது.
சொறிவதால் உ[...]கள் சருமம் தடி[...]தும், ரத்தக் கிளறு[...]வம் போய்விடுகிறது[...] இதன் மூலம் விஷ[...] கிருமிகள் தசைக்கு[...] பிரவேசித்து நமை[...]சல், சொறி, சி[ர]ங்கு முதலிய சரும[...] கோளாறுகளை வி[...]வித்து விடுகின்றன[...]

நமைச்சல், சொறி, சிரங்கு, படை, கத்[...] வெட்டுகள், தீப்புண்கள், சிராய்ப்புகள்[...] பூச்சிக்கடிகள் மூலச்சூடு முதலியவற்றிற்[கு] "ஜாம்—பெக்' இணையறறது. எல்ல[ா] மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கும்[...] விலை ரூ. 1 அல்லது ரூ. 2-4-0.

மிருகக் கொழுப்பற்றது.

ஜாம்பெக்
Zam Buk

திருநெல்வேலி ஜில்லா அரசியல் மகாநாட்டைச் சமீபத்தில் ஸ்ரீமதி கமலா தேவி திறந்து வைத்தார்.

தென்னிந்தியப் பிரமுகர்கள்

நவாப் ஸர் பரிடுன் ஜங் பகதூர், கே. ஸி. எஸ். ஐ.

(1849—1928)

—:[o]:—

(கே. எஸ். ஆர்.)

ஹைதராபாத் சமஸ்தானத்தில் தமது நிர்வாகத் திறமையினால் சிறப்புடன் சோபித்தவர்களுள் காலஞ்சென்ற நவாப் ஸர் பரிடுன்ஜங் பஹதூர் ஒருவராவார். நவாப் ஸர் அப்ஸர்-உல்-முல்க் பஹதூர் நவாப் ஸர் நிஜாமத்ஜங் பஹதூர், ராஜாபஹதூர் தி. கிருஷ்ணமாசாரியார் ஆகிய பிரமுகர்கள் மாதிரி இவரும் அந்த சமஸ்தானத்தில் தமதுவேலைத் திறமையினால் தமக்குப் புகழை விளைவித்துக்கொண்டவர். இவர் பார்ஸி வகுப்பைச்சார்ந்தபோதிலும் இவரது குடும்பத்தினர்கள் இந்த சமஸ்தானத்திலேயே வெகு காலமாகத் தங்கி வசித்தவர்கள். இவரும் பிற்காலத்தில் அந்த சமஸ்தானத்தில் உச்சஸ்தானத்திற்கு உயர்ந்ததுபற்றி, தென்னிந்தியப் பிரமுகர்களின் கோஷ்டியில் இவருக்கு ஒரு ஸ்தானம் நிச்சயமாக உண்டு. சரியாகக் கவனிக்குமிடத்து, பார்ஸி ஜாதியினர் முஸ்லீம்கள்போல் தேசங்களின் சில தொகுதிகளை மட்டுமே சார்ந்தவர்களல்லர்; இவர்கள் வெளிப் பிரதேசத்திலிருந்து நமது தேசத்திற்கு வந்து சேர்ந்தவர்கள். இவர்களில் பெரும்பாலர் பம்பாய் மாகாணத்திலேயே தங்கிவிட்டார்கள். எனினும் இவர்களை அம்மாகாணத்திற்குமட்டுமே உரிமையுள்ளவர்களாகக் கருதுவது தவறு. மேற் குறிப்பிட்டவாறு, முஸ்லீம் வகுப்பினர்போல் இவர்களும் எந்தெந்தபிரதேசத்தைப்போய்ச் சேர்கின்றனரோ அங்கந்த பிரதேசத்தினர் ஆகிவிடுகின்றனர். நவாப் ஸர் பரிடுன்ஜி ஹைதராபாத் சமஸ்தானத்துடன் தமது ஜீவிய காலபரியந்தம் சம்பந்தப்பட்டு வந்ததால் இவரை எல்லாவிதத்திலும் அச்சமஸ்தானத்தில் ஒருவராகக் கருதுவது தவருகாது. இது தவிர அச்சமஸ்தானத்தின் முன்னேற்றத்திற்காக இவர் சாதித்துள்ள சேவையானது இவரது பெயர் எந்நாளும் மறந்து போய்விடாமல் இருக்குமாறு செய்ய வல்லது.



நவாப் ஸர் பரிடுன் ஜங் பஹதூர் 1849-ம் வருஷம் செப்டம்பர் மாதம் ஔரங்காபாத்தில் டாக்டர் ஜேம்ஷட்ஜி என்பாரின் ஜ்யேஷ்ட புத்திரராகப் பிறந்தார். இவரது பிதாவும் நிஜாம் கீழ் உத்தியோகத்தில் இருந்து வந்தவர். இவரது இயற்பெயர் பரிடுன்ஜி ஜேம்ஷட்ஜி என்பதாகும். இவருக்கு மிகவும் உசிதமான வித்தியாப்யாஸம் நடத்தி வைக்கப்பட்டது. இவர் சர்வகலாசாலைப் பட்டம் பெருவிடினும், அறிவில் சமர்த்தராக இளமைக் காலத்திலிருந்தே சோபித்து வந்தார்.

உத்தியோகத்தை ஆரம்பித்த காலத்தில் இவர் சில வருஷங்கள் ரெவினியூ இலாகாவில் இருந்தார். பின்பு இவர் ஔரங்காபாத் டிவிஷனில் "சர்வே, செடில்மெண்டு" (அளப்பு, நிலத் தீர்வை) காரியங்களைத் தொடருமாறு நியமிக்கப்பட்டார். இந்த முறை பம்பாய் மாகாணத்தில் முதன் முதல் துவக்கப்பட்டது. நிஜாம் மன்னரின் சமஸ்தானத்தில் இந்த பம்பாய் மாகாணத்திய முறை அனுசரிக்கப்பட்டபோது, இவரே அந்தக் காரியத்தை நடத்துமாறு உத்திரவிடப்பட்டார். இந்த அலுவலை நிறைவேற்றி வைப்பதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜேம்ஷட்ஜி ஔரங்காபாத் டிவிஷனிற்குப் பிறகு, பீர்பர்பானி முதலிய ஜில்லாக்களிலும் தமது வேலையை மேற்கொண்டு முடித்து வைத்தார்; இவ்வாறு இவரது ஆதீனத்தின் கீழ் அடங்கிய ஜில்லாக்களின் விஸ்தீரணம் சுமார் 15,000 சதுர மைல்களாகும். இந்த சேவை, அக்காலத்தில் பிரதம மந்திரியாக விருந்து ராஜ்ய பாரத்தை வஹித்து வந்தவரும், சமஸ்தான பரிபாலனத்தில் அதிநிதானராகவும் விளங்கி வந்த முதலாவது ஸர் ஸாலர் ஜங்கினால் மிகவும் பாராட்டப்பட்டது. இவரது ஊக்கத்தையும், விடா முயற்சியையும், சிரத்தையையும் பஹுமானித்து அந்தப் பிரபு, இவருக்கு ஒரு தங்கக் கடிகாரத்தையும், தங்கச் சங்கிலியொன்றையும் பரிசாக அளித்துக் கௌரவித்தார்.

1883-ம் வருஷத்தில் பரிடுன்ஜி ஜேம்ஷட்ஜி முதலாவது தாலுக்காதாராக உயர்த்தப்பட்டார். மறுவருஷம் இவருக்கு அதற்குமேலான "ஸர்வே செடில்மெண்டு கமிஷனர்" பதவியும்கொடுக்கப்பட்டது. இவருக்கு முன்பு இப்பதவியை ஜனரல் கிளாங் போர்டு என்ற ஆங்கிலேயர் வஹித்துவந்தார். இதினின்று இவரது சேவை எவ்வாறு கவனிக்கப்பட்டு வந்தது என்பது நன்கு புலப்படும்!

1884-ம் ஆண்டில் இரண்டாவது ஸர் ஸாலர்ஜங் (காலஞ்சென்ற பிரதம மந்திரி முதலாவது ஸர் ஸாலர்ஜங்கின் பிரதம குமாரர்) நிஜாம் மன்னரின் பிரதம மந்திரி பதவியை ஸ்வீகரித்துக் கொண்டபோது அவர் இவரையே தமது அந்தரங்கக் காரியதரிசியாக எடுத்துக்கொண்டார். இக்காலம் முதற்கொண்டு இவர் பின்பு அநேக கால பரியந்தம் இந்தப் பதவியை அலங்கரித்து வந்தார். பின்பு அதிகாரம் வஹித்த பிரதம மந்திரிகளில் பலருக்கும் இவர் அந்தரங்கக் காரியதரிசியாக இருந்தார். நவாப் ஸர் அஸ்மன் ஜா பஹதூர் கே. ஸி. ஐ. இ. நவாப் ஸர் விகார்—உல்—உம்ரா பஹதூர் கே. ஸி. ஐ. இ. மஹாராஜா ஸர் கிஷன்பிரஸாத் பஹதூர் ஜி. ஸி. ஐ. இ. மூன்றுவது நவாப் ஸாலர்ஜங் பஹதூர் ஆகிய பெரியார்களுக்கு இவர் அந்தரங்கக் காரியதரிசியாக ஸ்தானம் வஹித்து வந்தார். இவர் வஹித்து வந்த பதவி எளிதல்ல. இந்தஸ்தானத்தைக் கௌரவத்துடனும் மதிப்புடனும் அலங்கரிப்பதற்குத் திறமையும், சாதுர்யமும், அசாதாரண சாமர்த்தியமும் அவசியமாவன. ஒருவர்பின் ஒருவராக சமஸ்தானத்தை நிர்வஹித்து வந்த பிரதம மந்திரிகளுக்கு அந்தரங்கக் காரியதரிசியாக இவர் இருந்து வந்ததனால், அவர்கள் யாவரும் இவரிடம் கொண்டிருந்த திடமான நம்பிக்கையையும், இவரிடம் பூண்ட மதிப்பையும் நன்கு விளக்குகின்றது. தமக்கு மேற்பட்ட அதிகாரிகள் தம்மிடம் மனங்கோணமல் இருக்குமாறு இவர் நடந்து வந்தது இவருடைய திறமையை நிரூபிக்கின்றது. இவர் வஹித்துவந்த

சிறந்த கால்ஸியம் டானிக்.

இருமலுக்கு மேலான நிவாரணி, கர்ப்ப காலத்தில் சாப்பிட ஏற்றது. ஏ. & டி. விட்டமின்கள் சேர்ந்த கால்ஸியமும் கிடைக்கும்.

இன்னிஸ்பேட்டா, ராஜமகேந்திரபுரம்,
3—1—34.

"சென்னை தியோ—கால்ஸின் கம்பெனி, தயாரிப்பான "ஸிரப்தியோ—கால்ஸினை" நான் சென்ற 6-மாத காலமாக சுவாசாசயம் சம்பந்தமான எல்லா நோய்களுக்கும் உபயோகித்து வருவதில் எனக்குப் பூரண திருப்தி ஏற்பட்டிருக்கிறது; மார்க்கெட்டிலுள்ள மற்ற தயாரிப்புகளை விட இது எவ்வளவோ மேலானது; இவற்றில் பல குணமூட்டுவதேயில்லை அல்லது சிறிது தான் குணம் தருகின்றன.

(ஒப்பம்) சி. சத்திராஜு, M B. M. R C. S.
L. R. C. P. & late I. M. S

அவஸ்தையை நீக்கும்

சிரப் தியோ கால்ஸின்

பதவி விஷயத்தில் அக்காலத்தில் அநேக சிக்கல்கள் உண்டு. இதுதவிரசமஸ்தானத்தைப் பற்றிய முக்கிய ரஹஸ்யங்கள் பல இவருக்கு இதுபற்றித் தெரியும்; ராஜீய மந்திராலோசனைகளிலும் இவருக்குப் பங்கு ஏற்பட்டதுண்டு. தம்மிடம் வரும் பிரச்னைகளையெல்லாம் இவர் திருப்திகரமாகத் தீர்த்துவைத்து வந்தது பலருக்கும் சந்தோஷத்தைத் தந்தது.

நவாப் ஸர் அஸ்மன்ஜா பஹதூர் பிரதான மந்திரியாகவிருந்த காலத்தில் இவர் நவாப் மோஷின்- உல்-முல்க் என்ற மற்றொரு பிரமுகருடன், "தக்காணத்திய சுரங்க அவதூறு" விஷயமாக, நிஜாம் கவர்ன்மெண்டின் சார்பில், பார்லிமெண்டரி விசாரணைக் கமிட்டி முன்பு சாக்ஷியம் கூற அனுப்பப்பட்டார். இவருக்குக் கொடுக்கப்பட்ட இந்த அலுவல் பல காரணங்கள் பற்றி முக்கியமானதாகும். இவ் விஷயமாக இவர் செய்த சேவையை அரசாங்கத்தார் நன்கு பாராட்டினர். ஏனெனில் இவருக்கு இதற்காக "ஸி. ஐ. இ." பட்டம் வழங்கப்பட்டது. 1903-ம் வருஷம் டில்லி தர்பார் நடந்தபோது, வைஸ்ராயாகவிருந்த கர்ஸன் பிரபு இவருக்கு இப் பட்டத்தை நேரில் வழங்கினர்.

சொற்பகாலத்திற்கெல்லாம் இவரது இதர கார்யங்களுடன் இவர் நிஜாம் மன்னரால், சமஸ்தானத்தின் அரசியல் காரியதரிசியாகவும் நியமிக்கப்பட்டார். இதனால் இவர் பலகாலமாகவே செய்துவந்த சேவையானது நிஜாம் மன்னரின் நன்மதிப்பைப் பெற்றது என்பதை நாம் ஸ்பஷ்டமாக அறிகிறோம். அச்சமயம் ஒரு பிரபல பத்திரிகை எழுதியதாவது:—'ஹைதராபாத் அரசியல் விஷயங்களைப்பற்றி அறிந்தவர் எவரும் சுலபமாகவே இந்த உத்தியோகத்தின் பிராதான்யத்தைத் தெரிந்து கொள்ளலாம்." இது தவிர இவரை இப்பதவிக்கு நியமித்ததானது, சமஸ்தானத்தின் பல கோஷ்டியினருக்கும் பரம சந்தோஷத்தைக்கொடுத்தது. ஒரு சமயம் ஸர் காஸன் வாக்கர் ரஜாவில் தமது சொந்த தேசம் சென்றிருந்தபோது அவருக்குப் பதிலாக இருப்புப் பாதைகள், சுரங்கங்கள் ஆகிய இலாகாக்களை நிர்வஹிக்கும் அதிகாரம் இவரிடமே ஒப்புவிக்கப்பட்டது.

1911-ம் வருஷத்தில் டில்லியில் தர்பார் நடந்தபோது இவருக்கு "ஸி. எஸ். ஐ." பட்டம் வழங்கப்பட்டது. நமது காலஞ்சென்ற சக்ரவர்த்தி ஐந்தாம் ஜார்ஜ் மன்னரால் இவர் அச்சமயம் இந்தப் பட்டத்திற்குரிய சின்னங்களால் நேராகவே அலங்கரிக்கப்பட்டார். இவருக்கு 1915-ம் வருஷம் ஜூன் மாதத்தில் "ஸர்" (கே. ஸி. ஐ. இ.) பட்டமும் அளிக்கப்பட்டது. நிஜாம் மன்னரும் "நவாப் பரிடுன் ஜங் பஹதூர்" என்ற பட்டத்திற்கு இவரை உயர்த்தினர்.

நவாப் ஸர் பரிடுன்ஜங் பஹதூர் தமதுவாழ்காலம்பூராவையும் மிகவும் உபயோககரமாகக் கழித்து வந்தவர். இவருடைய தாராளத்தைப்பகிர்ந்துகொண்டோர் பலர்; இவருக்கு குறிவைத்துச் சுடுவதில் விசேஷ பிரியம் இருந்தது. வேட்டை முதலிய விளையாட்டுகளில் இவர் சிறுவருக்குரிய ஆர்வத்துடன் இருந்தார். குதிரைச் சவாரி செய்வதிலும் இவர் நிபுணராக அக்காலத்தில் விளங்கினர். புலி முதலான அநேக கொடிய விலங்குகளைச் சுட்டுத் தமது கிருஹத்தை அவைகளால் இவர் அலங்கரித்து வைத்திருந்தார். இவருக்கு ஆங்கில இலக்கியத்திலும் ஆவல் அதிகம். இத்தேசத்திலிருக்கும் அநேக ஆங்கிலப் பத்திரிகைகளுக்கு இவர் அடிக்கடி விஷயதானங்கள் செய்து வந்ததுண்டு. இங்கிலாந்திலிருக்கும் "ராயல் ஆஸியாடிக் கிளப்"பின் ஜீவிய அங்கத்தினர்களுள் ஒருவராக இவர் இருந்தவர். இதே மாதிரி 'காப்டன் கிளப்' மெம்பராகவும் இவர் இருந்தார்.

தற்போதைய நிஜாம் சமஸ்தான நிர்வாக விஷயமாக சில மாறுதல்களை விளைவித்தார். இதற்கு முன்பு இருந்துவந்த பிரதமமந்திரி ஸ்தானத்தை நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாக இவர் தமது ஆலோசனைக்காக ஒரு "எக்ஸிகியூடிவ் கௌன்ஸில்" அதாவது நிர்வாக சபையை ஏற்படுத்திக்கொண்டார். இந்த சபைக்கு ஒரு அக்கிராஸனரை அவர் நியமித்தார். நிஜாம் இவ்விஷயமாக அனுப்பிய "பர்மன்" (உத்தரவு) கவனத்திற்குரியதாகும். கவுன்ஸில் பிரெஸிடெண்டாக முதன்முதலில் ஸர் ஆலி இமாம் நிஜாம் மன்னரால் நியமிக்கப்பட்டார். சிலகாலத்திற்கெல்லாம் 1922-ல் ஸர் ஆலி இமாம் சமஸ்தானத்தை விட்டுச் சென்றுவிடவே நவாப் ஸர் பரீடுன் முல்க் பகதூர் அந்தப் பெரிய ஸ்தானத்திற்கு உயர்த்தப்பட்டார். நிஜாம் மன்னர் கீழ் மிக உயர்ந்த அதிகாரம் இதுதான். ஏற்கெனவே குறிப்பிக்கப்பட்டபடி இப்பதவி பிரதம மந்திரி ஸ்தானத்திறகு சமானமாகும். நவாப் ஸர் பரிடுன் முல்க் பஹதூர் இப்பெரும் பதவியை ஒரு வருஷ காலம் தான் வஹித்தார். இவருக்கு சுமார் 74 வயது ஆகி விட்டபடியால் இவர் அதற்கு மேலாக உத்தியோகத்தில் நீடித்திருக்க இயலவில்லை. நிஜாம் மன்னரின் சேவையையே பிரதானமாகக் கருதி வந்ததால் இவர் தமக்கு வயது மேலிட்டபோதிலும் முதலில் அதற்கு இசைந்தார். இவருக்குப் பின்பு நவாப் வாலி-உத்-தௌலா பஹதூர் அந்த ஸ்தானத்திற்கு உயர்த்தப்பட்டார்.

இத்தகைய விதமாக ஹைதராபாத் சமஸ்தானத்தில் அநேக காலமாகவே சிறப்புற்றுவந்த ஸர் பரிடுன் முல்க் பஹதூருக்குப்பின்பு "கே. ஸி. எஸ். ஐ." பட்டமும் வழங்கப்பட்டது. இது தவிர இவருக்கு "ஸி. பி. இ." பட்டமும் கொடுக்கப்பட்டது. நவாப் ஸர் பரிடுன் ஜங் பஹதூர் 1928-ம் வருஷம் நவம்பர் மாதம் 26-ம் தேதியன்று தமது 79-வது பிராயத்தில் காலமானர். இவரது தேக வியோகத்தினால் அந்த சமஸ்தானம் ஒரு பிரபலஸ்தரை இழந்ததுமல்லாமல், பல வருஷங்களாக அதன் முன்னேற்றத்திற்காகப் பிரயாசைப்பட்டு வந்த ஒரு பிரமுகரையும் இழந்தது.

நீலகிரி

காப்பிக்கொட்டை

கீழ்க்கண்ட ரகங்களை சகல சார்ஜும் உள்பட சென்னை ராஜதானியில் அல்லது பம்பாய்க்குத் தெற்கேயுள்ள எந்த ஸ்டேஷனுக்கு வேண்டுமானாலும் அனுப்பப்படும்:—

— வி. பி. ரெயில்வே பார்சல் மூலமாய் —

10 lb எக்ஸ்ட்ரா போல்டு தட்டைக்கோட்டை ரூபா 5—2—0
கூட்ஸ் வண்டி மூலமாக (Goods Train)
1×30 lb மூட்டை நீலகிரி "O" சைஸ் ,, 14—4—0
1×30 lb மூட்டை ,, எக்ஸ்ட்ரா போல்டு ,, 12-11—0

இன்னும் இதர காப்பிப்பொடி டீ தினுசுகளின் விலை விவரங்களுக்கு :: :: கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும் :: ::

யுனைடெட் காப்பி சப்ளை கம்பெனி, லிமிடெட்,

மானேஜிங் ஏஜெண்ட்ஸ்

T. ஸ்டேன்ஸ் & Co, Ltd., கோயம்புத்தூர்.

போலிகளைக் கண்டு உஷார்!!!

அமிர்தாஞ்சனம்

சகல வலிகளையும் போக்கும் இந்திய திவ்யாமிர்தம்

அமிர்தாஞ்சனம் டிப்போ

பம்பாய், மதராஸ்; கல்கத்தா.

"குஜராத்சமாச்சார்" (தினப் பதிப்பு)
"பிரஜாபந்து" (வாரப் பதிப்பு)

[1898-ல் ஸ்தாபிக்கப்பட்டவை]

குஜராத்தில் பிராபல்யம் வாய்ந்தவை. ஆமதாபாத்தினின்று பிரசுரிக்கப்படுபவை.

குஜராத்தில் உங்கள் வியாபாரம் பெருக வேண்டுமானால் **இப்பத்திரிகைகளில் விளம்பரஞ் செய்யுங்கள்.**

ஆங்கிலத்திலேயே கடிதங்கள் எழுதவேண்டும்.

Manager, **Gujarat Samachar & Praja Bhandhu**
AHMEDABAD.

HAVE A SOUND SLEEP

By using our Indian made Mosquito curtains, highly approved by persons of every rank for their strong netting, durability and beautiful finishing.

PRICES.

		Ordi-nary.	Supe-rior.	Best	
6' x 3½' x 3½'	Rs.	1-0	1-4	1-8	each
6' x 4' x 4'	„	1-4	1-8	1-12	„
6½' x 4½' x 4½'	„	1-8	1-12	2-0	„
7' x 5' x 5'	„	1-12	2-0	2-4	„
7½' x 6' x 6'	„	2-0	2-4	2-8	„

Purchaser of three will get one curtain 6' x 4' x 4' free. Packing Free.
POSTAGE EXTRA.

PRABHAT TRADING CO.,
12, Sikderpara Lane, Barabazaar,
CALCUTTA.

ஸ்திரீகள் கூட்டம்

(காசினி எழுதியது.)

* * * 'எங்கள் ஊரில் ஒரு புதிய சம்பவம் சில நாட்களுக்கு முன் நடந்தது. உனக்கு உடனேயே எழுத வேண்டும் என்று எண்ணிக்கொண்டிருந்தேன்; எதோ மறந்துவிட்டேன். எங்கள் பக்கத்தாத்து மாட்டுப் பெண்ணும், இன்னும் இரண்டு மூன்று பேர்களுமாகச் சேர்ந்து ஒரு ஸ்திரீகள் கூட்டம் வைத்தார்கள். இது எங்கள் ஊரில் இதுவரையில் நடக்காத சம்பவமாகையினால் நாங்கள் எல்லோரும் போயிருந்தோம். கைக் குழந்தைகளை வீட்டில் பார்த்துக்கொள்ளுவதற்கு ஆள் சௌகரியமில்லாதவர்கள் சற்றுப் பெரிய குழந்தைகளையும் அழைத்து வந்திருந்தார்கள். குழந்தைகள் அழுததிலும், அவைகளைச் சமாதானம் செய்யப் பெரியவர்கள் போட்ட சப்தத்திலும், மேடை மேல் நின்று பேசுகிறவர்கள் என்ன சொல்லுகிறார்கள் என்பதே சரியாகக் கேட்கவில்லை. தினசரிப் பத்திரிகையில் உங்கள் ஊரில் ஒரு மாதர் கூட்டம் வைத்து அதில் பண்டிட் ஜவஹர்லால் நேருவை வரவேற்றீர்கள் என்று படித்தேன். எனக்கு நாம்போவதற்கில்லையே என்று இருந்தது. இது விஷயம் விவரமாக எழுது' என்று நீ கேட்டிருக்கிறாய்.

ஆமாம்; இந்தக் கூட்டத்திற்கு நானும் போயிருந்தேன். ஆனால் ஒன்று; குழந்தைகள் அழுகைக்கு இக்கூட்டத்திலும் குறைச்சல் இல்லை கூட்டத்தில் கொண்டு வந்தால், இரண்டும் கெட்டான் குழந்தைகள் அழாமல் என்ன செய்யும்? வருபவர்களுக்கோ, பண்டிதரைப் பார்த்து, அவர் சொல்லும் விஷயங்களைக் கேட்க வேண்டும் என்னும் ஆசையில், வீட்டைவிட்டுப் புறப்படும் பொழுது, குழந்தையை எப்படியாவது சமாதானம் செய்து அழாமல் வைத்துக்கொள்ளலாம் என்று தோன்றுகிறது. பிறகு குழந்தை ஒரு பக்கம் அழ, மற்றவர்கள், 'சப்தம் வேண்டாம்' 'குழந்தையைச் சமாதானப்படுத்து,' குழந்தையைக் கொண்டு வந்து கஷ்டப்படுவதைவிட வராமலே இருந்திருக்கலாமே! என்றெல்லாம் சொல்ல, என்ன செய்வது என்று தெரியாமல் விழிக்க வேண்டி வருகிறது. எல்லாம் இப்படித்தான். ஒரு குழந்தை நடுப் பிரசங்கத்தில் அழுத பொழுது, பண்டிட்ஜி, சிரித்தாரே ஒழிய, இதைத் தான் ஒரு அசௌகரியமாக நினைத்ததாகக் காட்டிக்கொள்ளவில்லை. இது விஷயங்களில் அவர் மனச்சாந்தி உடையவராகவே தோன்றுகிறார். ஆனால் அவர் ஜனநாயக ஆக்ஷியில் முதிர்ச்சி அடைந்தவர் அன்றோ? இவ்வித சௌகரியமற்ற அமளி, குமளிகளில் சீர்திருத்தம் செய்வது சுலபமில்லை என்பது அநுபவமாகத் தெரிந்திருக்குமல்லவா?

'அவர் என்ன சொன்னார்?' என்று நீ கேட்டிருக்கிறாய். அதன் சாராம்சத்தை நீ தினசரிப் பத்திரிகைகளில் படித்திருக்கலாமே? முக்கியமாக இதர ஆக்ஷிக்கு உள்பட்ட ஒரு தேசம், சுதந்தரம் பெறுவதினால்தான் சரியான முன்னேற்றம் அடையும் என்று சொன்னார். மாதர்கள் முன்னேற்றம்

ஐந்து வருஷ ஸேவை.

வி. குப்புசாமி ஐயர், பி. ஏ. பி. எல்., அட்வகேட்.

கைலாஸபுரம், திருநெல்வேலி ஜங்ஷன், 23-3-35.

கேசவர்த்தினியை உபயோகித்ததால் அடைந்த அநுகூலத்தைத் தெரிவிப்பதில் எனக்குப் பரம ஸந்தோஷம். இழந்த கூந்தலை மீட்டுக்கொடுப்பதாலும், கூந்தலை நீண்டு வளரச்செய்வதாலும், இது நமது சிறுமிகளுக்கேற்றதொரு பிரஸாதமே! சிறுவயதிலிருந்து உபயோகித்தல் மிகத் தரம். நாங்கள் ஐந்து வருஷகாலமாக இதை உபயோகித்து வருகிறோம்.

(கையொப்பம்) வி. குப்புசாமி ஐயர்.

மாத உபயோகத்துக்குப் போதிய கேசவர்த்தினி விலை அணா 12; கேசவர்த்தினி ஷாம்பு விலை அணா 12; மேற் செலவு வேறு.

தென் இந்திய ரஸாயன சாலை,
லஸ் ரோடு, மயிலாப்பூர், சென்னை.

திருவாங்கூர் திவான் ஸர் ஸி. பி. ராமசாமி அய்யருக்குச் சென்னையில் ஒரு உபசாரம் நடத்தப்பட்டது

அடைய விரும்பினால், ஆண் மக்கள் உதவியை எதிர் பார்க்காமல், சுய முயற்சியினாலேயே தங்கள் லக்ஷியத்தைச் சாதித்துக்கொள்ளவேண்டும் என்றும் சொன்னார். அவர் ஆங்கிலத்தில்தான் பேசினார். கொஞ்சம் பேசி முடிந்ததும், அவர் உட்காரவே, மற்றொருவர், அவர் சொன்னதைத் தமிழில் தர்ஜமாப் பண்ணிச் சொன்னார். பண்டிட்ஜி, மறுபடியும் தான்விட்ட இடத்தில் இருந்து, துவக்கும் முன்பு, 'நாங்கள் இவ்விதம் மாறி வருவது ஒரு பொம்மலாட்டம் போலில்லையா? என்றார் ஒரு ஸ்திரீ, 'உங்களுடன் என்ன பேசுவது என்று தெரியவில்லையே?' என்றபொழுது, 'நான் பேசிப் பேசிக் களைத்திருக்கிறேன். நீங்கள் உங்களுக்குள் பேசிக்கொள்ளுங்களேன், நான்கேட்கிறேன்' என்றாராம். அந்தப் பக்கம்தான் வரப் போகிறாரே ஏதாவது ஒரு ஊருக்குப் போய், நீயும் அவரைப் பாரேன்.

கதர் புடவை

பண்டிட்ஜீ என்றதும் நினைவு வருகிறது. பொதுக் கூட்டங்களுக்குக் கட்டிக் கொண்டு போவதற்கென்று லேடி சின்னையாவின் மகள், மருமகள் இருவரும் ஆளுக்கு இரண்டு கதர் புடவைகளும், நாலு ஜாக்கட்டுகளும் வாங்கிக் கொண்டார்கள். 'அட தேசாபிமானமே! கனமாக இருக்கு, கட்டிக் கொண்டால் சாக்கு மாதிரியில் இருக்கு என்று சொன்னதெல்லாம் போய், ஜவஹர்லால் வருகிறார் என்றதும் கதர் வாங்கி விட்டீர்களா? இது அவர் ஊரைவிட்டுப் போகும் வரையில் தானே உபயோகப்படும்? அப்புறம், கிழித்துப் பாவாடை, சட்டை குஷன் எல்லாம் தைக்கக் கொஞ்ச நாளுக்குப் போது போகு மாக்கும்? வெளி வேஷமே?' என்றெல்லாம் ஸர் சின்னையாவின் மகன் இவர்களைப் பரிகாசம் செய்தான்.

இதில் ஒரு புடவை மிகவும் அழகாக இருந்தது. ஒரு விதத் தவிட்டு நிறம்; நடுவில் இலேசான கறுப்பில் பூக்கள் மாதிரியில் அச்சிட்டிருந்தது. கரைக்கு ஆழ்ந்த கறுப்பில், பூக்கள், கொடிகள் மாதிரியில் அச்சிட்டிருந்தது. புடவை ஆறு கஜம் புடவைதான். துணியும் சற்று மோட்டாவாகத்தான் இருந்தது. புடவையின் விலை ஆறரை ரூபாய்கள் ஆச்சுது. இதற்கு ஏற்றாற்போல் லேடி சின்னையாவின் மகள் ஒரு சட்டையும் வாங்கி இருந்தாள். இதற்குப் 'புலி வேஷம்' சட்டை என்று லேடி சின்னையா பெயர் வைத்தாள். பார்வைக்குப் புலியின் மேல் இருக்கும் கோடுகள் போல் இதிலும் கோடுகள் போட்டிருந்தது எல்லாம் சட்டை, புடவை இரண்டும் சேர்த்து விலை எட்டு ரூபாய்கள் கூட ஆகவில்லை. இருந்தாலும் பார்வைக்கு வெகு கம்பீரமாக இருந்தது. இந்தக் கதர் உடைக்கு ஏற்படும் ஒருவித அழகு மற்றப் புடவைகளுக்கு ஏற்படக் காணோமே! என்று என்னுடைய அத்தை கூடச்சொன்னாள்.

கதர் கனமாக இருப்பதே இதற்குக் காரணம் என்று எண்ணுகிறேன். இவ்வளவு கனமாக இருப்பதினால், உள் பாவாடை கட்டாமல் இதைக் கட்டுகிறார்கள். இது உடம்புடன் சேர்ந்து, ஒட்டிக் கொள்ளாமலும் கொசவாம் அப்படியே நிற்பதினாலும், பார்வைக்கு அழகாக இருக்கிறது. பட்டுப் புடவைகளிலேயே, கனமான முறுக்குப் பட்டினால் நெய்யப்பட்ட புடவை, உடுத்திக் கொள்ளுபவர்களுக்கு ஒருவித சோபையை அளிபபதை நீ பார்த்திருக்கலாம். நல்ல தேகக் கட்டு உடையவர்கள், இவ்விதப் புடவைகளை உடுத்திக் கொள்ளுவதினால், ஒருவித கம்பீரத் தோற்றத்துடன் விளங்குகிறார்கள். மற்றைய விஷயங்கள் அடுத்த கடிதத்தில்.

சிறந்த கூந்தல் ஆகாரம்

உடலுக்கு எப்படி நல்ல உணவு அவசியமோ அதே மாதிரி கூந்தலுக்கும் சிறந்த ஆகாரம் அவசியமானது.

எனவே உலகப்புகழ்பெற்ற காமினியா ஆயில் (ரிஜிஸ்டர்ட்) உபயோகியுங்கள். கூந்தலின் ஆரோக்கிய வளர்ச்சிக்கு அத்யாவசியமான சத்துக்கள் பல சேர்ந்தது. மூளைக்குக் குளிர்ச்சி; துல்லிய மணம் நிறைந்தது.

விலை புட்டி 1-க்கு ரூ. 1.
,, 3 புட்டிகள் ரூ. 2-10.
வி. பி. சார்ஜ் தனி.

தபால் செலவுக்காக அரையணா ஸ்டாம்பு அனுப்புவோர்க்கு சாம்பிள் இலவசம்.

ப்ராசீன மலர்களின் சுவாசனையும், புத்தப் புதிய இனிமையும் வாழ்விற்கு மகிழ்ச்சியூட்டுபவை; இவ்வளவையும் கீழ்க்கண்டதன் வாசனையில் நன்கு அனுபவிக்கலாம்.

ஆட்டோ டில்பஹார்

(ரிஜிஸ்டர்ட்)

ஒரு சில துளிகள் பல நாட்களுக்கு அழியாத வாசனையூட்டும்; ஏனெனில் ஆட்டோ டில்பஹாரில் விரைவில் ஆவியாக மாறிவிடும் ஆல்கஹால் கிடையாது.

விலை ¼ அவுன்ஸ் ரூ. 1-4. 1 டிராம் 12 அணா.

தபால் செலவு தனி.

சோல் ஏஜெண்டுகள்:—

The Anglo Indian Drug & Chemical Co
BOMBAY 2.

Tele:—"SIMILICURE" Box 643 CAL

வெளிவந்து விட்டன!

ஹோமியோ புத்தகங்கள்

ஹோமியோ வைத்திய முறை
தத்துவம்

தெலுங்குப்பதிப்பு விலை ரூ. 1 தான்.

M. BHATTACHARYYA & Co.,
Economic Pharmacy, 84, Clive Street, CALCUTTA.



ஜகத்ரக்ஷக
ஸ்ரீ ஷண்முக யந்திரம்
125,6600 ஜனங்கள் போற்றுவது
பரீக்ஷை வெற்றி, ஜீவன விருத்தி, சொப்பன மிரட்சி, சத்துரு அடக்கம், வழக்கு ஜெயம், புத்திர விருத்தி, குடும்ப ஒற்றுமை, நோய்பேய் ஒழிதல், யந்திரம் 1க்கு ரூ 2.
மாந்திரீக மருத்துவ ஆபீஸ்,
வாலாஜாபாத், P.O, S.I.R. சென்னை.

ஜகபப்ரசித்தி பெற்ற
ஆர். மூகம் அண்டு கம்பெனியாரின்

நெ. 1. மணிமார்க் பட்டணம் மூக்குத் தூள்

உபயோகியுங்கள்.

1 நெ. வீசை 1-க்கு விலை ரூ. 4 0
2 நெ. வீசை 1-க்கு விலை ரூ. 3 8

ஏஜண்டுகள் தேவை:—
விலாசம்: ஆர் மூகம் அண்டு கம்பெனி,
நெ. 5, ஓல்டு ஜெயில் தெருவு, மதராஸ்



கிருமிகள்

மூக்கிலும், தொண்டையிலும்
வளருகின்றன.
'மிஸ்டலை' உபயோகித்து
தொத்துநோயைத் தடுத்துக்கொள்க.

Mistol

நாசிக்கு ஆரோக்யம்.

நஞ்சன்கூடு பல்பொடி ப்ாக்டெரியின்

ஜீ. ஜீ. **கூலாயில்** சிறந்தஸ்நானத் தைலம் வைட்டன் ஸால்

அணா 3 யுனைடெட் கன்ஸர்ன், பந்தர் தெரு, மதறாஸ் ரூ. 1.

(முக்கிய ஊர்களில் டிப்போ ஏற்படுத்துகிறோம்)

நடிப்பின் வெற்றி

(2-ம் பக்கம் தொடர்ச்சி)

த்தார். நாடகம் முடிந்த றகு எல்லோரும் தங்கள் ல்லமேகினர். அன்றைய ாடகத்தைப் புகழ்ந்து பேசாதவர்களே இல்லை.

* * * *

எப்பொழுதும் அதிகாலையிலேயே நித்திரையைவிட்டு எழுந்திருக்கும் கோவிந்தராஜன் அன்று வெகுநேரமாகியும் ழுந்திருக்கவில்லை. அன்று ஞாயிற்றுக்கிழமை. ஆபீஸ் விடுமுறையாகையால் அவ்வாறு தூங்குகிருனேவென்று கோமளம் நினைத்தாள். ஆனால், அப்படி ஒருநாளும் அவன் தூங்கினது கிடையாது ஆகையால், தற்கும்எழுப்பிப்பார்க்கலாம் ன்று எழுப்பினுள் கோவிந்தராஜன் கண்ணை விழித்தான். கோமளம், "இன்று என்ன இவ்வளவு தூக்கம்? ராத்திரி வேலை அதிகமா? இரவில் வெகுநேரம் விழித்திருப்பீர்கள் போலிருக்கிறதே? கண்களை வந்து காண்கின்றனவே?" ன்று கேள்விமேல் கேள்வியாக அடுக்கிக்கொண்டே ானுள்.

கோவிந்தராஜனுக்கு இவைகளுக்கெல்லாம் பதில் சால்ல முடியவில்லை. தன் னைவியிடம், "அதெல்லாமன்றுமில்லை; நான் வரும் பொழுது இரண்டு மணியிருக்கும். ராத்திரி வேலை அதிகம் ான்" என்று சமாதானம் றிவிட்டு, "நேற்று நாடகம் ப்படியிருந்தது?" என்று கட்டான்.

கோமளம், "நாடகம் மிகவும் நன்ருகவிருநதது. லாவதி'யாக நடித்தவள் வகு நன்ருக நடித்தாள். அதாக அவளுக்கு ஒரு தங்கப் தக்கம் கூடப் பரிசளித்தார். நீங்கள் நாடகத்தைப் ர்க்காதது எனக்கு ரொம்ப ருத்தம்" என்று கூறினுள். காவிந்தராஜனுக்குத் தன் னதில் சந்தோஷமும், தன்னுடைய செய்கையை அறியால் தான் சொன்னதை முற்றிம் உண்மையென நம்பி ஏமா

ந்திருக்கிருளே என்று தன் மனைவியின்மீது இரக்கமும் உண்டாயிற்று. பிறகு காலைக் கடன்களை முடித்துக்கொண்டு காபியருந்திவிட்டுக் கோவிந்தராஜன் வெளியே சென்ருன்.

* * * *

சுமார் பத்துமணியிருக்கும். நாகரீகமாக உடையுடுத்தியிருந்த ஒரு யௌவன மடந்தை கோவிந்தராஜன் வீட்டிற்கு வந்து "ராஜு இருக்கிருரா?" என்று கோமளத்தினிடம் கேட்டாள். அந்த ஸ்திரீயைக் கண்டதும் கோமளத்திற்குண்டான ஆச்சரியத்திற்கோரளவில்லை. அவள் கண்களையே அவளால் நமப முடியவில்லை தான் காண்பது கனவா, நினைவா என்று கூடச் சந்தேகம் வந்துவிட்டது. அவள் தான் முந்தின நாளிரவு நாடகத்தில் 'லீலாவதி' யாக நடித்தவள் கோமளம் எல்லாவற்றையும் மனதில் அடக்கிக்கொண்டு, "ராஜு என்ற பெயருடையவர் இங்கு ஒருவருமில்லை. என் கணவன் பெயர் கோவிந்தராஜன். அவர் வெளியில் போயிருக்கிருர். நீ யார்?" என்றுகேட்டாள். அந்த ஸ்திரீ, "நான் உன் கணவனைத்தான் தேடிவந்தேன். நான் நாடகத்தில் நடிக்கும் ஓர் நடிகை எனக்கும் அவருக்கும் ரொம்ப காலமாகச் சிநேகம் உண்டு. நேற்றிரவுகூட என் கூடவே தானிருந்தார். இப்பொழுது தான் அவர் பெரிய மோசக்காரர் என்று தெரிந்துகொண்டேன். இதுவரை தனக்கு ஒரு மனைவியிருப்பதாக எனக்குத் தெரிவித்ததே கிடையாது. என்னை விட்டுப் பிரிவதில்லை என்றுகூட ஒருகாலத்தில் பிரமாணம் செய்து கொடுத்திருக்கிருர். என் பெயர் லீலாவதி. அவர் வந்ததும் நான் வந்துவிட்டுப் போனதாக மாத்திரம் அவரிடம் தெரிவி" என்று கோபத்துடன் கூறிவிட்டு, அவளுடைய பதிலை எதிர்பாராமலே சரேலென்று வெளியே போய்விட்டாள்.

கோமளத்திற்கு இது பூராவும் நாடகமாகவே தோன்



சிங்கப்பூர் பாலம்

அதி அற்புத அழகு

சுகாதாரம் மிகுந்த

டில்பஹார் ஸோப்பு

(ரிஜிஸ்டர்ட்)

மூன்று கட்டிகளின் விலை

ஒரு ரூபாய் தான்

(தபால் செலவு தனி)

டில்பஹார் ஸோப்பு சிறந்தசுத்தி கரிப்பைத் தரும் கிருமி நாசினி.

சரும எரிச்சல் அல்லது அரிப்பை அகற்றிச் சருமத்தைப் பாதுகாக்கும். அழகை விருத்திசெய்யும்.

உங்கள் சருமத்தைப் பாதுகாருங்கள் !

ஆட்டங்களில் ஈடுபட்டுள்ளவர்களும், இதர பெண்களும் காமினியா ஸ்னோ வின் சருமப் பாதுகாப்பையும், போஷாக்கையும் பெரிதும் பாராட்டுகிருர்கள். சருமத்திற்குப் புத்துயிரும், உல்லாசமுமளிப்பது. சருமச் சுருக்கங்கள் முதலியவற்றை நீக்குவதில் சிறந்ததென சிபார்சு பெற்றது. விலை புட்டி 1-க்கு 10 அணு. தபால் செலவு தனி. தபால் செலவுக்காக 1 அணு ஸ்டாம்பனுப்புவோருக்கு சாம்பிள் இலவசம்.

சோல் ஏஜண்ட் :—

The Anglo Indian Drug & Chemical Co

285, Jumma Musjid, BOMBAY 2.

ஸ்டாக்கிஸ்டுகள் : ஜே. எஸ். சேட் & கம்பெனி,

68, பைக்ராப்ட்ஸ் ரோட், — திருவல்லிக்கேணி.

DIAMONDS ESTD 1910 JEWELLERY

டாக்டர் எஸ். ஜே. ஈப்பன்,
பெஜவாடா, 6-9-35.

மெஸர்ஸ் பாபாலால் & கம்பெனியார் ஒரு ஜோடி வைரக்கம்மல்கள் தயாரித்தனுப்பினர். வைரங்களின் ரகமும், வேலைப்பாடும் மிகத் திருப்திகாமாக விருந்தன. ஆர்டர்களை உடனுக்குடன் தீர்த்து வைத்தது சிலாகிக்கத் தக்கது. சார்ஜுகளும் மிதமானவை.

BAPALAL & Co

216. China Bazaar. MADRAS.

ஏமாருதீர்கள் !

எங்கள் வைத்தியசாலையின் மருந்துகள் மிகவும் சிலாக்கியமானது எனப்பலராலும் புகழப்பட்டு வருதல் கண்டு, சிலர் வேறு மருந்துகளை எங்கள் மருந்துகள் அதாவது சி. எம். சாமி மருந்துகள் என்று சொல்லி ஏமாற்றி விற்பனை செய்து வருகிறதாகத் தெரிகிறது. எங்கள் வைத்தியசாலையிலிருந்து வெளி இடங்களுக்கு நாங்கள் யாரையும் அனுப்பவில்லை. எங்கள் ஏஜண்டு என்றும், எங்கள் மருந்துகள் என்றும யாராவது விற்பனை செய்தால் அதைப் பொதுமக்கள் வாங்கி மோசம் போகாமல் இருக்கும்படி எச்சரிக்கிரும்

மருந்து வேண்டியவர்கள் நேரே எமக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளுங்கள்.

மலையப்பசாமி வைத்தியசாலை,

பழனி, S. I.

றிற்று. தன் கணவன் அப்படி நடந்துகொள்பவனல்லவே என்று தன் மனதைத் திடப்படுத்தினள். ஆனல், அந்தச் சந்தேகப்பேய் அவள் மனதைவிட்டு அகலவில்லை!

நீலாவதி சொன்னது வாஸ்தவமாகவிருக்கலாமோ? ஆம்; ஏன் இருக்கலாகாது? ஆண் பிள்ளைகள் மிகவும் கன்னெஞ்சு படைத்தவர்கள். அவர்களை நம்பவே கூடாது. வெளிக்கு என்னிடம் மிகவும் அன்புள்ளவர்போல் பாசாங்கு செய்துவிட்டு, வேறொரு ஸ்திரீயிடம் பற்றுதல் வைத்துக்கொண்டிருக்கிருரே! என்ன வஞ்சகம்! நேற்றிரவு என்னிடம் ஒரு நண்பனைப் பார்க்கப் போகிறேனென்று சொல்லிவிட்டுத் தன் சோர நாயகி வீட்டிற்கல்லவா போயிருக்கிருர்! அவரை நோவதில் என்ன பயன்? எல்லாம் என் விதி'' என்றுசொல்லி வருத்தப்பட்டுக்கொண்டிருந்தாள்.

அந்தச் சமயம் வெளியே சென்றிருந்த கோவிந்தராஜன் உள்ளே வந்தான். அழுத கண்ணும் சிந்திய மூக்குமாக இருக்கும் தன் மனைவியைக் கண்டான். அவனுக்கு ஒன்றும் தோன்றவில்லை. உடனே அவளிடம் போய், "கோமளம், ஏனிந்தக் கோலம்? உனக்கு என்ன நேரிட்டது? நான் வெளியில் செல்லும்போதுகூடச் சந்தோஷமாக விருந்தாயே? உனக்கென்னவேண்டும் சொல்; இப்பொழுது செய்து முடிக்கிறேன்'' என்று கூறினன்.

அதற்குக் கோமளம், "எனக்கு வேண்டியதெல்லாம் தாங்கள் சந்தோஷமாக ஒருவருடைய இடையூறில்லாமல் இருக்கவேண்டியது. அவ்வளவுதான்'' என்றாள்.

கோவிந்தராஜன், "இப்பொழுது எனக்கென்ன சந்தோஷக் குறைவு? அதிலும் நீ இருக்கும்பொழுது எனக்கொருவிதமான குறைவுமில்லையே?'' எனப் பதிலளித்தான்.

கோமளம், "யாரிடம் இந்த வேஷமெல்லாம் போடுகிறீர்கள். நான் ஒருத்தியிருப்பதினுல் உங்களுக்கு இடைஞ்சல். நான் எங்காவது போய்விட்டால், நீங்கள் உங்கள் காதலியுடன் சந்தோஷமாயிருக்கலாமல்லவா?'' எனக் கூறினள்.

கோவிந்தராஜன்:— கோமளம், நீ என்ன ஏதாவது கனவு கண்டனையா! என் காதலி யார்? நீ தான்!

கோமளம்:—நானு, நீலாவதி உங்கள் ஆசை நாயகி.

கோவிந்தராஜன்:— யார்? நீலாவதியா? அவள் யார்? எனக்குத் தெரியாதே!

இவர்கள் இவ்வாறு பேசிக்கொண்டிருக்கும்பொழுது வெளியிலிருந்து கோவிந்தராஜனைக் கூப்பிட்டவண்ணம் ஒருவர் உள்ளே வந்தார். வந்தவர் கோவிந்தராஜனைப் பார்த்து, "நேற்று எங்களுடைய நாட... நின்று போகும் நிலைமையிலிருக்கையில் தாங்கள் எங்களைக் கைதூக்கி முக்கியமான பாத்திரத்தைத் தரித்து நடித்ததற்காக மிகவும் வந்தனம். தங்களுடைய நடிப்பினுல் தான் நேற்றைய நாடகம் மிகவும் வெற்றிகரமாக நடந்தது. வசூலும் நாங்கள் எதிர்பார்த்ததற்கு ஒரு மடங்கு அதிகமாகவே வசூலாகிவிட்டது. தங்களுடைய நடிப்பின் திறமையையும், வாக்சாதுரியத்தையும் ஜனங்கள் புகழுவதை என்னல் சொல்லத் தரமன்று. ஆகையால், எங்களுக்காக நீங்கள் இதை ஏற்றுக்கொள்ள வேண்டும்'' என்று சொல்லி, ஐந்நூறு ரூபாயைக் கோவிந்தராஜனிடம் கொடுத்து, விடை பெற்றுக்கொண்டு போய்விட்டார்.

அப்பொழுது கோமளத்தின் மனநிலை எவ்வாறு இருந்திருக்குமென்பதைச் சொல்லவும் வேண்டுமா? தன் கணவனின் மோசத்தை அப்பொழுது தான் தெரிந்துகொண்டாள். அவன்மேல் தான் வீணுகச் சந்தேகம் கொண்டதற்காக அவனிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டாள். பிறகு கோமளம், கோவிந்தராஜனிடம், "தாங்கள் எப்படி இந்த நாடகக் கம்பெனியில் நடிக்கும்படி நேர்ந்தது?'' என்று கேட்டாள். கோவிந்தராஜன், "அவர்கள் கம்பெனியில் ஸ்திரீ பார்ட்டாக நடிப்பவருக்கு எதிர்பாராத விதமாக உடம்பு அசௌகரியமேற்பட்டது. அன்றைய நாடகத்துக்கு ஏற்பாடு செய்துவிட்டபடியால் திடீரென்று நிறுத்தினுல் அதிக நஷ்டமேற்படுமென்று அந்தக் கம்பெனி மானேஜா வேறு யாராவது நடிகர்கள் அகப்படுவார்களா என்று தேடிக்கொண்டு வரும்பொழுது நான் எங்கள் சபாவில் ஸ்திரீபார்ட்டாக நடித்திருப்பதை யாரோ சொல்லக் கேள்விப்பட்டு என்னிடம் வந்து மிகவும் மன்ருடினபடியால் நான் ஒப்புக்கொண்டேன். இதுதான் காரணம்'' என்று சொல்லி முடித்தான். கோமளத்திற்குண்டான ஆனந்தத்திற்கோரளவில்லை.

*   *   *   *

மனோகரமான இரவு. சந்திரன் வானில் தன் ஏகதேசாதிகாரத்தைச் செலுத்திக்கொண்டிருக்கிருன். காதலர்கள் தம் வீட்டு மேன்மாடியில் உல்லாசமாகப் பேசிக்கொண்டிருக்கிருர்கள். அப்பொழுது கோமளம், "எப்படியானுலும் ஆண்பிள்ளைகளை நம்பக்கூடாது. என்னை இன்று இவ்வளவு தூரம் வருத்தத்துக்குள்ளாக்கி விட்டீர்களே? நேற்று நீங்கள் தான் நடித்தீர்களென்று எனக்குத் தெரியவில்லை வாஸ்தவமாகவே யாரோ ஒரு ஸ்திரீதான் நடித்தாள் என்றல்லவா நினைத்துக்கொண்டிருந்தேன்!'' என்று சொல்லி அவனுடைய நடிப்புத் திறமைக்காக அவனுக்குப் பரிசாக அவனுடைய கன்னங்கள் சிவக்க முத்தமிட்டாள்.

கோவிந்தராஜன் தனக்கு நாடகத்தில் கிடைத்த ரூபாயை மதுவிலக்குப் பிரசாரத்திற்காக நன்கொடையாக அளித்தான்.

வருஷப்பல...

மாதவாரி ஒருவருஷப்பலன் எழு... ரூ. 3. வாராந்திர பலன் எழு... ரூ. 10. தர்ம நியாயமான 5 கேள்... களுக்கு பதில் எழுத ரூ. 1. வி... செலவு 5 அணு. ஜாதக விவரம் அ... லது கடிதம் எழுதும் போதுள்... நேரம், சுமார் வயது, பெயர் தே...

ஹனுமான் ஜோதிஷ ஆச்ரம...
திருத்தணி, S. இந்திய...

டாக்டர் ஜம்மி வெங்கடராமணய்யாவின்

லிவர்க்யூர்

குழந்தைகள் ஈரல், குலைகட்டிகளுக்கு நிகரற்றது என்று டாக்டர்களாலும், பெற்ருேர்களாலும் போற்றப்பட்டது.

அநேக கண்காட்சிகளில் தங்கமெடல்களும், நற்சாட்சி பத்திரங்களும் பெற்றது

ரங்கூன் ஏஜெண்டு:—சிலையன்ஸ் பார்மசி, 125-12, பின்னட் வீதி—ரங்கூன்.

செவிடு

"டெப்கில்லர்'' செவிட்டுத் தன்மையை சாசுவதமாகப் போக்கிவிடும். இன்னும் காதில் ஏற்படும் கோளாறுகளையும் அகற்றிவிடும். எவ்வளவு நாள்பட்ட செவிடாக விருந்தாலும் சரி, சிறிதும் சந்தேகமின்றி தரமாக நிவர்த்திக்கப்படும்; செவிடர் செவ்வையாகச் செவியுறுகிறார். கால்செவிடு, அரைச்செவிடு முழுச்செவிடு எதுவாகவிருந்தாலும் அக்கரையில்லை; நீண்டகால ஜலதோஷம், இருமல், ஜுரம், தொ... கோளாறு, மூக்குக் கோளாறு முதலிய எக்காரணங்களால் ஏற்பட்ட செவிடாயினும் சரி குணமாகிவிடும். ...தலும் நின்றுவிடும். ஆயிரக்கணக்கானவர்கள் குணம் பெற்றிருக்கின்றனர். விலை ரூ. 5; தபால் செலவு ... சென்னையில் எல்லா பிரபல மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கும். • அல்லது,

MAHAMBS TRADING COMPANY OF ASIA, Indian Depot, P O Box 2186 Bomba...

இந்திய தேத்
தண்ணீரால்



தேக ஆரோக்கியத்தையும்
களங்கமற்ற மனதையும் காப்பாற்றுங்கள்

நாமெல்லோரும் நமது இஷ்டப்படி ஏதாவது ஒரு மகத்தான சக்தியை ஆராதிக்கின்றோம். ஏனென்றால், அவ்விதம் செய்வது நாம் சத்தியம் தவறாது இருக்கவும், நல்வழி நடத்தவும் உதவுகின்றது.

இவ்விதமே மூளைச் சக்தியாலும், தேக சக்தியாலும் வேலை செய்யவும், அனைவருக்கும் தங்களது ஜீவ சக்தியை போஷிக்க இந்தியத் தேயிலை உதவுகின்றது.

எப்படி ஒரு மஹத்தான சக்தியை ஆராதிக்கும்பொழுது மெய் மறந்து போகிறோமோ அதே மாதிரி இந்திய தேத் தண்ணீரை அருந்தியவுடன், மனக்கவலையும், தேகக் களைப்பும் மறைந்து விடுகின்றன.

தேத் தண்ணீர் செய்யு முறை

சுத்தமான தண்ணீரை கொதிக்க வை. ஈரமில்லாத பாத்திரமாக ஒன்று எடுத்து ஒவ்வொருவருக்கும் ஒரு டீ ஸ்பூன் வீதமும் அதிகமாக ஒரு ஸ்பூனும் நல்ல இந்தியதேயிலையை போட்டுகொதிக்கும் ஜலத்தை விடு. 5 நிமிஷம் கழித்துவடிக் கட்டி பாலையும் சர்க்கரையையும் சேர்த்துக் கொள்ளவும்.

இந்தியாவின் சந்தோஷமும், பெருமையும் - இந்திய தேயிலை

IK. 42.

Regd. No. 2514.

கீர்த்திபெற்ற தீர்க்க தரிசிகளின் சரித்திரக் கொத்து.

சென்னை ஸம்ஸ்கிருத காலேஜ் உபாத்யாயராயிருந்த கிர்த்தனசார்ய

ஸி. ஆர். ஸ்ரீநிவாஸ அய்யங்கார், பி. ஏ., எழுதியது

கீழ்க்கண்ட ஏழு மத ஸ்தாபகர்களின் திவ்ய சரித்திரங்கள் வெளியாயிருக்கின்றன. சிறுவர் சிறுமியர் முதல் எல்லோரும் படித்துணருமாறு எளிய தமிழ் நடையில் எழுதப் பட்டிருக்கின்றன. தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் அவசியம் படிக்க வேண்டிய நூல்கள்.

1. ஸ்ரீ சங்கரர்
2. ஸ்ரீ ராமாநுஜர்
3. ஸ்ரீ மத்வர்
4. ஸ்ரீ குருநானக்
5. ஸ்ரீ மகாவீரர்
6. ஸ்ரீ கௌதமபுத்தர்
7. மகமத் நபி

ஒவ்வொரு புத்தகத்தின் விலை அணா 5

7 புத்தகங்களும் ஒரே புத்தகமாக காலிகோ கிலிட் பைண்டுள்ளது. விலை ரூபா 2-8.

மானேஜர்,

"சுதேசமித்திரன்" புத்தகசாலை,

சென்னை

Printed and Published by T. S. Visvanatha Iyer B. A. at the Swadesamitran Power Press, Mount Road, Madras—Editor C. R. Srinivasan